www.padippakam.com

# தமிழ் தேசத்தின் சமூக உருவாக்கம்

## நகலும் அதன் சுருக்கமான அறிமுகமும்

குறிப்பிட்டதொரு சமூக உருவாக்கத்தை சரியாக புரிந்து கொள்வதன் மூலமே அந்த சமூகத்தில் நடைபெறும் அரசியலை புரிந்து கொள்ள முடியும். சமூக உருவாக்கத்துடன் தொடர்புடைய பல்வேறு சமூக சகதிகள், அவற்றின் குறிப்பான நலன்கள்; இந்த நலன்களை காப்பதை அல்லது முன்னெடுக்கப்படுவதை உத்தரவாதப்படுத்தும் நோக்கில் உருவான நிறுவனங்கள்; இந்த நிறுவனங்களால் குறிப்பிட்ட நலன்கள் வெளிப்படுத்தப்படும் விதங்கள்: பல்வேறு சமூக சக்திகளது நலன்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் நிறுவனங்களிடையே நடைபெறும் ஊடாட்டங்கள்; என்ற வகையில் அணுகும் போது மட்டுமே குறிப்பிட்ட அரசியலை புரிந்து கொள்வது சாத்தியப்படும்.

இந்த நோக்கிலேயே புலிகளை மதிப்பிடுவது தொடர்பான விவாதம் முன்பு சிறு பத்திரிகைகளில் நடைபெற்றது. அதன் ஓரளவு பிற்பகுதியில் நாமும் பங்கெடுத்துக் கொண்ட போதிலும் கூட அந்த விவாதமானது புலிகளை சரியாக இனங்காணத் தவறிவிட்டது. சமூக உருவாக்கம் தொடர்பான மிகவும் எளிமைப்படுத்தப்பட்ட கண்ணோட்டத்திலிருந்து விடுவித்துக் கொள்ளாமை என்பது அந்த விவாதம் முழுவதையும் அதன் இலக்கை அடைய விடாமல் தடுத்துவிட்டது. புலிகளின் அரசியலை வெறுமனே சில நபர்களது, அல்லது குழுக்களது விருப்பு வெறுப்புகளிலிருந்து பிறக்கும் தன் மனப் போக்கிலான நடவடிக்கைகளாக காணும் முயற்சியில் எழுந்த "குழு நலன்" என்ற கருத்தாக்கத்தை மீறி ஒரு சமூக சக்தியுடன் இனங்காணும் அக்கறை இதில் ஓங்கி நின்றது உண்மையே. ஆயினும் இந்த அக்கறையானது பொருளாதாரவாதத்தால் பீடிக்கப்பட்டிருந்தது. இதனால் பொருளாதாரத்தை மாத்திரம் ஒரேயொரு காரணியாக எடுத்துக் கொண்டு புலிகளை ஏதாவது ஒரு வர்க்கத்துடன் இனங்காணும் முயற்சிகள் நடைபெற்றன. இந்த முயற்சிகள் கூட தமிழ் தேசத்திலுள்ள வர்க்கங்களை சரியாக இனங்கண்டு அவற்றை புலிகளின் அரசியல் எவ்வாறு பிரதிநிதித்துவம் செய்கிறது எனக் காட்ட முனையும் புறநிலை சார்ந்த ஒரு முறைமையினூடாக (Objective Method) அல்லாமல், புலிகளிடம் சில அரசியல் பண்புகள் இருப்பதாக ஏற்கனவே எடுத்துக் கொண்டு (தேசியத்தில் உறுதியாக நிற்பது அல்லது ஊசலாடுவது) அதற்கு ஏதாவது ஒரு முத்திரை (தேசிய முதலாளி அல்லது தரகு முதலாளி) குத்தும் ஒருவித அகநிலை சார்ந்த முறைமையே (Subjective Method) கைக் கொள்ளப்பட்டது. இதனால் இந்த விவாதமானது எந்த விதமான புறநிலை சார்ந்த தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டு சரிபார்க்கப்படுவது சாத்தியப்படாமல் அவரவரது அகநிலை சார்ந்த வியாக்கியானங்களையே திரும்பத் திரும்ப ஒப்புவிப்பதாக நடைபெற்றது.

இந்த விவாதத்தில் கலந்து கொண்ட நாம் இந்த விதமான அகநிலை சார்ந்த முறைகளைக் கேள்விக் குள்ளாக்கி, விரிவான அணுகுமுறைகளை வலியுறுத்தி யிருந்தோம். புலிகள் தனியான ஒரு சமூக சக்தியாக (அதிகார வர்க்கமாக) உருப்பெறும் வாய்ப்பைப் பற்றியும், கூறியிருந்தோம். ஆயினும் நாமும் கூட சமூக உருவாக்கம் பற்றிய "எளிய துருவமயமாதல் மாதிரியை" (Bi-Polar Model)யே தொடர்ந்தும் கொண்டிருந்தோம். இதனால் எமது பார்வையின் வீச்சும் கூட, அந்த விவாதச்சூழலில் எல்லைப்படுத்தப்பட்டிருந்த ஒரு குறுகிய வட்டத்தைக் கடந்து செல்ல முடியவில்லை. இப்போதெல்லாம் நாம் சமூக உருவாக்கத்துடன் தொடர் புடைய பொருளாதாரம், அரசியல், சித்தாந்தம், கோட்பாடு, கலை, இலக்கியம் போன்றவற்றின் தனித்துவமான பண்புகள், தனித்துவமான விதிகள் பற்றி வலியுறுத்துகின்றோம். இப்படிப்பட்ட கட்டமைப்புகளின் கட்டமைப்பு குலையாத இணைப்பின் மூலம் சமூக உருவாக்கத்தைப் புரிந்து கொள்கின்றோம். எளிமையான முரண்பாடுகள் என்பதற்கு மாறாக, சிக்கலான பலதரப்பட்ட சமூக சக்திகளையும். இவற்றினிடையே காணப்படும் பலதரப்பட்ட முரண்பாடு களையும். இந்த முரண்பாடுகள் காரணமாக பல விதமான அணிச் சேர்க்கைகள் உருவாவது பற்றியும் நாம் பேச முடிகின்றது. சமூக உருவாக்கம் தொடர்பான இந்த விதமான சிக்கலான பார்வையானது (Multi-Polar Model) புலிகளை மதிப்பீடு செய்யும் எத்தனிப்பில் எந்தவிதமான சாத்தியக் கூறுகளை புதிதாக தோற்றுவிக்கிறது என பார்க்க முயல்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

இப்படிப்பட்டதோர் எத்தனிப்பானது எமது அறிவுப்பசிக்குத் தீனி போடும் வெறுமனே ஒரு கல்விசார் முயற்சி அல்ல. மாறாக, இன்று எமது போராட்டத்தில் தோன்றியுள்ள நெருக்கடிகளைக் களைந்து புரட்சிகர மாற்றைக் கட்டும் நோக்கில் மேற்கொள்ளப்படும் ஒரு அரசியல் தலையீடாகும். தமிழ் தேசத்தின் சமூக உருவாக்கம், அதிலுள்ள சமூக சக்திகள், அவற்றிடையே காணப்படும் முரண்பாடுகள், இந்த சக்திகளிடையே தோன்றும் அணிச் சேர்க்கைகள், இந்த அணிச்சேர்க்கையின் வெளிப்பாடுகள் குறிப்பிட்ட அரசியல் கோரிக்கைகளாக வெளிப்படுத்தப்படும் விதம்... போன்றவற்றை சரியாக இனங் கண்டு கொள்ளாது புரட்சிகர அரசியல் தலையீடு என்பது சாத்தியப்படமாட்டாது. அத்தோடு ஒரு புரட்சிகர தாபனத்திற்கு மிகவும் அவசியமான அரசியல் திட்டம், மூலோபாயம் போன்றவற்றையும் இப்படியானதொரு பகுப்பாய்வின்றி வரைந்து விட முடியாது. அத்துடன் எந்த மக்கட் பிரிவினரிடம் செல்லப் போகின்றோம், எப்படிப்பட்ட கோரிக்கைகளை முன் மொழிவது போன்ற அணிதிரட்டல் சார்ந்த பிரச்சனைகளிலும் சமூக உருவாக்கம் பற்றிய விரிவான புரிதலைக் கொண்டிருப்பது தீர்க்கமான அம்சமாக அமைகிறது. இதனால் இந்த முயற்சியானது எமது உயர்ந்த பட்ச அக்கறையை வேண்டிநிற்பதாகும்.

### சில கோட்பாட்டுப் பிரச்சனைகள் குறித்து.

மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் போன்றோர் குறிப்பிட்ட சமூக உருவாக்கங்களை ஆய்வு செய்யும் போது, அவற்றை சிக்கலான முழுமைகளாக எடுத்துக் கொண்டே அணுகினார்கள். ஆனால்; அல்தூசர் குறிப்பிடுவது போன்று, இவர்கள் தமது ஆய்வுகளை உள்நின்று வழி நடாத்தும் சமூக உருவாக்கம் தொடர்பான தமது தத்துவத்தை முறைப்படி வகுத்து முன் வைக்கவில்லை. இதனால், அவர்களின் வழிவந்தோர்; தமது ஆய்வுகளை முன் வைக்கும் போது சமூக உருவாக்கத்தை எளிமையான முழுமையாக எடுத்துக் கொள்ளும் தவறுக்கு இலகுவில் பலியானார்கள். சமூக உருவாக்கத்தை எளிமையான முழுமையாக எடுத்துக் கொண்டு அதன் சாரத்தை பொருளாதாரத்தில் காண நேர்ந்ததானது இரண்டாம் அகிலத்திலும், லெனினுக்கு பிந்திய மூன்றாம் அகிலத்திலும் பொருளாதாரவாதத்திற்கு காரணமாகியது. இந்த பொருளாதாரவாதமானது, சமூக உருவாக்கத்தை சிக்கலான முழுமையாக எடுத்துக் கொண்டு, அதன் பல்வேறு அம்சங்களுக்கும் உரிய முக்கியத்துவத்தைக் கொடுக்காமல், இந்த அம்சங்களை வெறுமனே பொருளா தாரத்தின்



படிப்பகம்

www.padippakam.com

பிரதிபலிப்புகளாக கருதத்தலைப்படுகின்றன. இந்த விதமான குறுகிய புரிதல் பல சிக்கலான சமூகப் பிரச்சனைகளை விளக்கும் ஆற்றலை மார்க்சியம் இழந்துவிடக் காரணமாகியது. இதற்கு மேல் மார்க்சியமாவது வரட்டுச் சூத்திரமாகக் குறுக்கப்பட்டு விடுகிறது. எமது கோட்பாட்டு முயற்சிகள் இந்த விதமான குறுக்கல் வாதங்களுக்கு இலக்காகிவிடக் கூடாது எனின் முதலில் நாம் சில முக்கியமான கோட்பாட்டுப் பிரச்சனைகளை பேசியாக வேண்டியுள்ளது.

## அடித்தளம் - மேற்கட்டுமானம், மற்றும் பிரதிபலிப்புக் கோட்பாடு பற்றி. . . .

உருவகங்களும் உவமைகளும் எவற்றை விளக்கப் பயன்படுகின்றனவோ அவற்றுடன் ஒரு சில அம்சங்களில் மட்டுமே ஒத்தவையாகும். இந்த வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் இவற்றைப் பயன்படுத்தும் போது நாம் எடுத்துக் கொண்ட விடயத்தை சிறப்பாக புரிந்து கொள்ள இவை உதவியாக இருக்கும். ஆனால் இதன் செல்லுபடியாகத்தக்க எல்லைக்கு அப்பாலும் இந்த உருவகங்கள், உவமைகள் விரித்துச் செல்லப்படுகையில் இவை எம்மை தவறாக வழி நடாத்தி விடக் கூடியவையாகும். "அடித்தளம் - மேற்கட்டு மானம்" என்ற உருவகமும் இதன் செல்லுபடியாகத் தக்க எல்லைக்கு அப்பால் நீட்டப்பட்டு மிகவும் கொச்சைப் படுத்தப்பட்டுள்ளன. எனவே இந்த உருவகத்தை நாம் மிகவும் எச்சரிக்கையாகவே அணுக வேண்டியுள்ளது.

"அடித்தளம் - மேற்கட்டுமானம்", "பிரதிபலிப்பு" போன்ற உருவகங்களை, ஆயிரக்கணக்கான வருடங்களைக் கொண்ட ஒரு நீண்ட தத்துவமரபில், அதற்கேயுரிய இடத்தில் வைத்துப் பார்த்தால் தான் நாம் இவற்றின் சரியான விளக்கத்தையும், முக்கியத்துவத்தையும் புரிந்து கொள்ள முடியும். உண்மை என்பது அடையப்படக் கூடியதா இல்லையா? என்பதில் எதிரும் புதிருமாக நின்று பல காலமாக மோதிவந்த ஒரு தத்துவ மரபில், புற உலகிற்கும் எமது சிந்தனைக்கும் இடையிலுள்ள உறவைக் குறிக்க "பிரதிபலிப்பு" என்ற உருவகம் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. அவ்வாறே சமூக இயக்கத்தை எவ்வாறு புரிந்து கொள்வது என்பதன் பேரில் நடைபெற்ற ஒரு நீண்ட விவாதப் போக்கில் பொருளாதாரத்தின் மிகவும் முக்கியத் துவமான பாத்திரத்தைச் சுட்டுவதற்காகவே "அடித்தளம்" என்ற உருவகம் எடுத்துக் கொள்ளப்படுகிறது. இப்படியான ஒரு நீண்ட தத்துவ ஓட்டத்தில் இந்த உருவகங்கள் முன் வைக்கப்பட்ட குறிப்பான நிலைமைகளை மறந்து விட்டு, இந்த உருவகங்களையே அடிப்படையான உண்மைகளாக எடுத்துக் கொள்ளப்பட்டு, இவற்றை தமது ஆய்விற்கான தொடங்கு புள்ளியாக கொள்ளத் தலைப்படுகையில் தான் பிரச்சனைகள் எழுகின்றன.

எமது ஆய்வில் நாம் அடித்தளம் - மேற்கட்டுமானம் என்ற உருவகத்தைப் பயன்படுத்துவதை தவிர்க்கவே முனைகிறோம். இதற்கான காரணங்கள் வருமாறு,

அ) இந்த உருவகமானது எமது சூழலில் மிகவும் கொச்சைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் இது எமது ஆய்வு களை தவறாக வழிநடாத்துவனவாக உள்ளன. நடப்பிலுள்ள விளக்கத்தின் படி, **'அடித்தளமான'** பொருளாதாரமானது **நேரடியாக,** அப்படியே **'மேற்கட்டுமானத்தைச்'** சேர்ந்த அரசியல், சித்தாந்தம், கலை, இலக்கியம் போன்ற அனைத்தையும் நிர்ணயிப்பதாக கருதப்படுகின்றது. மேற்கட்டுமானது , அடித்தளத்தை வெறுமனே, **"பிரதிபலிப்பதா"** கவும் ஒரு விளக்கம் பரவலாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்த விளக்கத்தின் படி மேற்கட்டுமானத்தை சேர்ந்த அரசியல், சித்தாந்தம், கலை - இலக்கியம் தமக்கென சுயாதீனத்தை, தனித்துவமான பண்புகளைக் கொண்டிருப்பதும், அவையும் தம் பங்கிற்கு பொருளாதாரத்தின் மீது தாக்கம் நிகழ்த்துவதற்கான சாத்தியக்கூறுகளும் மறுக்கப்படுகின்றன.

ஆ) அடித்தளம் / மேற்கட்டுமானம் என்ற வரையறை யானது மிகவும் கறாரானதல்ல. அதாவது, சமூகத்திலுள்ள எல்லா அம்சங்களையும் இந்த வகையில் வரையறுத்துவிட முடிவதில்லை. ஒவ்வொரு அம்சமுமே அடித்தளம் அல்லது மேற்கட்டுமானம் என்ற ஏதாவது ஒன்றினுள் கட்டாயமாக உள்ளடங்கியே தீரும் என வகைப்படுத்தி விட முடிவதில்லை. எல்லாவற்றையும் சில குறுகிய சூத்திரங்களுக்குள் அடக்கி விட முனைவதாக கேலி செய்யப்பட்ட ஸ்டாலினாலேயே மொழியானது அடித்தளம் - மேற்கட்டுமானம் என்ற வரை யறைக்குள் அடக்கப்படக் கூடியதல்ல என்று ஒத்துக் கொள்ளப்பட வேண்டியதாயிற்று. இவ்வாறே இன்னும் பல அம்சங்கள் அடித்தளம் - மேற்கட்டுமானம் என்ற எல்லையை ஊடுருவி இந்த இரண்டு அரங்குகளிலும் செயற்படக் கூடியவையாகும். கிராம்சியின் **"சிவில் சமூகம்"** என்ற கருத்தாக்கமானது இப்படியாக இரண்டு அரங்குகளையும் ஊடுருவி நிற்பதாகும். சாதியம், பால்வாதம் என்பவை இப்படிப்பட்டவையாகும்.

இ) பொதுவில் பொருள்வகை - சித்தாந்தம் என்ற பாகுபாடும் கூட இப்போது கேள்விக்குள்ளாக்கப்படுகின்றன. எந்தவொரு உற்பத்தி முறையும் நிலைத்து நிற்க வேண்டுமாயின் அது தன்னை மறு உற்பத்தி செய்தாக வேண்டியுள்ளது. இந்த மறு உற்பத்தி என்பது வெறுமனே உற்பத்திச் சக்திகளை மாத்திரமன்றி உற்பத்தி உறவுகளையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. உற்பத்தி உறவுகளை மறு உற்பத்தி செய்வது என்பது ஒரு திட்டவட்டமான சித்தாந்த செயற்பாட்டுடன் தொடர் புடையதாக அமைந்து விடுகின்றது. இதனால் எந்தவொரு உற்பத்தி முறையும் கூட தன்னிலிருந்து பிரிக்க முடியாதவாறு ஒரு சித்தாந்த அமைப்பைத் தாம் கொண்டிருந்தால் மட்டுமே நிலைத்து நிற்க்க முடிகிறது. அத்தோடு, இப்போது சித்தாந்தத்தின் பொருள் வகை தன்மை குறித்தும் பேசப்படுகிறது. இதன்படி சித்தாந்தங்கள் என்பவை வெறுமனே கருத்துக்கள், நம்பிக்கைகள், விழுமியங்கள் ஆகியவற்றின் தொகுப்பாக மாத்திரமன்றி இவை தம்மிலிருந்து பிரிக்க முடியாதவாறு சில சடங்குகள், நிறுவனங்களையும் இணைத்துக் கொண்டுள்ளன. இவ்வாறே "கருத்துக்கள் மக்களைப் பற்றிக் கொண்டால் சக்தியாக உருவெடுக்கும்" என்றார் மார்க்ஸ் மேலும், ஒருவரது சித்தாந்தமானது அவரது செயற்பரப்பின் வீச்சத்தை வரையறுப்பதாகவும் உள்ளது. இன்னும் சித்தாந்த செயற்பாட்டிற்கான நிறுவனங்களாகக் கருதப்படும் குடும்பம், பாடசாலை போன்றவை தம்முடைய செயற்பாட்டில் ஏதாவது ஒரு கட்டத்தில் வன்முறையை பயன்படுத்திக் கொள்வதையும், முற்றிலும் வன்முறை சார்ந்த அமைப்புகளாக கருதப்படும் போலீஸ் போன்றவையும் தமது செயற்பாடுகளில் சித்தாந்த அம்சங்களையும் (வீதி ஒழுங்கு, சட்டம் - ஒழுங்கு பேணல் என்ற விதத்தில்) கொண்டிருப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இதனால் சமூக உருவாக்கத்தின் கூறுகளை பொருள் வகை அம்சங்கள் இவை, சித்தாந்த அம்சங்கள் இவை என்று கறாராக வரையறுப்பதிலும் பிரச்சனைகள் இருக்கின்றன. இதனால் இந்த கூறுகளை தனியான கட்டமைப்புகளாக (Structures) கொள்வதே பொருத்தமானது எனக் கருதுகின்றோம்.

ஈ) சமூக உருவாக்கத்தின் கூறுகளாக உள்ள பல்வேறு கட்டமைப்புகளின் பொருள்வகை அம்சங்களும் சித்தாந்த அம்சங்களும் மிகவும் சிக்கலான உறவில் காணப்படுகின்றன. சாதியத்தை எடுத்துக்கொண்டால் இது ஒரு வகை வேலைப் பிரிவினையாக அமைகிறது. இந்த வகையில் இதனை ஒருவித உற்பத்தி உறவாகவும் பார்க்கலாம். அதே வேளை சாதியமானது ஒரு பலமான சித்தாந்தத்தையும் கொண்டிருப் பதனால், அதனை



படிப்பகம்

www.padippakam.com

ஒருவிதமான சித்தாந்தமாகவும் பார்க்கலாம். பொருளாதாரவாதிகள் சாதியத்தை ஒரு உற்பத்தி உறவாக சித்தரிப்பதில் மிகவும் அக்கறைப் படுகின்றார்கள். முதலாளித்துவத்திற்கு முந்திய உற்பத்தி உறவு அல்லது நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவு என குறிப்பிடுகின்றார்கள்.

இப்படியாக சாதியத்தை ஒரு உற்பத்தி உறவாக குறுக்கிவிடுவதானது சாதியத்தின் குறிப்பான பண்புகளை விளக்க உதவமாட்டாது. என்பதுடன் தென்னாசியாவில் நிலவிவந்த உற்பத்தி முறைமையை நிலப்பிரபுத்துவம் என்பதோ, பொதுவில் முதலாளித்துவத்திற்கு முந்திய உற்பத்தி முறை என்பதோ இன்று பெரிதும் சர்ச்சைக்குரியதாக உள்ளது. எனவே சாதியத்தை வெறுமனே ஒரு உற்பத்தி முறையினுள் அடக்கி விடாமல் இருப்பதே சாதியம் பற்றிய சரியான ஆய்விற்கு இடையூறுகளை முற்கூட்டியே உருவாக்கிவிடாமல் தடுக்க உதவும் என கருதுகிறோம். ஏதாவது ஒரு நிலைமையில் சாதியத்தை உற்பத்தி மட்டத்தில் வரையறுத்தாக வேண்டிய நிற்பந்தங்கள் எழுந்தால் மட்டும், தற்போதைக்கு சாதிய உற்பத்தி முறை எனக் குறிப்பிடலாம் எனக் கருதுகின்றோம்.

இவ்வாறே பால்வாதத்தை (Sexism) பலரும் ஒருவகை சித்தாந்தமாக வரையறுப்பர். ஆனால் குடும்பம் என்ற நிறுவனத்துள் பால்வாதமானது ஒரு குறிப்பிட்ட விதத்தில் அமைந்த திட்டவட்டமான வேலைப் பிரிவினையையும் குறிக்கிறது. இந்த விதமான வேலைப் பிரிவினையை சில பெண்ணியவாதிகள் **ஆணாதிக்க உற்பத்தி** முறை (Patriachial mode of Production) எனவும் வரையறுப்பர். பால்வாதத்தை வெறுமனே சித்தாந்தமாக எடுத்துக் கொள்வதும், அத்துடன் சித்தாந்தத்தை பொதுவில் வெறும் பிரதிபலிப்பாகக் கொள்வதும் மரபார்ந்த மார்க்சியவாதிகள் பெண்ணிலைவாதம் தொடர்பாக இழைத்த பல தவறுகளுக்கு காரணமாகியது.

உ) எந்தவொரு கட்டமைப்பிலும் உள்ள பொருள் வகை கூறுகளினதும் சித்தாந்தக் கூறுகளினதும் சேர்ப்புத் தன்மை என்பது எப்போதும் மாறாதிருப்பதுமல்ல. வரலாற்றுப் போக்கில் பொருளாதாரம், அரசியல், சித்தாந்தம் போன்றவற்றில் ஏற்படும் பொதுவான வளர்ச்சிக்கு ஏற்ப குறிப்பிட்ட ஒரு கட்டமைப்பினுள் காணப்படும் பொருளாதார, சித்தாந்த அம்சங்களின் சேர்ப்புத் தன்மையிலும் மாற்றம் ஏற்படும். இதனால் அக் கட்டமைப்பு சில நெகிழ்சித் தன்மைகளைக் காட்டும். ஆனால் இந்த நெகிழ்ச்சிகளினூடாக, அது அழிந்து போகாமல் தன்னை புதிய நிலைமைகளுக்கேற்ப தகவமைத்துக் கொள்கிறது. உதாரணமாக, சாதியத்தை எடுத்துக் கொண்டால், குறிப்பிட்ட சமூகத்திலுள்ள பொருளாதார தளத்தில், முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் தீவிரமாக வளர்ச்சி பெறும் போது, சாதியத்தின் உற்பத்தி உறவுகள் பலவீனமடையும், அல்லது இல்லாதொழியும். ஆனால் இந்த பொருளாதார மாற்றமானது தன்னளவில் சாதியத்தை ஒழித்துவிடுவதில்லை. மாறாக, சாதியக் கட்டமைப்பிலுள்ள பொருள் வகை அம்சம் பலவீனப்பட சித்தாந்த அம்சங்கள் வேறு பண்பைப் பெறுகின்றன. இதனால் சாதியமானது முற்றிலும் ஒழிந்துவிடாமல், புதிய நிலமை களுக்கு ஏற்ப தன்னை தகவமைத்துக் கொள்கிறது. அரசியல் தளத்தில் சாதிய உணர்வுகள் பலப்படுத்தப்படுகின்றன.

இவ்வாறே முதலாளித்துவமும், சோசலிசமும் கூட தம்மளவில் பால்வாதத்தை ஒழித்துவிடமாட்டாது. பால் வாதமும் ஒரு நிலையில் தன்னை புதிய நிலமைகளுக்கு ஏற்ப சரி செய்து கொள்ளும். இதனால் சாதியம், பால்வாதம் போன்ற ஒடுக்கு முறைகளைக் களைய வேண்டும் என விரும்பினால் இவற்றை தனியான கட்டமைப்புகளாக எடுத்துக் கொண்டு அவற்றுக்கு எதிராக தனித்துவமாகவும் அத்தோடு பொதுவான சமூக மாற்றத்துடனும் இணைந்தும் போராடுவது அவசியமானது. எந்தவொரு கட்டமைப்பிலும், பொருள்வகை, சித்தாந்தவகை அம்சங்களை இனங்காண்பதுடன் அவற்றின் சேர்கை தன்மையும் வரலாற்றுப் போக்கில் மாறிவருவதை குறித்துக் கொள்வது இந்த இடத்தில் போதுமானதாகும்.

## 2. சமூக உருவாக்கத்தை சிக்கலான முழுமையாக கோட்பாட்டாக்கம் செய்வது குறித்து.

மூன்றாம் அகிலத்தின் காலத்தில் நிலவிவந்த, சமூக உருவாக்கம் பற்றிய மிகவும் குறுக்கப்பட்ட பார்வைக்கு மாறாக, கிராம்சி தனது "சிறைக் குறிப்புகளில்", சமூக உருவாக்கத்தை சிக்கலானதாக எடுத்துக் கொண்டு தனது ஆய்வுகளை முன்வைத்துச் செல்கின்றார். அரசியல், சித்தாந்தம் என்பவற்றின் தனித்துவமான பண்புகளையும், சுயாதீனமாக செயற்படும் வாய்ப்புகளையும் கவனத்தில் கொள்ளும் கிராம்சி, இவற்றின் சேர்க்கையால் உண்டாகும் சமூக உருவாக்கத்தை சிக்கலான முழுமையாகவே எதிர் கொள்கின்றார். சிக்கலான சமூக உருவாக்கத்தின் கூறுகளான பொருளாதாரம், அரசியல், சித்தாந்தம் போன்றவை அரங்கிற்கு கொண்டு வரும் பலதரப்பட்ட சமூக சக்திகள் இணைந்து செயற்படும் வாய்புகளையும் கவனத்தில் கொள்கின்றார். இதனால் குறிப்பிட்ட வரலாற்று நிலைமைகளில் உருவாகக் கூடிய இணைவை குறிக்கும் வகையில் "கூட்டு" (Block) எனும் பதத்தைப் பயன்படுத்துகின்றார். வரலாற்றுக் கூட்டு, சித்தாந்தக் கூட்டு, சமூக - அரசியல் கூட்டு, ஆளும் கூட்டு, புரட்சிகர கூட்டு போன்ற பல பதங்களை இந்த அர்த்தத்தில் கையாள்கின்றார்.

கிராம்சியின் இந்தக் கண்டு பிடிப்புகள் மார்க்சியத்தின் வளர்ச்சிப் போக்கில் மகத்தான முக்கியத்துவமுடையவை. அவரது "சிறைக்குறிப்புகளில்" உள்ள முக்கிய பிரச்சனைகள் யாதெனில், அவரது முக்கியமான கண்டுபிடிப்புகள் இந்த எழுத்துக்களில் முறையான கோட்பாட்டாக்கம் செய்யப் படாமையாகும். அதாவது, இவரது சமூக, வரலாற்று ஆய்வுகள் முழுவதிலும் இந்த அணுகுமுறைகள் செயற்படும் வடிவில் (Practical State) இருக்கின்றனவேயொழிய, அவை முறையான கோட்பாட்டாக்கம் செய்யப்பட்டு சமூக உருவாக்கம் பற்றிய திட்டவட்டமான கோட்பாடுகளாக ஒழுங்கமைக்கப்பட்டு முன் வைக்கப்படவில்லை.

அல்துாசரின் எழுத்துக்களில் சிக்கலான சமூக உருவாக்கம் என்பது ஓரளவு முறைப்படி கோட்பாட்டாக்கம் செய்யப்படுகிறது. இவர் பொருளாதாரம், அரசியல், கோட்பாடு, சித்தாந்தம், கலை, இலக்கியம், என்பவற்றை தனியான பண்புகளையுடைய, சார்பளவில் சுயாதீனமுள்ள கட்டமைப் புகளாக எடுத்துக் கொள்கின்றார். இந்தக் கட்டமைப்புகளது, கட்டமைப்பு குலையாத இணைவினால் உருவாகும் சமூக உருவாக்கம் என்பது சிக்கலானதாக கொள்ளப்படுகின்றது. இந்தக் கட்டமைப்புகள் ஒன்றன் மீது மற்றொன்றும், இவை ஒட்டு மொத்தமாக சமூக உருவாக்கத்திலும், சமூக உருவாக்கம் தன் பங்கிற்கு இக் கட்டமைப்புகள் மீதும் தாக்கங்கள் நிகழ்த்தும் தாக்கங்கள் காரணமாக உருவாகும் சமூக சக்திகளும் சிக்கலானவையாகவே இருக்கின்றன.

அல்துாசரின் வழியில் தொடர்ந்து செல்லும்



படிப்பகம்

பௌலன்தாஸ், ஒரு பிராந்தியக் கட்டமைப்பான அரசியலை இன்னும் விரிவாக ஆய்வு செய்கின்றார். பொருளாதாரம், அரசியல், சித்தாந்தங்கள் போன்ற கட்டமைப்புக்களின் சார்பளவிலான சுயாதீனத்தை வலியுறுத்தும் இவர், வெவ்வேறு சக்திகள் இந்த தளங்களில் மேலாதிக்கம் செலுத்தும் சக்திகளாக வரக்கூடிய வாய்ப்புக்களையும் குறிப்பிடுகின்றார். பொருளாதாரத்துறையில் ஒரு குறிப்பிட்ட பிரிவினரும், அரசியலில் இன்னோர் பிரிவினரும், சித்தாந்த துறையில் மற்றோர் பிரிவினரும், ஆதிக்க சக்திகளாக வரும் வாய்ப் பினையும், இந்த ஆதிக்க சக்திகளின் இணைவில் **'ஆளும் கூட்டு'** உருவாவதையும், இந்த சக்திகள் இணைந்து ஒரு கூட்டாக செயற்படும் பொறிமுறைகள் பற்றியும் விரிவாக பேசுகின்றார்.

கிராம்சி, அல்தூசர், பௌலன்தாஸ் போன்றோர் பாய்ச்சிய புதிய வெளிச்சங்கள், இன்னும் பலரை பல்வேறு பிரச்சனைகளையும் புதிய கோணங்களில் அணுகுவதற்கான உந்துதலைக் கொடுக்கிறது. பொருளாதாரத் தளத்தில் சில குறிப்பிடத்தக்க அணுகுமுறைகள் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன.

ஸ்டாலினின் மறைவிற்குப் பின்பு ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் சோவியத் - சீன பிளவு போன்றவற்றை அடுத்து சோவியத் மேற்கொண்ட சீர்திருத்தப் பாதையை விமர்சித்த மாவோயிஸ்டுக்கள் சோவியத் முதலாளித்துவ பாதைக்கு திரும்பி விட்டதாக கூறி அதனை சமூக ஏகாதிபத்தியம் என அழைத்தனர். ஆனால் சோவியத் ஆதரவாளர்களோ, அங்கு தனிச் சொத்துடைமை நிலவாமை, வேலையற்றோர் இன்மை, போன்ற சில விடயங்களை சுட்டிக் காட்டி சோவியத்தில் முதலாளித்துவம் நிலவவில்லை எனவும், எனவே அங்கு நிலவியது சோசலிசமே எனவும், வாதிட்டு வந்துள்ளனர். மரபார்ந்த மார்க்சியமானது இந்தப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியாதிருந்தது. இவ்வாறே, "வளர்ச்சியடைந்த" முதலாளித்துவ நாடுகளில் மார்க்ஸ் எதிர்பார்த்தது போல, வர்க்கத் துருவமயப்படுவது தீவிரமாக நடைபெறாமல், புதிய "மத்தியதர வர்க்கம்" ஒன்று பெரிதாக வளர்ந்து வந்ததுடன், இந்த வர்க்கத்தின் நிலையை எவ்வாறு விளக்குவது என்பதில் பலவாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்து வந்தன.

மேலே கூறப்பட்ட பிரச்சனைகளை விளக்கும் நோக்கில் **"சொத்துடைமை"** என்பது மறுவரையறை செய்யப்படுகிறது. தரிசாக கிடக்கும் பெரிய நிலமும், பெட்டியுள் முடக்கப்பட்டுள்ள பெருந்தொகைப் பணமும், தம்மளவில் வருமானங்களை அதன் உடைமையாளருக்கு கொண்டு வந்து விடுவதில்லை. எப்போது இவை ஒரு குறிப்பிட்ட விதத்திலமைந்த உற்பத்தியுடன் தொடர்புபட்டுச் செயல்படுகின்றதோ, அப்போது தான் இவற்றை உடமையாகக் கொண்டிருப்பவருக்கு இவை, சமூக உபரியிலிருந்து ஒரு பங்கை இவர் பெற்றுக் கொள்ள உதவுகிறது. இந்த அர்த்தத்தில் தான் இவை சொத்துக்கலாக செயற்பட்டு சமூக உபரியில் ஒரு பங்கை அவர் பெற்றுக் கொள்ளவும், அவ்வாறு உபரிப் பங்கை அவர் பெறும் நிலையை தொடர்ந்து பேணிவரவும், இந்த நிலையை தனது சந்ததியினருக்கு கைமாற்றிக் கொடுக்கவும் உதவுகின்றன.

நவீன சமூகத்தில் வேறு ஏதேனும் ஒரு அம்சமானது, அதனை உடமையாகக் கொண்டிருப்பவருக்கு சமூக உபரியின் ஒரு பங்கைப் பெற, அவ்வாறு பெறும் நிலையை தொடர்ந்து பேண, இந்த நிலைமையை தனது சந்ததிகளுக்கும் கையளிக்க உதவுமானால், அவற்றையும் சொத்துகளாகவே கருத வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது. இந்த விதத்தில் அறிவு அல்லது திறன், அதிகாரம் அல்லது அமைப்பு என்பவையும் சொத்துகளாக செயற்படுவதை விளக்கு கின்றனர். தொழில்நுட்ப அறிவு அல்லது திறன் என்பது சமூகத்தில் அசமத்துவமாக விநியோகிக்கப்படுவதும், இவ் விநியோகத்திலுள்ள ஏற்றத் தாழ்வின் அடிப்படையில் சுரண்டல் நிலவுவதையும் விளக்குகின்றனர். விஞ்ஞானிகள், தொழில்நுட்ப நிபுணர்கள் போன்றோர் இந்த விதமான சொத்தைப் பெருமளவில் கொண்டிருப்பதால், அறிவு தொழில்நுட்பம் என்பன முறைப்படியான கல்வியினூடாக பெறப்படும் நிலையில், பொதுவில் கல்வி, பட்டங்கள் என்பன இந்த சொத்தின் வெளிப்பாடுகளாகும்.

நவீன உற்பத்தி முறையானது அதனைக் கண்காணிப்பது கட்டுப்படுத்துவது போன்ற விடயங்களைப் பொருத்த வரையில் ஒரு திட்டவட்டமான அமைப்பு வடிவம், அதிகாரப் படிநிலை என்பவற்றைக் கொண்டுள்ளது. இதில் மேல் நிலையில் இருப்போர் தமக்குக் கீழுள்ளவர்களை கட்டுப் படுத்தி, கண்காணித்து உற்பத்தி திறம்பட நடைபெறுவதை செய்து முடிக்கின்றனர். இதற்குப் பதிலாக இவர்கள் சமூக உபரியிலிருந்து ஒரு பங்கைப் பெற்றுக்கொள்கின்றனர். இதனால் அமைப்பு என்பதும் ஒருவித சொத்து போல செயற்படுகின்றது.

சொத்துடைமை பற்றிய இந்தவிதமான புரிதலுடன் சோவியத் யூனியனில் நிலவிய சமூக அமைப்பை பரிசீலனை செய்யும் சார்ள்ஸ் பெத்தல்ஹீம், சோவியத்யூனியனில் தனிச்சொத்துடைமை ஒழிக்கப்பட்டுவிட்ட போதிலும் அங்கு **'கல்வி'**, அமைப்புச் சொத்துக்களின் அடிப்படையில் சுரண்டல் நடைபெறுவதையும் விளக்குகின்றார். அரசு, கட்சி, தொழிற்சாலை நிர்வாகிகளும், பொருளாதார, தொழில்நுட்ப, இராணுவ நிபுணர்களும் தம்மிடம் முறையேயுள்ள அமைப்பு, கல்விச் சொத்துக் காரணமாக சமூக உபரியை அபகரிப்பதும், இதன் மூலமாக சுரண்டல் தொடரப்படுவதையும் விளக்கு கின்றார். இந்த விளக்கமானது சமூக ஏகாதிபத்தியம் - எதிர் - சோசலிசம் என்ற வரையறுப்புக்களைக் கடந்து புரட்சிக்குப் பிந்திய சமுதாயங்களில் காணப்பட்ட உண்மையான நிலைமைகளை விளக்கியது. அதாவது அங்கு சோசலிசம் நிலவவில்லை, அதற்காக அங்கு நிலவுவது முதலாளித்துவ மாகாது எனவும், அரசு, கட்சி என்பவை அதிகாரமயப் பட்டிருப்பதன் விளைவாக அவை மக்களின் நலன்களில் அக்கறையற்று முழுச் சமூகத்தையும் தேக்க நிலைக்கு இட்டுச் சென்றதையும் விளக்கினார்.

நவீன முதலாளித்துவத்திலுள்ள நிபுணர்களும் நிர்வாகிகளும் நேரடியாக மூலதனத்தில் பங்குடையவர்கள் அல்ல. அத்தோடு தமது உழைப்புச் சக்தியை மூலதனத்திற்கு விற்பவர்கள் என்பதால் மூலதனத்துடனான உறவில் இவர்கள் தொழிலாளிகளை ஒத்த நிலையில் உள்ளனர். ஆயினும் சமூக உபரியில் ஒரு பங்கைப் பெறும் இவர்கள் தொழிலாளரை சுரண்டுவதற்கு மூலதனத்திற்கு உதவுவதன் மூலம் முதலாளிகள் போலவும் நடந்து கொள்கிறார்கள். மரபான அர்த்தத்தில் இவர்களிடத்தில் சொத்துக்கள் இல்லாத போதிலும் கல்வி, அமைப்புச் சொத்துகளை உடமையாக கொண்டுள்ளதனால் இவர்கள் சமூக உபரியில் பங்கைப் பெற முடிகிறது. இந்த விதமான அணுகுமுறையானது நவீன முதலாளித்துவத்தில் வளர்ந்து வரும் பெரியளவிலான "நடுத்தர வர்க்கம்" பற்றிய பிரச்சினையை விளங்கிக் கொள்ள உதவியது. Erick Elin Wright என்பவரது ஆய்வுகள் இந்த வகையில் குறிப்பிடத்தக்கவையாகும்.

## தமிழ் தேசத்தின் சமூக உருவாக்கத்திலுள்ள முக்கியமான அம்சங்கள்

தமிழ் தேசத்தின் சமூக உருவாக்கத்தைப் புரிந்து கொள்வதற்கு முதலில் அதனை ஒரு சிக்கலான முழுமையாக விளங்கிக் கொள்ள வேண்டும். பொருளாதாரம், அரசியல், சாதியம், பால்வாதம், மதம், கலை, இலக்கியம். . . . போன்ற



படிப்பகம்

பல்வேறு கட்டமைப்புகளின் கட்டமைப்புக் குலையாத இணைவில் உருவாகும் தமிழ் தேசம் எனும் சமூக உருவாக்கமும் தனக்கேயுரிய தனித்துவமான பண்புகளை உடைய ஒரு கட்டமைப்பாகும். பிராந்தியக் கட்டமைப்புகள் தமக்குள் பரஸ்பரம் தாக்கம் நிகழ்த்துவதுடன் முழுமையிலும் தாக்கம் நிகழ்த்துகின்றன. முழுமையும் தன் பங்கிற்கு பிராந்திய கட்டமைப்புக்களின் மீது தாக்கம் நிகழ்த்துகின்றது. தேசிய ஒடுக்குமுறை என்பது முழுமையின் மீது புறத்திலிருந்து கொடுக்கப்படும் ஒரு தாக்குதலாகும். இந்த தாக்கமானது முழுமையினால் பிராந்திய கட்டமைப்புகளிலும் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. மறுதலையாக பிராந்திய கட்டமைப்புகளில் ஏற்படும் பல்வேறு மாற்றங்களும் முழுமையிலும், அது புறத்தே இருந்து தன்மீது கொடுக்கப்படும் தாக்குதலை முகம் கொடுப்பதிலும் தாக்கத்தை நிகழ்த்துகின்றன. எனவே எமது சமூகத்திலுள்ள பல்வேறு கட்டமைப்புகளினதும் இன்றைய வளர்ச்சி நிலையை புரிந்து கொள்வதாயின், அவற்றை தேசிய ஒடுக்குமுறையுடன் தொடர்புபடுத்தியே புரிந்து கொள்ள முடியும். அவ்வாறே தேசிய விடுதலைப் போராட்டத்தின் குறிப்பான பண்புகளை சரிவரப் புரிந்து கொள்வதாயின் அது பல்வேறு பிராந்திய கட்டமைப்புகளுடன் தொடர்புபடுத்தப் பட்டே சிறப்பாக புரிந்து கொள்ளப்பட முடியும்.

தமிழ் தேசத்தின் குறிப்பான பண்புகளை புரிந்து கொள்வதில் அதிலுள்ள பின்வரும் கட்டமைப்புகள் குறிப்பான முக்கியத்துவம் உடையவை. அவையாவன,

1) யாழ் மையவாதம்....
2) சாதியம்.......
3) சைவ சித்தாந்தம்.....
4) பால்வாதம்.....
5) பொருளாதாரம்.....

இந்த கட்டமைப்புகள் குறித்து விரிவான புரிதலைப் பெறுவதும், இவற்றுடன் தமிழ் தேசத்தின் அரசியலை தொடர்புபடுத்திப் பார்ப்பதுமே எமது தேசத்தின் அரசியலைப் புரிந்து கொள்வதற்கான சரியான வழியாகும்.

### யாழ்மையவாதம்.

தமிழ் தேசமானது தனித்துவமான வரலாற்றையும், தனித்துவமான பண்புகளையும், தனியான பிரதேசங்களையும், வேறுபட்ட சமூக பொருளாதார நிலைமைகளையும் கொண்ட மூன்று மக்கற் பிரிவினர் இணைவதால் உருவாவதாகும். யாழ்ப்பாண, வன்னி, கிழக்கு மக்களே இந்த மூன்று பிரிவினருமாவர். தமிழ் தேசத்தை உருவாக்கும் இந்த மக்களிடையே பிரதேச அடிப்படையில் ஏற்றத்தாழ்வுகளைக் கற்பிக்கும் பிரதேசவாத உணர்வுகள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தை ஏனைய பிரதேசங்களை விட உயர்வாக கருதுவதுடன் நில்லாது, தமிழ் தேசத்தின் நலன்கள், பிரச்சனைகள் என்பவற்றை வரையறுக்கும் போதும் யாழ்ப்பாணத்தவர்களது நலன்களையே தமிழ் தேசத்தின் நலன்களாக வரையறுக்க முனையும் இந்தப் போக்கை யாழ் மையவாதம் எனலாம்.

யாழ்ப்பாணத்தின் வரலாறானது யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றால் குறிக்கப்படுவது போன்றே, வன்னிக்கென தனியான வரலாறு உள்ளது. அவ்வாறே கிழக்கு மக்கள் கண்டிய இராச்சியத்தின் கீழ் வாழ்ந்தவர்கள் என்ற வகையில் தமக்கென ஒரு தனியான வரலாற்றைக் கொண்டுள்ளார்கள். யாழ் மையவாதமானது தமிழ் தேசத்தை உருவாக்கும் பல்வேறு மக்களது தனித்துவமான வரலாறுகள் எதனையும் கருத்தில் கொள்ளாது, தமிழ் தேசத்தின் வரலாற்றை யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாறாக குறுக்கிவிடுகிறது.

சமூக, பொருளாதார நிலைமைகளிலும் இந்த பிரிவினரிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. யாழ்பாணம் சனச் செறிவு மிகவும் கூடியது. மிகவும் வரண்ட, குறுகிய துண்டு நிலங்களில் வர்த்தக பயிர்ச் செய்கை பிரதானமாகவுள்ளது. இறுக்கமான சாதிய முறையை அடிப்படையாகக் கொண்டது. கிழக்கின் சனச்செறிவு ஐதானது, கிழக்கு நீர்வளம் மிக்கது, பெருமளவு வயற்காணிகளைக் கொண்ட போடிமார், விவசாயிகளிடையே ஒருவித "நிலப்பிரபுத்துவ" உறவு முறை காணப்படுகிறது. பிழைப்பிற்கான பயிர் செய்கை இங்கு நடை பெறுகிறது. சாதிய முறை காணப்பட்டாலும் யாழ்ப்பாணம் போன்று இறுக்கமானதல்ல. யாழ்ப்பாணத்தில் மரபார்ந்த சட்டமாக ஏற்றுக்கொள்ளப்படும் தேசவழமைச் சட்டமானது, வன்னி, கிழக்குப் பிராந்திய மரபார்ந்த சட்டங்களிலும் வேறுபட்டது. குறிப்பாக மட்டக்களப்பில் முக்குவச் சட்டம் போன்றவை வழக்கிலுள்ளன.

கலாச்சார ரீதியிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. மட்டக்களப்பின் பேச்சு வழக்கு யாழ்ப்பாணத்தை விட வேறுபட்டதாகும். யாழ்ப்பாணத்தவர் இதனை இழிவாகக் கருதுவர். யாழ்ப்பாணத்து மக்கள் நீண்டகாலமாக யாழ்ப்பாண இராச்சியம் என்றதோர் தனியான அரசை தமக்கெனக் கொண்டிருந்தவர்கள் என்ற வகையில் வளமான புலமைத்துவ மரபொன்றையும், வளர்ந்த கலாச்சார நடைமுறைகளையும் கொண்டுள்ளார்கள். கிழக்கு மக்களிடம் வளமான கூத்து மரபொன்று காணப்படுகிறது. தமக்கென தனியான மரபையும் கொண்டுள்ளார்கள். ஆனால் இவை உரிய அங்கீகாரத்தைப் பெறுவதில்லை. தமிழ் தேசத்தின் மரபினுள்ளடக்கப்பட்டுப் பார்க்கப்படுவதில்லை.

வேறுபட்ட சமூக, பொருளாதார நிலைமைகள் காரணமாக, சிங்கள இனவாத ஒடுக்குமுறையினால் எழும் பிரச்சனைகளும் வேறுபட்டனவாகவே இருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் இது பெரிதும் வேலைவாய்ப்பு, உயர்கல்வி வாய்ப்பு, வர்த்தகப் பயிர்களுக்கான விலை நிர்ணயம் பற்றியதாக இருக்கும் போது, கிழக்கில் நிலம், நீர் போன்ற வளங்கள் மீதான கட்டுப்பாடு தொடர்பான பிரச்சனைகளாக எழுகின்றன. ஆனால் யாழ்ப்பாணத் தலைமையானது யாழ்ப்பாண மக்களது பிரச்சனைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வெளிப்படுத்தும் அளவிற்கு வன்னி, கிழக்கு மக்களது பிரச்சனைகள் உரிய கவனத்தைப் பெறுவதில்லை. தனிச் சிங்களச் சட்டமும், தரப்படுத்தலும் பெற்ற முக்கியத்துவத்தை குடியேற்றம் பெறாதது கவனிக்கத்தக்கது. அத்துடன் இனரீதியான தரப்படுத்தலானது முதலில் தமிழ் மக்களை ஒடுக்கும் நோக்கில் கொண்டு வரப்பட்ட போதிலும், பின்பு அது பிரதேச ரீதியான தரப்படுத்தலாக மாற்றப்பட்ட போது இதனால் யாழ்ப்பாண மாணவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட, வன்னி, கிழக்கு மாணவர்கள் முதல் தடவையாக பல்கலைக் கழகங்களை எட்டிப் பார்க்கும் நிலைமை உருவானது. இவ்வாறாக யாழ்ப்பாண மாணவர்களுக்கும் வன்னி, கிழக்கு மாணவர்களுக்கும் இடையே முரண்பட்ட நலன்களைத் தோற்றுவித்தது. தமிழ் தேசிய இயக்கமானது இந்த முரண்பட்ட நலன்களைக் கருத்தில் கொள்ளாது, பிரச்சனையை யாழ்ப்பாணம் சார்ந்தே வரையறுத்தது. தமது கோரிக்கைகளுடன் முரண்பட்ட கிழக்கு மக்களை தேசிய உணர்வு அற்றவர்களாக காட்ட முனைந்தது.

அரசியல் தளத்திலும் யாழ்மையவாதம் பிரச்சனைகளைத் தோற்றுவித்தது. வன்னி, கிழக்கு மக்களது அரசியல் அபிலாஷைகள், ஜனநாயக உரிமைகள் என்பவற்றைக் கருத்தில் கொள்ளாது, கிழக்குமாகாண பிரதிநிதிகளை யாழ் தலைமை தாமே தீர்மானித்தது. வடக்கில் ஒரு தேர்தல் தொகுதி - முல்லைத்தீவு தொகுதி - புதிதாக கிடைக்கிறது என்பதற்காக கிழக்கில் மூதூர் தொகுதி பிரிக்கப்படுவதையும், இதனால் அந்த மக்கள் தமது அரசியல் பிரதிநிதித்துவத்தை இழக்கும் அபாயம்



படிப்பகம்

www.padippakam.com

கண்டு கொள்ளாமல் விடப்பட்டது. 1977 இல் திருகோணமலையில் தேர்தல் அபேட்சகரை தீர்மானிப்பதில் அம் மக்களது அபிலாஷைகளை நிராகரித்த த.வி.கூட்டணி தலைமையின் செயற்பாட்டினால் எழுந்த முரண்பாடுகள் இன்று வரை இழுபறியாகத் தொடர்கிறது. மட்டக்களப்பில் இராசதுரை யூ. என். பி இற்கு கட்சி மாறியதும் கூட யாழ் தலைமையின் ஏதேச்சாதிகார போக்கின் நேரடி விளைவு தான். யாழ் தலைமைக்கு எதிரான நம்பிக்கையின்மை உணர்வுகள் கிழக்கிலும், வன்னியிலும் இன்று வரை காணப்படுகிறது. இந்த விதமான உணர்வுகளை பிற்போக்கு சக்திகள் ஒரளவுக்கு பயன்படுத்திக் கொள்ள தவறவுமில்லை. "யாழ் அகற்றிச் சங்கம்" என்ற பெயரில் வன்னி, கிழக்குப் பகுதிகளில் பல்வேறு ஊர்களில் சில அமைப்புக்கள் 60 களில் செயற்பட்டு யாழ்மையவாதத்திற்கு எதிரான இப்பிரதேச மக்களின் உணர்வுகளை பயன்படுத்திக் கொண்டு எஸ். எல். எப். பி க்கும் யூ. என். பி.க்கும் முண்டு கொடுத்து தமிழ் மக்களின் தேசிய இயக்கத்திற்கு விரோதமாக செயற்பட இந்த சக்திகள் முயன்றன.

தேசிய விடுதலைப் போராட்ட அரசியலிலும் இதே போக்கைக் காணலாம். கிழக்கு மாகாணத்தின் பல்லாயிரக்கணக்கான மக்கள், வருடக்கணக்கில் காடுகளில் அகதிகளாக வாழ நிர்ப்கந்திக்கப்பட்டிருப்பர். ஆயிரக்கணக்கானோர் அரச கொலைப்படைகளினால் மர்மமாயும், பகிரங்கமாயும் கொலை செய்யப்பட்டிருப்பர். ஆனால் இந்த மக்களது துயரங்கள் பெறாத கவனத்தை கோட்டையிலிருந்து அடிக்கப்பட்ட "செல்லினால்" காயப்பட்ட, இறந்த சிலர் பெற்றுவிடுவர். இயக்கங்களும் பின்னைய சம்பவத்திற்கே தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் முக்கியத்துவம் கொடுத்திருப்பர். விடுதலை இயக்கங்களது வரலாற்றிலும், அமைப்பின் வளங்கள் வன்னி, கிழக்கு பிரதேசங்களுக்கு நியாயமாக பகிரப்படாமை குறித்தும், வன்னி, கிழக்கு பிராந்தியங்களுக்கு யாழ்ப்பாணத்தவர்களே தலைமைகளாக நியமிக்கப்படுவதனாலும் பல பிரச்சனைகள் எழுவதுண்டு. வன்னி, கிழக்குப் பிரதேசங்களை, அங்குள்ள மக்களை காப்பதில் காட்டப்படாத அக்கறை குடாநாட்டைக் காப்பதில் காட்டப்படுவதுண்டு. இவ்வாறே இயக்கங்களைப் பொறுத்த வரையில், வன்னி, கிழக்கு பிரதேசங்கள் வெறும் அணிதிரட்டலுக்கான தளங்களாக மட்டுமே செயற்படுவ தாகவும், இப்பிரதேசங்களில் அணிதிரட்டப்பட்ட வர்களை குடாநாட்டை பாதுகாப்பதற்காக பலியிடுவதாகவும் இன்று வரையிலும் குற்றச்சாட்டுகள் காணப்படுகின்றன.

தமிழீழத்தின் சனத்தொகையில் யாழ்ப்பாணத்தில் வாழ்பவர்கள் வன்னி, கிழக்கு வாழ் மக்களை விடவும் எண்ணிக்கையில் மிகவும் அதிகம் என்ற வகையில் தேசிய இயக்கத்திலும் அதன் முன்னெடுப்புகளிலும் இந்த மக்கள் கணிசமான அளவு பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டிருப்பர் என்பது நியாயமானதே. ஆனால் இந்த எண்ணிக்கை அளவில் உள்ள பெரும்பான்மையானது. ஏனைய பிரதேச மக்களது அடிப்படை ஜனநாயக உரிமைகளை மறுப்பதாக அமையும் போது இதுவோர் பெரும்பான்மை வாதமாக (Majoritism) ஆகிவிடுகிறது. பெரும்பான்மை வாதம் என்பது ஜனநாயகத்தை வெறும் எண்ணிக்கையாக குறுக்கி அதன் ஆத்மாவைக் கொன்று விடுவதாகும். மொத்தத்தில் இதுவோர் அதிகார உறவாகி விடுகிறது. இதற்கு மேல் இது தேசத்திலுள்ள பலவித கூறுகளும் தாமாக முன்வந்து சமத்துவ அடிப்படையில் ஒன்று கலந்த ஒரு பலமான தேசமாக உருவாவதற்கு இடையூறு செய்யும் விதத்தில் அகக் கூறுகளிடையே பூசல்களையும், சச்சரவுகளையும் ஏற்படுத்தி விடுவதால் எதிரிக்கே இலாபமளிப்பதாயிருந்தது. யாழ்ப்பாணத்து மக்கள் தமது எண்ணிக்கை பெரும்பான்மையுடன் கூடவே யாழ்ப்பான இராச்சியம் என்ற தனியான அரசை பெற்றிருந்ததன் சாதகமான அம்சங்களையும் கொண்டுள்ளார்கள். அத்தோடு கூடவே யாழ்ப்பானத்தில் கானப்படும் வளங்களின் அரிதான தன்மையும், புரொட்டெஸ்தாந்து மிஷன்களின் மற்றும் அதனை வேறோர் விதத்தில் பிரதி செய்த நாவலரின் இயக்கம் போன்றவற்றின் காரணமாக யாழ்ப்பான மக்களிடையே புரொடெஸ்தாந்து ஒழுக்க நெறியை ஒத்த ஒருவித ஒழுக்க நெறியும் காணப்படுகிறது. கடின உழைப்பு, கல்வி, தொழில் நுட்பம் போன்றவற்றில் அதிகளவு ஈடுபாடு போன்றவற்றை உள்ளடக்கியதாக இது அமைகிறது. இந்த விதமான குணாதியங்களை கொண்டிருப்பது குறித்து ஒருவர் பெருமைப்படுவதும் புரிந்து கொள்ளத்தக்கதே. ஆனால் பிரச்சனை எங்கு எழுகிறது என்றால் ஏனைய பிரதேச மக்களும் தமக்கென குறிப்பிட்ட விழுமியங்களையும் அவை தொடர்பான பெருமித உணர்வுகளையும் கொண்டிருப்பார்கள் என்பதை கவனிக்கத் தவறி இந்த வேறுபாடுகளுக்கிடையில் ஒருவித ஏற்றத் தாழ்வைக் கற்பிக்க முனையும் போதுதான். நமது நீர், நில வளங்கள் குறித்தும், விருந்தோம்பும் பண்பு குறித்தும், சாதியம் போன்ற சமூக அநீதிகள் தொடர்பாக தம்மிடமுள்ள தாராண்மைவாத போக்கு குறித்தும், தமது கலாச்சாரம் குறித்தும் கிழக்கு மக்களும் தம்மளவில் பெருமைப்படவே செய்வர். இப்படியாக ஒவ்வொரு பிரதேச மக்களும் தத்தமது விழுமியங்களையிட்டு பெருமைப்படவே செய்வர். ஒரு நிலையில் இந்தவித பெருமித உணர்வுகள் அவசியமானதும் கூட. இந்த வேறுபாடுகளுக்குள் ஏற்றத்தாழ்வுகளைக் கற்பித்து அதிகார உறவுகளை நிலைநாட்ட முனையாமல், எல்லா மக்கட் பிரிவினரையும் உள்ளடக்கும் விதத்திலும், அவர்களது உணர்வுகளைப் பொதுமைப்படுத்தும் விதத்திலும் புதிய அடையாளப்படுத்தல்களை உருவாக்கி அவற்றை நோக்கி அனைவரது விசுவாசங்களையும் வென்றெடுப்பதிலேயே குறிப்பிட்ட மக்கட் கூட்டமானது ஒரு பலமான தேசமாக உருவாக முடியும். இந்த விதத்தில் யாழ்மையவாதமானது தேசத்தை பலவீனப்படுத்தும் பாத்திரத்தையே ஆற்றுகின்றது. யாழ்ப்பாணத்தை இலங்கையின் தலை என உருவகிப்பதுண்டு. கல்வியில் அவர்கள் காட்டும் அக்கறையை வெளிப்படுத்தும் விதத்தில் இலங்கையின் மூளை என்ற அர்த்தத்தில் இது குறிப்பிடப்படுவதுண்டு ஆனால் இந்தவிதமான உருவகமானது தமிழீழத்தில் யாழ் ஆதிக்கத்தை நியாயப்படுத்தும் யாழ்மையவாத கோஷமாகவும் அமையும் என்பதை கருத்தில் கொள்வது அவசியமாகும்.

யாழ் மையவாதமானது தமிழ் தேசத்தின் பலத்தை சிதைக்கும் அம்சமாக இருப்பதை எதிரியும் கூட தெரிந்து வைத்துள்ளான். தமிழீழ தாயகத்தை கூறுபோடும் வகையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களை பிரிக்கும் விதத்தில் சர்வசன வாக்கெடுப்பை கிழக்கில் நடாத்தப்போவதாக எதிரி அடிக்கடி தம்பட்டமடிப்பது வெறுமனே கிழக்கில் குடியேற்றப்பட்டுள்ள சிங்களவர்களையும், அங்கு தமது தாயகத்தைக் கொண்டுள்ள முஸ்லீம்களை மாத்திரம் நம்பியல்ல என்பதும் யாழ்மைய வாதத்திற்கு எதிரான கிழக்கு தமிழரது உணர்வுகளையும் நம்பித்தான் என்பது, ஒரு தேசம் என்ற வகையில் தமிழர் அனைவரும் வெட்கப்பட வேண்டிய விடயமாகும். 1977 தேர்தலில் கிழக்கில் சில தமிழர்கள் U.N.P. சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்டதும், இதனை அடிப்படையாக கொண்டு தமிழீழ கோரிக்கையை கிழக்கு மக்கள் ஆதரிக்கவில்லை யென U.N.P. அரசு சர்வதேச அளவில் பிரச்சாரம் செய்ததும் நினைவு கூறப் பொருத்தமானதாகும்.

இதில் மிகவும் சோகமான வேடிக்கை என்னவெனில், யாழ்மையவாதத்தை ஒரு பேசாப் பொருளாக வைத்திருப்பதில் சம்பந்தப்பட்டவர்கள் மிகவும் தந்திரமாக செயற்பட்டு வருவதாகும். இப்படிப்பட்ட ஒரு பிரச்சனையே கிடையாது என்ற வகையில் பொது அரங்குகளில் பாவனை பண்ணப்படுகின்றது. இதற்கு மாறாக, பாதிக்கப்பட்ட எவராவது யாழ்மைய வாதத்திற்கு எதிராக குரல் கொடுக்க முனைந்தால், குரல் கொடுப்பவருக்கு எதிராகவே "பிரதேசவாத" முத்திரை குத்தப்படுகின்றது. இதன் மூலம் அவரது வாயை மூடிவிடும் வேலை இதுவரை வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றது. இந்த



படிப்பகம்

விதமான செயற்பாடுகள் காரணமாக யாழ்மையவாதத் தால் பாதிக்கப்படுபவர்கள் தமது குறைகளை வெளிப்படுத்தி தீர்வு காண்பதற்கான வழி முறைகளும் கூட முடப்படுகின்றன.

சாதியம்

தமிழீழத்தில் நிலவும் சாதிய முறைமை (Caste System) பற்றி முறையான ஆய்வுகள் இதுவரை செய்யப்படவில்லை. சாதியத்தை நேரடியாகவே ஒரு உற்பத்தி முறையுடன் இணைந்துப் பேச முனைவதிலுள்ள குறைபாடுகள் பற்றிக் குறிப்பிடும் போது, பொதுவாகவே ஆசியாவில் இருந்த விவசாய உற்பத்தி முறையை அப்படியே ஐரோப்பாவிலிருந்த நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையுடன் சமப்படுத்தி பார்ப்பதில் பல பிரச்சனைகள் எழுகின்றன. இந்த நோக்கிலேயே ஆசிய உற்பத்தி முறை பற்றிப் பேசப்படுகின்றது. அதிலும் ஆசியாவிலுள்ளதும், குறிப்பாக கிழக்கிலுள்ளதுமான உற்பத்தி முறையை யாழ்ப்பாண உற்பத்தி முறையுடன் ஒப்பிடவே முடியாது.

முதலாளித்துவம் வருவதற்கு முன்பு சாதியம் என்பது குறிப்பிட்ட விதத்திலமைந்த வேலைப் பிரிவினையாக அமைந்து இருந்தது என்பது உண்மைதான். இந்த அர்த்தத்தில் சமூகஅளவில் ஒரு குறிப்பிட்ட விதத்தில் அமைந்த வேலை பிரிவினையை உருவாக்கி, அதனை மாற்ற அனுமதிக்காத ஒரு முறைமையை சாதியம் எனவும் குறிப்பிடலாம். ஆயினும் சாதிய முறைமையை நிலையாக பேணுவதில் சித்தாந்தத்தின் பாத்திரம் மிகவும் முக்கியமானது. இப்படிப்பட்ட நிலையில் சாதியத்தை வெறுமனே உற்பத்தி உறவுகளாக மட்டும் குறுக்கி விடுவது சாதியம் பற்றிய விரிவான பார்வைக்குத் தடையாகவும் அமைந்து விடுகிறது. சாதியம் பற்றிய விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு அது தொடர்பான ஒரு திட்டவட்டமான கோட்பாட்டு உருவாக்கம் வரையிலும் இதனை சாதியம என்று பொதுப்படையாக பேசுவதுடன் மாத்திரம் நிறுத்திக் கொள்வோம். ஏதாவது காரணத்தால் சாதியத்தை உற்பத்தியுடன் தொடர்புபடுத்தி பேசியாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால் அப்போதுமட்டும் "சாதிய உற்பத்தி முறை" என பேசலாம்.


இந்து மதத்தின் "மனுதர்ம சாத்திரம்" நான்கு வர்ணங்களைக் குறிப்பிட்டு அவை இறைவனால் படைக்கப் பட்ட, இயற்கையாக, மாற்ற முடியாத அம்சங்கள் என்பதாக காட்டுகிறது. தத்தமது சாதிக்குரிய கடமைகளை மீறாது கடைப்பிடிப்பதே இந்து தர்மம் என வலியுறுத்துகிறது. சாதியத்தை கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளாத மதங்கள் கூட தென்னாசிய பிராந்தியத்தில் பரவும் போது ஏற்கனவே சமூகத்திலுள்ள சாதிய பிரிவினைகளுடன் சமரசம் செய்து கொண்டே போகவேண்டிய அளவிற்கு சாதியத்தின் பிடிப்பு இறுக்கமானதாகும். இம் மதங்கள் இந்து மதத்தைப் போல சாதியத்தை வெளிப்படையாகவே ஆதரிக்கத் தலைப்படா விட்டாலும் தமது மதங்களின் மூலக் கோட்பாடுகளுக்கு ஏற்ப சாதிய ஏற்றத்தாழ்வுகளைகளைய போராட முனையவில்லை.

தமிழீழத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்திலுள்ள சாதியம் பற்றிப் பேசும் போது பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அ) மனுதர்மப்படி பிராமணர்கள் மிகவும் உயர்ந்த சாதியினராவர். இந்தியாவில் பிராமணர்களது கரங்களிலேயே நிலம், முலதனம், தொடர்புசாதன ஆதிக்கம், அரசியல் அதிகாரம், கல்விக் கூடங்கள் அனைத்தும் உள்ளன. இதனால் இவர்களே பிரதான ஆதிக்க சக்திகளாவர். ஆனால் ஈழத்தில் வேளாளர்களே ஆதிக்க சக்திகளாவர். நிலம், கல்வி, அதிகாரம், தொடர்புசாதனங்கள் போன்ற அனைத்தும் இவர்களது கரங்களிலேயே இருந்து வந்துள்ளன. இன்னும் இருந்து வருகின்றன. இங்கு பிராமணர்கள் என்போர் மரபான அர்த்தத்தில் வேளாளரை விட உயர்ந்த சாதியினராகக் கருதப்பட்டாலும், அது வெறுமனே பெயரளவிலானதே. சமூக அதிகாரங்கள் எதுவுமே பிராமணர்களின் கரங்களில் கிடையாது. பிராமணர்கள் வெள்ளாளருக்கு சேவை செய்யும்-அதாவது மதக்கிரிகைகளை செய்யும் - சாதியினராகவே இருந்து வருகின்றனர். வெள்ளாளரிடம் ஊதியம் பெறுபவர் களாகவே இவர்கள் உள்ளனர்.

ஆ) ஈழத்தில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சாதிய அமைப்பிலுள்ள இன்னுமொரு குறிப்பிடத்தக்க அம்சம் அது "தலைகீழ் பிரமிட் " வடிவில் காணப்படுவதாகும். இதனை சற்று விரிவாக பார்ப்போம். பொது வாக வர்க்க, அதிகார உற வு கள் நிலவும் சமூகத்தில் சுரண்ட ப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்கள் மிகப் பெரும்பான்மையினராக இருப்பர். இவர்களைச் சுர ண்டுகின்ற, ஒடுக்கின்ற பிரி வினர் மிகவும் சிறுபான் மையினராக இருப்பர். இவ ர்களுக்கு இடையில் இடை நிலைப்பட்ட பிரிவினர் மித மான எண்ணிக் கையில் இருப்பர். இங்கு குறிப்பிட்ட மக்கட்பிரிவினது எண்ணி க்கையும் அவர்கள் கரங்களிலுள்ள அதிகாரமும் தலை கீழ் விகிதத்தில் உறவுடையவை அதாவது அதிகாரப்படி நிலையில் மேல் நோக்கிப் போகும் போது எண்ணிக்கை குறைந்து கொண்டு போகும் இதனை வரைபடமாகக் காட்டினால் அருகில் உள்ளது போல அமையும்.

இந்த விதமாக சமூகம் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும் போதுதான் அடிநிலை மக்களிடம் இருந்து அபகரிக்கப்படும் சிறுபகுதி உபரிகள் ஒன்றாக திரண்டு மேல் நிலையில் இருப்பவர்களது கரங்களில் பெரும் செல்வமாக திரளமுடியும். இதன்மூலம் அப்பிரிவினரின் உல்லாச வாழ்வை உத்தர வாதப்படுத்து வதும் சாத்தியப்படும். அடிமையுடைமை சமுதாயத்தில் பல்லாயிரக் கணக்கான, இலட்சக்கணக்கான அடிமைகளுக்கு சில நூறு, சில ஆயிரம் எஜமானர்கள்




இருந்தனர். நிலப்பிரபுத்து வத்திலும் பிரபுக்களினதும் பண்ணையடிமைகளினதும் எண்ணிக்கை விகிசாரம் இவ்வாறே இருந்தது. முதலாளித்துவத்திலும் பெரிய முதலாளிகளுக்கும், பாட்டாளிகளுக்கும் இடையிலுள்ள விகிதாசாரம் இப்படிப் பட்டதே. இந்தியாவில் கீழ் நிலையில் உள்ளவர்களுக்கும் பிராமணர்களுக்கும் இடையிலுள்ள விகிதம் இப்படிப்பட்டதே.


யாழ்ப்பாண நிலைமை தலைகீழகாவுள்ளது. அதாவது வெள்ளாளர் மிகவும் கூடிய எண்ணிக்கையிலும், தாழ்த்தப்பட்ட மக்கள் குறைந்த எண்ணிக்கையிலும் உள்ளனர். இந்த குறிப்பான தன்மைக்கான காரணங்களை நாம் வரலாற்று பூர்வமாக யாழ்ப்பாணத்தில் குடியமர்வு நடைபெற்ற விதம், யாழ்ப்பாணத்தின் குறிப்பான வளங்களின் தன்மை, யாழ்ப்பாணத்தின் பொருளாதார கட்டமைவின் தன்மை, போன்ற பல அம்சங்களுடன் இனைத்துப் பார்க்கப்பட வேண்டும். இப்படிப்பட்ட தலை கீழ் பிரமிட் வடிவ மானது தனித்து சாதிய உற்பத்தி முறையில் மாத் திரம் செல்வம்திரள்வதற் கான வாய்ப்புகளை மட்டுப் படுத்தியே வைத்திருக்கும் என்பதும் புரிந்து கொள்ளத் தக்கதே.

யாழ்ப்பாணத்தில் நிலவும் சாதியத்தில் இந்த தலைகீழ் பிரமிட் வடிவமாதிரியானது யாழ்ப்பாணத்தில் சாதியத்திற்கு குறிப்பான பண்புகளை கொடுக்கிறது. இதனால் ஏனைய

www.padippakam.com

தென்னாசிய சமூகங்களில் வழக்கிலுள்ள சாதியமுறைகள் பற்றிய ஆய்வுகளை யாழ்ப்பாண சாதிய முறைக்கு பிரயோகிப்பதில் அதிக கவனம் தேவைப்படுகிறது.

தேசவழமைச் சட்டமானது யாழ்ப்பாணத்திலுள்ள 40 சாதிகளைப் பற்றிக் கூறுகிறது. இவர்களுள் வெள்ளாளர் முதல் நிலையில் உள்ளனர். இவர்களை அடுத்து சாதிய உற்பத்தி முறையில் நேரடியாக இவர்களுடன் பிணைக்கப்பட்ட அடிமை குடிமை முறைகளுடனும், ஓரளவு சுயாதீனமாகவும் பல்வேறு சாதிகள் அடுக்கமைவு பெறுகின்றனர். கரையார் பொதுவாக இந்த விதமான அடுக்கமைவினுள் வராதவர்கள் என்ற போதிலும் இவர்களும் வெள்ளாளருக்கு அடுத்த கீழ் நிலையில் வைத்தே கருதப்படுவர். பொதுவில் சாதியம் என்பது வேலைப்பிரிவினையை மாற்ற அனுமதிக்காத ஒரு கறாரான பாகுபாடாகக் கருதப்பட்டாலும் கால ஓட்டத்தில் பொருளாதாரத்தில் பலம் பெறும் சாதிகள் தமக்கு மேல்நிலையிலுள்ள சாதியினருடன் கலந்து மேல் நிலைப்படும் நிலையும் காணப்படுகிறது.




"கள்ளர், மறவர், கனத்த அகம்படியார் மெல்ல மெல்ல வந்து வேள்ளாளர் ஆனார்கள்" என்ற ஒரு பழமொழியும் கூட இருக்கிறது. புள்ளி விபரங்களும் ஓரளவு இதனை நிரூபிக்கின்றன. 1790இல் 30 வீதம் ஆக இருந்த வெள்ளாளர் தற்போது கிட்டத்தட்ட 50 வீதம் ஆக அதிகரித்துள்ளனர். இந்த மாற்றமானது ஒருவித மேல் நிலையாக்கத்தினால் ஏற்பட்டதாகும்.

கொலனித்துவ ஆட்சியாளர்கள் கொண்டு வந்த சீர்திருத்தங்களும், பின்பு நடைபெற்ற பொருளாதார, அரசியல் மாற்றங்களும் சாதிய அமைப்பில் பெருமளவு தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. இந்த விதத்தில் குறிப்பிடத்தக்க சில அம்சங்கள் வருமாறு. . . . 1844இல் அடிமை முறை நீக்கம்; பின்பு ஏற்பட்ட கல்வி அறிமுகம்; பாடசாலையில் சம ஆசனம், சமபந்தி போசன நடவடிக்கைகள்; 1930 சர்வசன வாக்குரிமை; அடுத்து வந்த கிறித்தவ ஆலயங்களிலும், பொதுப் போக்குவரத்து வாகனங்களிலும் சமஆசனத்திற்கான போராட்டம்; 1960 களில் வந்த பசுமைப் புரட்சியுடன் கூடிய இயந்திர பாவனைகள் பலரை சாதிய உற்பத்தி முறையிலிருந்து விடுவித்தது; 60 களின் பிற்பகுதியில் இடதுசாரிகள் தலைமையில் நடைபெற்ற ஆலய பிரவேச, உணவக, சலூன் பிரவேச போராட்டங்கள் என்பவை இதில் குறிப்பிடத்தக்க சில நிகழ்வுகளாகும். இந்த நிகழ்வுகள், போராட்டங்கள் மூலமாக சாதிய அமைப்பு முறை ஓரளவு தகர்ந்து போயுள்ளது என்பது உண்மை தான். ஐரோப்பியர் வருகைக்கு முந்தியிருந்த நிலைமை அல்லது உடனடியாக அதற்கு பின்னர் இருந்த நிலைமை இப்போது கிடையாது தான். ஆனால் இவ்வாறு கூறுவது சாதிய ஒடுக்கு முறையை ஒழித்துவிட்டதற்கு சமமாக ஆகாது. தற்போது தாழ்த்தப்பட்ட மக்களில் பெரும் பகுதியினர் தேசிய விடுதலைப் போராட்டங்களில் கலந்து கொள்கின்றார்கள். ஆனால், இந்த பங்கு பற்றலானது சாதிய ஒடுக்கு முறையை களைவதற்கு அதிகம் உதவவில்லை. இன்றும் தேசிய விடுதலையின் பேரால் சாதிய ஒடுக்குமுறை பேசாப் பொருளாக ஆக்கப்படும் நிலைமைதான் காணப்படுகிறது.

பொதுக் கிணறுகளும், பல ஆலயங்களும் இன்றும் கூட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திறக்கப்படாமலே உள்ளன. யாழ் பல்கலைகழக "செனட்" போன்ற அமைப்புகளிலே தாழ்த்தப்பட்ட மக்கள் பிரிவினர்களைச் சேர்ந்தவர்கள் வந்து விடக்கூடாது என்ற எச்சரிக்கை தீவிரமாக நிலவுகிறது. இந்த விதமான பிரச்சனைகள் வெறுமனே அற்பமான, வெறும் அடையாளப்படுத்தல் மட்டத்திலான பிரச்சனைகள் அல்ல. இவை இன்று வரை சமூகத்தில் ஆழமாகப் புரையோடிப் போயுள்ள ஒரு பிரச்சனையின் வெளிப்பாடுகளே. இன்று வரையில் தாழ்த்தப்பட்ட மக்களில் பெரும்பாலானோர் பயிர் செய்ய நிலமோ, அடிப்படை வீட்டுவசதி, சுகாதார வசதியின்றி திட்டிகளில் உள்ள சேரிகளில் தான் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய சமூக, அரசியல், கலாச்சார நடவடிக்கைகளுக்கான வாய்ப்புகள் உயர் சாதியினரால் மிகவும் நுட்பமாக மறுக்கப்பட்டு, இழிவுபடுத்தப்பட்டு அன்றாடம் அவமதிக்கப்பட்டு மூலையில் இருத்தப்பட்டுள்ளனர். இதனால் இவர்கள் அரசியல் அதிகாரத்தை வென்றெடுப்பதற்கான வாய்புகள், என்றென்றைக்கும் மறுக்கப்பட்டவர்களாகவே உள்ளனர். தேசவழமைச் சட்டம் என்பது சாதிய ஒடுக்குமுறைகளை நியாயப்படுத்தும் ஒரு சட்டமே. கோவிய சாதியைச் சேர்ந்த ஒருவரது மரண ஊர்வலத்தில் பறை அடித்ததை வெள்ளாளர் தடுத்ததற்கு ஆதரவாக இராமநாதன் தேச வழமைச் சட்டத்தை ஆதாரமாகக் காட்டியுள்ளார்.

தமிழ் தேசத்தில் நிலவும் இந்த சாதிய ஒடுக்கு முறையானது தனது தேசத்தின் ஒரு பிரிவினருக்கு அடிப்படை மனித உரிமைகளையே மறுக்கும் மிகவும் ஜனநாயக விரோதமான நடைமுறையாகும். இப்படிப்பட்ட ஒடுக்கு முறையை தன்னகத்தே கொண்டுள்ள ஒரு தேசம் தனது பிரஜைகள் அனைவரையும் ஒன்றிணைந்து ஒரு பலமான தேசமாக உருப்பெற்று தனது வரலாற்றுக் கடமைகளை ஆற்றும் தகுதியற்றதாகும். இந்த விதமான ஒரு ஜனநாயக விரோத நடைமுறையை தனது அன்றாட வாழ்க்கை நெறியாக கொண்டுள்ள ஒரு சமூகத்தில் புரட்சிகர - ஜனநாயக அமைப்புகள் உருவாகி வருவதும் இலகுவானதல்ல. தேசவிடுதலை என்பது பரந்து பட்ட மக்களது வாழ்வில் அர்த்தம் பொதிந்ததாக இருக்க வேண்டுமானால், அது சாதிய ஒடுக்கு முறைக்கு சாவுமணி அடிப்பதாகவும் இருக்க வேண்டும்.

## பால்வாதம்.

தமிழ் தேசமானது ஏனைய சமூக உருவாக்கங்களை போலவே ஓர் ஆணாதிக்க சமுதாயமாகும். அத்துடன் கூடவே தமிழ் தேசம் ஒரு பழமை பேணும் சமூகமாகவும் திகழ்வதால் இது பெண்களின் விடயத்தில் அதிகம் பிற்போக்கான சிந்தனைகளைக் கொண்டதாகவும் இருக்கிறது. சீதனம், கலாச்சாரம், கற்பு போன்றவற்றை பெண்களிடத்தில் மட்டும் மிகையாக வலியுறுத்துவது தமிழ் தேசத்தில் காணப்படும் ஒரு குறிப்பான பிரச்சசையாகும். எந்த வொரு சமூக உருவாக்கமும் தனக்கென தனித்துவமான கலாச்சாரத்தை, ஒழுக்க நெறிகளைக் கொண்டிருக்கவே செய்யும். அத்தோடு, ஒரு ஒடுக்கப்பட்ட தேசமானது இந்த விதமான அடையாளப் படுத்தல்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதும் இயல்பானது தான். ஆனால் பிரச்சனை எங்குள்ளது என்றால் கலாச்சாரம். ஒழுக்கம் போன்றவற்றை கடைப்பிடிப்பதற்கான பொறுப்பை ஆண்கள் பெண்கள் மீது சுமத்திவிட்டு, இவற்றை தம்மளவில் கடைப்பிடிப்பதையிட்டு ஆண்கள் அசிரத்தையாக இருப்பதில் தான். சமூகத்திலுள்ள ஏனைய வளங்கள், அதிகாரங்கள் போன்றவற்றை தமது கரங்களில் வைத்துக்கொண்டுள்ள ஆண்கள், இவற்றில் தமக்குரிய பங்கை கேட்கும் பெண்களை மூர்க்கத்தனத்துடன் எதிர்க்கின்றார்கள். ஆனால் கலாச்சாரம் ஒழுக்கம் போள்றவற்றை மட்டும் பெண்களிடம் ஒப்படைத்து விட்டு தம்மளவில் அவற்றைப் பேணுவதில் அக்கறைப்படாமல் இருக்கின்றார்கள் என்றால், அதற்கு காரணம், ஆண்களைப் பொறுத்த வகையில் ஒழுக்கம் கலாச்சாரம் என்பன உயர்வான விழுமியங்களைக் கொண்டவையல்ல, மாறாக, ஒழுக்கம் கலாச்சாரம் என்பவற்றை பெண்களை அடக்குவதற்கான சாதனங்களாக பயன்படுத்தும் கபடத்தனமேயாகும்,

பிரான்ஸ், சுவிற்ஸ்சலாந்து போன்ற நாடுகளில்



படிப்பகம்

பெண்களுக்கு வாக்குரிமை கிடைப்பதற்கு முன்பே 1931 இலேயே இலங்கைப் பெண்கள் வாக்குரிமையைப் பெற்றார்கள். யாழ்ப்பாணத்தில் பெண்கள் கல்வி விசேட அக்கறைக்குரிய அம்சமாகவே இருந்து வருகிறது. இப்படியான சாதகமான அம்சங்கள் இருந்தும், இவற்றின் பலன்களை அனுபவிக்க முடியாதவர்களாகவே பெண்கள் உள்ளனர். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பவற்றை பெண்மையின் பண்புகளாகக் சித்தரிக்கும் தமிழ் கலாச்சாரம் விடே பெண்ணுக்குரிய இடமாகக் கருதுகிறது. அவளது சுதந்திரமான நடமாட்டதைக் கட்டுபடுத்துகின்றது. குடும்பம், தாய்மை என்பவற்றுள்ளேயே பெண் நிறைவுறுவதாக் கூறுகிறது. இந்த வகையில் ஆணாதிக்க சித்தாந்தமானது இன்றுவரையில் பலமானதாகவே உள்ளது.

இன்று பெண்கள், ஆயுதமேந்திய போராளிகளாக நேரடியாக களத்தில் இறங்கி, பெண்கள் பற்றிய பல மரபான ஐதீகங்களை தமது செயலின் மூலம் தவறென நிருபித்துள்ள போதிலும், இது சமூக அளவில் பெண்கள் தொடர்பான கருத்துகளில் அதிக மாற்றத்தை ஏற்படுத்திவிடவில்லை. ஏன் விடுதலை அமைப்புகளுக்குள் கூட பெண்கள் பற்றிய கருத்துகளில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுவிடவில்லை. பொதுவாகவே பெண்ணிலைவாத கருத்துகள் தமிழ் தேசத்தில் மிகவும் குறைவாகவே பரப்பப்பட்டுள்ளன. Gender என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ் சொல் வழக்கில் இல்லை என்பது வெறுமனே மொழிபெயர்ப்பு பற்றிய பிரச்சனை அல்ல. இது Gender Awareness எவ்வளவு தூரம் தமிழ் தேசத்துள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதன் துல்லியமான வெளிப்பாடாகும்.

பொதுவாகவே தேசியவாதமானது ஆண்களையே தனது தன்னிலையாக கட்டமைப்பதாக பெண்ணிலைவாதிகள் விமர்சிப்பதுண்டு. ஆதலினால் தேசிய விடுதலைக்காக போராடும் புரட்சிகர சக்திகள் பெண்ணிலைவாத பிரச்சனையில் அதிக அக்கறை எடுத்தாக வேண்டும்.

### சைவசித்தாந்தம்

இந்து சமயம் என்பது முற்றிலும் உள்ளிணக்கமான, மையப்படுத்தப்பட்ட ஒரு சித்தாந்தத்தை, நிறுவனத்தை, வழிமுறைகளைக் கொண்ட ஒரு மதமல்ல. இயற்கை வழிபாடு, லிங்கவழிபாடு முதற்கொண்டு, முதாதையர், வீரர்கள், அருஞ்செயலாற்றியோர் மீதான வழிபாடு உள்ளடங்களாக, ஆழ்மனத் தியாகங்கள் வரை பலவிதமான வழிபாட்டு முறைகளை இந்து சமயம் கொண்டுள்ளது. சமூக அடுக்கமைவின் பல்வேறு நிலைகளிலுள்ள மக்கட் பிரிவினரும் தத்தமது வாழ்கை நிலைமைகள் மற்றும் கலாச்சார மட்டங்களுக்கு ஏற்ப வேறுபட்ட வழிமுறைகளினூடாக கடவுளை வணங்கியுள்ளனர். இவ்வாறே இந்து சமயத்தில் சைவம், வைணவம், சாக்தம், கணபதியம் என நான்கு சிந்தனைப் பள்ளிகள் இருக்கின்றன. வரலாற்றுப் போக்கில் உருப்பெற்று, வளர்ந்து வந்த பல்வேறு சமூக சக்திகளது நலன்கள், உலகக் கண்ணோட்டங்கள் என்பவற்றோடு தொடர்புபட்டு எழுந்த இந்த சிந்தனைப் பள்ளிகள் சில சந்தர்ப்பங்களில் ஒன்றோடொன்று மிகவும் முரண்பட்டு வன்முறை வடிவில் மோதிக்கொண்டதுண்டு. சமணத்திற்கும் சைவத்திற்கும் இடையிலான மோதல்கள், ஐசவத்திற்கும் வைணவத்திற்கும் இடையிலான மோதல்கள் இந்த வகையில் குறிப்பிடத்தக்கவை. வரலாற்று பூர்வமாக உருவாகி, வளர்ந்து ஆதிக்க சக்திக்காக போட்டியிட்ட பல்வேறு சமூகங்களிற் கிடையிலான போராட்டங்கள் எவ்வாறு மதங்களுக் கிடையிலான போராட்டங்களாக வெளிப்பட்டன என்பது மிகவும் சுவையான விடயமாகும். "Hinduism" என்ற சொல்லோ மிகவும் பிற்காலத்தில், அதாவது ஐரோப்பியர் இந்தியாவிற்கு வந்த பின்பு, கீழைத்தேச மரபுகளை ஆய்வு செய்தவர்கள் (Oriental Scholers) கிறிஸ்தவம், இஸ்லாம் போன்ற "அந்நிய" மதங்களில் இருந்து இந்திய மக்களது வழிபாட்டு முறைகளை வேறு பிரித்தறியும் நோக்கில், இந்தியாவில் புலக்கத்திலிருந்த பல்வேறு மதப் பிரிவுகளையும் நோக்கில், "இந்து சமயம்" எனும் பெயரில் பொதுமைப்படுத்தியதாக Romila Thabor கூறுவார்.

தமிழ் மொழிக்கும் பல்வேறு மதங்களுக்கும் இடையிலான உறவு கூட பன்முகப்பட்ட தன்மையுடையதாகும். மிகவும் தொன்மையான மொழி என்ற வகையில் தமிழ் மொழியானது அதன் நீண்ட வரலாற்றுப் போக்கில் அந்த மொழியை பேசிய மக்களிடையே வெவ்வேறு காலங்களில் பரவிய பல மதங்களுடன் தொடர்புபட்டு செயற்பட்டு வந்துள்ளது. திராவிடரின் இயற்கை வழிபாட்டு முறைகளும், பின்பு ஆரியர் வருகையுடன் அறிமுகமான பலவித வழிபாட்டு முறைகளுடனும், இந்து சமயத்தின் பல்வேறு பிரிவுகளாக இன்று கருதப்படும் சமணம், வைணவம், சைவம் போன்றவற்றுடனும், பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் போன்ற மதங்களுடனும், ஏன் அண்மைக்காலத்தில் பகுத்தறிவு வாதத்தை முன்னெடுத்த பலமான திராவிட இயக்கங்களுடனும் தமிழ் மொழி இணைந்து செயற்பட்டு வந்துள்ளது. தமிழர் களிடையே வெவ்வேறு காலங்களில் பரவிய பல்வேறு மதங்களும், சிந்தனை முறைகளும் தமிழ் மொழியிலேயே தமது கருத்துக்களை முன் வைத்தன. இந்த விதத்தில் இவை தமிழ் மொழியை பயன்படுத்தி வளர்ந்தன. அவ்வாறே தம் பங்கிற்கு பல அருமையான இலக்கண, இலக்கிய படைப்புகளை இவை உருவாக்கி தமிழுக்கு வளஞ்சேர்த்தன. இப்படியாக பல்வேறு மதங்களைச் சேர்ந்த அறிஞர்களும் பல்வேறு விதமான இலக்கிய, இலக்கண படைப்புகளை தமிழ் மொழியில் உருவாக்கி தமிழை வளர்த்தெடுத்துள்ளனர். இப்படியாக தமிழுக்கும் பல்வேறு மதங்களுக்கும் இடையிலான உறவு என்பது மிகவும் விரிவானதாகும்.

பிற்காலத்தில் தமிழ் மொழியில் வரலாற்றை பதிவு செய்ய முனைந்த ஆதிக்க சக்திகள் தமது நலன்களுக்கும், நோக்கங்களுக்கும் ஏற்பவே இந்த வரலாற்றை எழுத முனைந்தனர். ஏனைய மதங்களைச் சேர்ந்த அறிஞர்கள் தமிழுக்கு ஆற்றிய பங்களிப்பை இருட்டடிப்புச் செய்துவிட்டு பக்தி இலக்கியத்தின் காலத்திற்கு அதீத முக்கியத்துவம் அளித்து சைவத்திற்கும் தமிழுக்கும் இடையே முடிச்சுப் போட்டு வரலாற்றை எழுதினர். ஏடுகளில் இருந்த தமிழ் மொழியின் அரும் பெரும் நூல்களை அச்சேற்றும் போது கூட அப்போது கல்வியறிவில் உயர்நிலையில் இருந்தவர்களும், அச்சுக் கூட வசதி படைத்தவர்களும் தமது நோக்கங்களுக்கு ஏற்பவே பிரதிகளை தேர்ந்தெடுத்து அச்சேற்றினர். இப்படியாக வரலாற்றை எழுதியவர்களும், அச்சேற்றியவர்களும் தத்தமது குறுகிய நோக்கங்களிற் செயற்பட்டதால் தமிழ் மொழியில் வளமான பன்முகம் சார்ந்த பாரம்பரியம் மறுதலிக்கப்பட்டு மிகவும் குறுகிய விதத்தில் தமிழ் மொழிக்கும் சைவ சமயத்திற்கும் இடையிலுள்ள உறவு மாத்திரம் அதீத அழுத்தம் பெறும் விதத்தில் ஒரு மரபு உருவாக்கப்பட்டது. இந்த நடைமுறை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தொடர்ச்சியாக திரும்பத் திரும்ப நடைபெறுகையில் இதுவே ஒரு உண்மையான தோற்றம் பெறலாயிற்று. ஏனைய மதத்தவர்கள் தமிழுக்கு வழங்கிய பங்களிப்புக்கு சான்றாக விளங்கும் படைப்புகள் ஆதிக்க சக்திகளால் புற நடைகளாகக் காட்டப்பட்டு ஒதுக்கப்பட்டன. பொதுவாகவே மொழி, மதம், இலக்கியம், பண்பாடு, வரலாறு போன்ற ஒவ்வொன்றும் எந்தக் காலத்தில் நியமப்படுத்தப்படுகின்றனவோ, அந்தந்த காலத்தில் ஆதிக்கத்திலிருக்கும் சமூக சக்திகளது நலன்கள், நோக்குநிலை ஆகியவற்றிலிருந்தே அவ்வாறு செய்யப்படும் என்பதைப் புரிந்து கொண்டால், இந்தவிதமான திரிபுகள் எதுவும் பெரிய ஆச்சரியத்தை எமக்கு ஏற்படுத்தப் போவதில்லை.

ஐரோப்பியர்கள் தமது பொருளாதார சூறையாடலை உலகலாவிய ரீதியில் விஸ்தரிக்கும் நோக்கில் கொலனித்துவ முறையை மேற்கொண்ட போது அந்தந்த நாடுகளில் வாழ்ந்த சுதேசிகளுக்கும் அவர்களுக்கும் மொழி, மதம், கலாச்சாரம், போன்ற அனைத்திலும் "அந்நிய" தன்மை காணப்பட்டதானது

www.padippakam.com

சுதேசிய மக்களிடம் இருந்து எதிர்ப்புணர்வுகள் தலைதூக்கக் காரணமாகியது. இந்த முரண்பாடுகளை தணிக்கும் நோக்குடன் இவர்கள் கிறிஸ்தவமதத்தை சுதேசிகளிடையே பரப்பவும், இதன் மூலம் அவர்களுடன் ஒருவித ஐக்கியத்தை உருவாக்கவும் முனைந்தனர். இதனால் கொலனித்துவ ஆதிக்கத்தில் முதலில் வியாபாரிகள் வருவது; அடுத்து படைகள் இறங்குவது; பின்பு பாதிரிமார் வந்து சேர்வது; என்பது ஒரு பொதுவான விதியாகவே நடந்தேறியது. இந்தப் போக்கை சித்தரிக்க ஒரு ஆபிரிக்க புரட்சியாளன் "அவர்கள் வரும் போது அவர்களது கரங்களில் பைபிளும் எமது கரங்களில் நிலமும் இருந்தன. இப்போது அவர்களது கரங்களில் நிலமும் எமது கரங்களில் பைபிளும் இருக்கிறது" என சுவைபடக் கூறினார்.

இலங்கையில் மதத்தைப் பரப்பும் மிஷனரிகளின் முயற்சியில், கல்வி கற்பிக்கும் அவர்களது செயற்பாடுகள் உதவின. இந்த நோக்கில் பாடசாலைகள் மிஷனரிமார்களால் திறந்து வைக்கப்பட்டன. இந்தப் பாடசாலைகளில் ஆங்கில கல்வி கற்பவர்கள் கொலனித்துவ அரசில் நிர்வாக இயந்திரத்திலும், ஆசிரியர், மருத்துவர், மதபோதகர் போன்ற வேலை வாய்ப்புகளை உள்ளூரிலும், மலேசியா, சிங்கப்பூர், பர்மா, இந்தியா போன்ற நாடுகளில் நிர்வாக, புகையிரத, கல்வி, சட்டத்துறைகளிலும் வேலைவாய்ப்புகளை பெறக்கூடியதாக இருந்தது. ஆங்கிலக் கல்வி மூலம் கிடைக்கும் பொருளாதார ஊக்குவிப்பாலும், அரச உத்தியோகம் வழங்கும் சமூக அதிகாரம் காரணமாகவும் ஏற்கனவே சமூகத்தில் ஆதிக்க நிலையில் இருந்த சமூகப் பிரிவினர் ஆங்கிலக் கல்வி கற்பதில் தீவிர ஆர்வத்தை வெளிப்படுத்தினர். மிஷனரி பாடசாலைகள் ஆங்கிலக் கல்வியை கற்பிக்கும் போதே மிகவும் நுட்பமான முறைகளுக்கூடாக மாணவர்களையும், அவர்களது பெற்றோர்களையும் படிப்படியே கிறித்தவ மயப்படுத்தினர். இப்படியாக மிஷனரி பாடசாலைகள் கிறித்தவ மதத்தைப் பரப்பின. அத்துடன் கொலனித்துவ அரசிற்கு அவசியமான கீழ் நிலை நிர்வாகிகளையும் உள்ளூரிலேயே உருவாக்கிக் கொடுத்தன.

அரச உத்தியோகம் வழங்கும் பொருளாதார பலம் மற்றும் அதிகாரம் போன்றவற்றால் கவரப்பட்டு மிஷனரி பாடசாலைகளுக்கு சென்ற மாணவர்களில் பலரும் படிப்படியே கிறித்தவர்களாக மதம் மாறினர். இன்னும் பலர் கொலனித்துவ அரசு கொடுத்த நெருக்கடிகளினால், குறிப்பாக ஒல்லாந்தர் காலத்தில் இந்த நெருக்கடி மிகவும் அதிகமாக இருந்தது, பெயரளவிலாவது கிறித்தவர்களாக மாறினர். இவர்கள் வெளியில் தம்மை கிறித்தவர்களாகக் காட்டிக் கொண்டு, வீட்டில் இரகசியமாக இந்து மதத்தை வழிபட்டனர். இன்னும் சில வறிய பிரிவினர், மிஷனறி பாடசாலைகளில் இலவச கல்வியை பெற்று அதன் மூலம் தமது பொருளாதார, சமூக அந்தஸ்தை உயர்த்திக் கொள்ளும் ஒரே நோக்கில், இளம் வயதில் கிறித்தவர்களாக மாறி, கல்வியை பெற்று, அரச உத்தியோகத்தையும் பெற்றுக்கொண்டு மீண்டும் இந்துக்களாக மதம் மாறினர்.

இப்படியாக கிறித்தவமும் ஆங்கிலக் கல்வியும் மேலிடத்தை பெற, சைவமும், தமிழ் மொழியும் படிப்படியாக பின்தள்ளப்பட்டன. இந்த விதமான மாற்றங்களினால் தமது மேலாதிக்க நிலமை பறிபோகாத வரையில், சமூகத்தில் பாரம்பரியமாக ஆதிக்க நிலையில் இருந்து வந்த பிரிவினரான வேளாளரும் இதனை சகித்துக் கொண்டனர். யாழ்ப்பாணத்தில் இருந்த சாதிய உணர்வின் கூர்மையான தன்மையை (Sensitivity) புரிந்து கொண்ட அமெரிக்க மெதடிஸ்ட் மிஷன்களும் தமது கல்வி, மதமாற்ற நடவடிக்கைகளை முக்கியமாக வெள்ளாளர்களை மையமாகக் கொண்டே மேற்கொண்டனர். ஏனைய சாதிகளைச் சேர்ந்தவர்களை உள்வாங்குவதன் மூலம் சாதிய ஒழுங்கமைப்பில் ஏற்படக் கூடிய குழப்பங்களும், அதனால் வெள்ளாளர் மத்தியில் இருந்து எழக்கூடிய முரண்பாடுகளையும் தவிர்க்கவே விரும்பினர்.

கத்தோலிக்க மிஷன்களின் செயற்பாடுகள் ஏனைய புரொட்டஸ்தாந்து மிஷன்களின் செயற்பாடுகளிலும் பார்க்க வேறுபட்டனவாக இருந்தன. இவர்கள் தமது பாடசாலைகளில் வெள்ளாளர் அல்லாத மாணவர்களையும், குறிப்பாக கரையார் சாதியிலிருந்து சேர்த்துக்கொள்ளத் தொடங்கினர். இந்த மாணவர்கள் தமது கல்வியை முடித்துக் கொண்டு அரச உத்தியோகங்களை பெறத் தொடங்கியதானது யாழ்ப் பாணத்தில் நிலவிவந்த சாதிய ஒழுங்கமைவில் குழப்பங்களைத் தோற்றுவித்தது. இது வெள்ளாளரின் தீவிர எதிர்ப்புக்கு காரணமாகியது. இந்த எதிர்ப்புணர்வானது பொதுவில் கிறித்தவ மயமாக்களுக்கும், மிஷனறிகளின் கல்விச் செயற்பாடுகளுக்கும் எதிராக வெளிப்பட்டது. இப்படியாக தமது அதிகார நிலை பறிபோவதை எதிர்த்துக் கிளம்பிய ஆதிக்க சக்திகளான வெள்ளாளரது எதிர்ப்பியக்கத்தின் தலைவராக ஆறுமுக நாவலர் (1822 - 1879) முன் வந்தார். நாவலர் என்பது நாவன்மையுடையவர் எனப்பொருள்படும். ஆறுமுகம் என்ற இயற்ப் பெயரைக் கொண்ட இவர் யாருடைய குரலாக, எவ்வாறு தொழிற்பட்டார் என்பது விரிவாக பகுத்தாராய வேண்டிய ஒன்றாகும்.

ஆறுமுக நாவலரது குடும்பப் பின்னணியை முதலில் குறித்துக் கொள்வோம். இவர் யாழ்ப்பான சமூகத்தில் மரபார்ந்த ரீதியில் உயர் நிலை வகித்த ஒரு வேளாள குடும்பத்தில் பிறந்தார். தந்தையார் கந்தையாபிள்ளை, கந்தர் என அழைக்கப்பட்டவர். யாழ்ப்பாண கச்சேரியில் "ஆராய்ச்சி" ஆக இருந்தவர். இவர் டச்சு, போர்த்துக்கீச, ஆங்கில மொழிகளைத் தெரிந்தவர். தமிழ் புலமை மிக்கவர். சகோதரர்களில் மிகவும் மூத்தவர் தியாகர். இவர் ஒரு சட்டத்தரணி. இரண்டாமவர் சின்னத்தம்பி, "உடையார்". நான்காவது சகோதரர் பரமானந்தர், சட்டத்தரணி. ஐந்தாமவர், தம்பு "ஆராய்ச்சி". பொதுவாக இந்த சகோதரர்கள் அனைவருமே தமிழ் புலமையும், இசை, பாரம்பரிய மருத்துவம் போன்ற துறைகளிலும் ஆற்றல் மிக்கவர்கள். இப்படிப்பட்ட ஒரு உயர்சாதி, உயர்கல்வி, அதிகாரம், பொருள்வசதி மிக்க ஒரு குடும்பப் பின்னனி நாவலருக்கு அமைந்திருந்தது.

இளமையில் தமிழாசிரியர்களிடம் கல்வி பயின்ற நாவலர், பின்பு வெஸ்லிமிஷன் கல்லூரியில் (இன்றைய யாழ் மத்திய கல்லூரி) ஆங்கிலக் கல்வியை பூர்த்தி செய்து பின்பு அங்கேயே ஆசிரியராகவும் பணியாற்றினார். அந்நாட்களில் "பேர்சிவல்" பாதிரியாரின் வேண்டுகோளின் படி அவர், பாதிரியார் மேற்கொண்ட பைபிளை தமிழில் மொழிபெயர்க்கும் முயற்சியில் அவருக்கு துணையாக செயற்பட்டார். பேர்சிவல் பாதிரிக்கு உதவியாக செயற்பட்ட காலத்தில் கிறித்தவ மத பிரச்சார இலக்கியங்கள் பலவற்றை தமிழில் மொழி பெயர்த்தார். இதன் மூலம் கிறித்தவ இறையியலில் நன்கு தேர்ச்சி பெற்றார். மதப் பிரச்சாரங்களை எவ்வாறு எழுதுவது என்பதிலும், மிஷனரிகளின் வேலை முறைகளையும் நன்கு கற்றதோடு, அத்தோடு பாதிரியாரின் மூலமாகவே தென்னிந்தியத் தொடர்புகளையும் பெற்றுக் கொண்டார். இவ்விதமாக மத இயக்கத்தை நடாத்துவதற்கு அவசியமாக அத்தனை பயிற்சிகளையும் அனுபவங்களையும், தொடர்புகளையும் பெற்றுக் கொண்ட நாவலர் 1848 இல் மிஷனுடனான எல்லாத் தொடர்புகளையும் துண்டித்துக் கொண்டு சைவ சமயப் பணிகளில் முழு நேரமாக இறங்கினார். இவரது சமயப்பணி மூன்று காலகட்டங்களைக் கொண்டது.

**1848 - 1864 - மிஷனரிக்கு எதிராக கல்வி, சமய எதிர்ப்பியக்கங்களை ஒழுங்கமைத்தல்.**

**1864 - 1870 - தென்னிந்தியாவில் செயற்படுதல்.**

**1870 - 1879 - யாழ்ப்பாணத்தில் சமூக, பொருளாதார, அரசியல் பணிகளில் முற்றாக ஈடுபடுதல்.**



படிப்பகம்

www.padippakam.com

நாவலரது செயற்பாடுகளில் முக்கியமானது கிறித்தவர்களது தாக்குதலை முறியடிக்க சைவத்தின் உயர் நிலையை மீளவும் உருவாக்கும் நோக்கிலானதாக இருந்தது. இந்து சமயத்திற்கெதிரான கிறித்தவ விமர்சனங்களில் முக்கிய இலக்குகளாக இருந்தவை. சிறுதெய்வ வழிபாடுகள்; ஆலயங்களில் நடனங்கள், கேளிக்கைகள் நடைபெறுவது; பலவித சடங்குகள், சாதியம் போன்றவையாகும். இந்த விமர்சனங்களில் இருந்து இந்து மதத்தைக் காக்கும் விதத்தில், இந்து மதத்தை சைவ சித்தாந்தத்தின் அடிப்படையில் தூய்மைப்படுத்தினார். இது கிறித்தவத்தில் நடைபெற்ற புரொட்டஸ்தாந்தின் தூய்மைப்படுத்தும் (Puritanism) இயக்கத்தை ஒத்ததாகும். இந்த நோக்கில் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் காணப்பட்ட சிறு தெய்வ வழிபாடுகளையும், படையல், பலி கொடுப்பது போன்ற நடைமுறைகளையும், கோயிலில் நடைபெறும் திருவிழாக்கள், வானவேடிக்கைகள், நடனங்கள் போன்றவற்றையும் கடுமையாக சாடி, இவை சைவ சமய நெறிமுறைகளுக்கு எதிரானவை என நிராகரித்தார். இந்த செயலின் மூலம் ஒடுக்கப்பட்ட மக்களது தெய்வங்களையும், வழிபாட்டு முறைகளையும் நிராகரித்து இந்து சமயத்தை அதிகார நிலைப்படுத்தினார். இதனை சமஸ்கிருத நிலைப்படுத்தல் (Sanskritisation) என்பர். வீடுகளுக்கு பிராமணர்களை அழைத்து கிரியைகள் செய்வதையும் கண்டித்தார். கோயில்களில் சைவ ஆகம முறைப்படி பூசைகள் நடைபெற வேண்டியதை வலியுறுத்தினார். அவ்வாறு நடைபெறாத கோயில்களை பகிரங்கமாகவே கண்டித்தார். நாவலரது நெருக்குதல்களுக்கு பணிந்து பிராமணர்களும் சைவ ஆகமப்படியே பூசைகளை செய்யத் தலைப்பட்டனர். சைவ சமயத்தவர் செய்யக் கூடியவை எவை, செய்யக்கூடாதவை எவை, என்று விரிவாகவே வரையறுத்தார்.

சைவ சமயத்தைப் பரப்பும் நோக்கிலும், கிறித்தவ பிரச்சாரங்களை முறியடிக்கும் நோக்கிலும் பிரச்சாரங்களை மேற்கொண்டார், பிரசுரங்களை வெளியிட்டார்: பழந்தமிழ் நூல்களை அச்சேற்றினார். இந்த நோக்கில் ஒரு அச்சகத்தை இந்தியாவிலிருந்து வாங்கி வந்தார். "சைவப் பிரகாச வித்தியாசாலை" எனும் பெயரில் ஒரு பாடசாலையை தொடங்கி மாணவர்களுக்கு தமிழ் மொழி மூலம், சைவ சமயத்தையும் உள்ளடக்கியதாக கற்பித்தார். ஆனால் இவரது தமிழ் மொழி மூலக் கல்விமுறை அரச உத்தியோகத்தை பெற உதவாது என்பதால் இந்த முயற்சியானது ஆதிக்க சக்திகளது ஆதரவை பெருமளவில் பெறவில்லை. இவரது தொடர்ச்சியான செயற்பாடுகள் மூலம் சைவமும் தமிழும் தனது இழந்த செல்வாக்கை காலப்போக்கில் படிப்படியாக மீளவும் பெறத் தொடங்கின. இந்த நோக்கினூடாக சைவ - வேளாளர் சித்தாந்த மேலாண்மையை தமிழ் மக்களுள் மீண்டும் நிலை நாட்டினார்.

மனுதர்ம சாத்திரப்படி மனிதர்கள் பிராமணர், சத்திரியர், வைசிகர், சூத்திரர் என நால்வகை வர்ணங்களாக பாகுபடுத்தப்பட்டனர். இந்தப் பாகுபாட்டின்படி ஈழத்தில் பிராமணர்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து சாதியினரும் சூத்திரர்கள் என்ற கடைநிலையைச் சேர்ந்தோரே. ஆனால் நாவலர், சூத்திரர் என்ற பகுதியினரை சற்சூத்திரர், அசற் சூத்திரர் என இரண்டாக வகைப்படுத்தினார். சற்சூத்திரர் என்போர் நல்ல சூத்திரர் எனவும், அவர்கள் உயர்ந்த சாதியினர் எனவும், இது வெள்ளாளரைக் குறிப்பதாகும் எனக் குறிப்பிட்டார். அசற் சூத்திரர் என்பது கெட்ட சூத்திரர் எனவும், இது தாழ்த்தப்பட்ட மக்களைக் குறிப்பதாகும் எனவும் விளக்கினார். நாவலரது இந்த விதமான பாகுபாடானது, மனுதர்மத்தின் நால்வகை வர்ண பாகுபாட்டையும் மீறி, "பஞ்சமர்" என்ற ஐந்தாவது வகையினரின் தோற்றத்திற்கு காரணமானது. தமிழ் சமூகத்திலுள்ள சாதிய ஒடுக்கு முறைகளுக்கு கடவுளின் பேரால் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்து, சாதிய நெறிகளை மீறுவதானது சைவ நெறிகளை மீறுவதாகும் எனக்கூறி சாதிய ஒழுங்குகளை கண்டிப்பாக கடைப்பிடிக்குமாறு வலியுறுத்தினார். தாழ்த்தப்பட்டவர்களும் இறைவனை அடைய முடியும் எனவும், அதற்கு நந்தனின் வழியை நாடவேண்டும் எனவும் போதித்தார். இது அப்போதே பலவீனப்படத் தொடங்கியிருந்த சாதிய இறுக்கங்களை மீளவும் பலப்படுத்தியது. தான் தொடங்கிய பாடசாலையில், தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு அனுமதியளிக்க கண்டிப் பாகவே மறுத்துவிட்டார். இத்துடன் நின்று விடாது, வேளாளர் மத்தியிலிருந்து உருவான சைவ குருக்களுக்கு பிராமண அந்தஸ்தையும் கோரினார். மாமிசம் உண்ணும் வட இந்திய பிராமணர்களுக்கெல்லாம் உயர் அந்தஸ்து வழங்கப்படலாம் எனின் சைவ நெறிகளை மிகவும் கண்டிப்பாக கடைப்பிடித்து வரும் சைவ குருக்களை ஏன் பிராமணர்களாக கருதக் கூடாது, என்பதாக அவரது வாதம் இருந்தது. இந்த நோக்கில் தம்மை ஆரியர்களது வழித்தோன்றல்களாகவும் காட்டத் தலைப் பட்டார். இந்த இடத்தில் நாவலர் வெறுமனே சித்தாந்த ரீதியான சமஸ்கிருத மயமாக்கலுடன் திருப்தியுறாது, பௌதீக ரீதியாகவே தம்மை பிராமணர்களாக சித்தரிக்க முனையும் அளவிற்கு செல்வதை காண முடிகிறது.

மிஷனரிமார்கள் தமது செயற்பாடுகளைத் தொடங்கிய காலத்தில் மதப்பிரச்சாரங்களை ஆங்கிலத்திலேயே பெரிதும் மேற்கொண்டார்கள். இதனால் ஆங்கில புலமைமிக்க ஒரு சிறுபகுதியினரை மட்டுமே இவர்களால் எட்ட முடிந்தது. காலப் போக்கில் மிஷனரிகளில் கல்வி கற்ற உள்ளூர் கிறித்தவர்களே போதகர்களாக நியமனம் பெற்று தமிழ் மொழி மூலம் தமது பிரச்சாரங்களை முன்னெடுக்க முனைந்ததானது மிகவும் தாக்கமுள்ளதாக அமைந்தது. இந்த போதகர்கள் மாலையில் வீடு வீடாகச் சென்றும், தெருவிளக்குக் கம்பங்களின் கீழ் மக்களைத் திரட்டியும் போதிக்கத் தொடங்கினர். இதன் மூலம் கிறித்தவம் தமிழ் மயப்படத் தொடங்கியது. தமிழர்களை இலகுவில் நெருங்கி வந்தது. இப்படியாக கிறித்தவம் தமிழை இலகுவாக கையாள்வதை தடுக்கும் நோக்கில், தமிழ் கிறித்த வமயப்படுவதை தடுக்கும் நோக்கில் சைவமும் - தமிழும் இணைக்கப்பட்டு அவை பிரிக்கப்பட முடியாதென நாவலர் நிலைநாட்ட முனைந்தார். சைவத்திலிருந்து பிரிந்து விட்டால் தமிழ் அழிந்து விடும் என்ற வகையில் நாவலரும், அவர் வழி வந்தோரும் வலியுறுத்தியமை காரணமாக, சைவமும் - தமிழும் என்ற மரபு இன்று வரை செல்வாக்குள்ளதாகவே திகழ்ந்தது. பொதுவில் தமிழ் காப்பியங்கள் ஐந்தில், சிலப்பதிகாரமும், மணிமேகலையும் பௌத்த மதம் சார்பானவை என்பதும், தமிழ் மொழியில் மிகவும் உயர்வாகப் போற்றப்படும் திருக்குறளை எழுதிய வள்ளுவர் சமண சமயத்தவர் என்றே பொதுவாக கருதப்படும் நிலையையும் எடுத்து நோக்கினால் மேற் கூறப்பட்ட சைவமும்- தமிழும் என்ற பிணைப்பானது எவ்வளவு தூரம் தன்னிச்சையான, ஒருபக்க சார்பான புனைவாகும் என்பது தெளிவுறும். அத்துடன் பல கிறித்தவ பாதிரிமாரே தமிழைக் கற்று, அதில் மிகச் சிறப்பாகத் தேர்ச்சி பெற்று, தமிழுக்கு மிக உயர்ந்த பங்களிப்பை செய்துள்ளார்கள் என்பதும், (உதாரணம்) - வீரமா முனிவர் என்ற இத்தாலியரும், இன்னும் பலரும்- மறைக் கப்படுகிறது. அப்படி ஏதாவது ஒரு காரணத்தால் இந்த விதமான பங்களிப்பு பற்றி பேசும் போதும் கூட, கிறித்தவம் தமிழுக்கு ஆற்றிய தொண்டு, இஸ்லாம் தமிழுக்கு ஆற்றிய தொண்டு, என்பதாக பேசப்படுகிறதேயன்றி சைவம் தமிழுக்கு ஆற்றிய தொண்டு என்பதாகப் பேசப்படுவதில்லை. ஏனெனில் சைவமும் - தமிழும் ஒன்றேயென எடுத்துக் கொள்ளப்படுகிறது. சைவமும், தமிழும் ஒன்றேயென கொள்ளப்படும் மரபு இன்று வரை பலமானதாக இருந்து வருகிறது. இதன் விளைவுகள் தமிழ் மக்களது தேசிய விடுதலைப் போராட்டத்திலும் பாதிப்புகளை செலுத்தி யுள்ளதை நாம் பின்பு காணமுடியும்.

நாவலரது பணிகள் தமிழ் மொழி, சைவ சமயம் என்பவற்றுடன் மாத்திரம் நின்றுவிடவில்லை. அவர் சமூக



படிப்பகம்

www.padippakam.com

பணிகளிலும், அரசியலிலும் தனது தடங்களை பதிக்கவே செய்தார். 1876 இல் யாழ்ப்பாணத்தில் பஞ்சமும், கொலராவும் தலைவிரித்தாடிய போது அவற்றுக்கெதிரான சமூக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார். பஞ்சத்தின் கொடுமையை தவிர்க்கும் விதத்தில் ஏழைகளுக்கு கஞ்சி வார்த்தார். சில கொம்பனிகளை நிறுவி தமிழ் பிரதேச பொருளாதாரத்தில் பங்களிப்புகளை செய்ய முயன்றார். அத்தோடு சட்டசபையின் நியமன தமிழ் அங்கத்தவரான முத்துக்குமாரசாமி என்பவரது மறைவையொட்டி ஏற்பட்ட வெற்றிடத்திற்கு பொன். இராமநாதனை பிரேரித்து, அவருக்கு ஆதரவாக பிரச்சாரமும் செய்தார். இராமநாதனை எதிர்த்து போட்டியிட்ட "பிரிட்டோ" என்பவர் முத்துக்குமாரசாமியின் மருமகனாக இருந்தும், ஒரு கிறித்தவர் என்ற காரணத்தால், கிறித்தவ எதிர்ப்புணர்வு இந்தப் பிரச்சாரங்களில் தாக்கலாக வெளிப்பட்டு இராமநாதனின் வெற்றிக்கு உதவின. இப்படியாக இராமநாதன் சைவ - வேளாள சித்தாந்த மரபின் அரசியல் பிரதிநிதியாக வரப்பெற்றார். இவர் எவ்வாறு இந்த சக்திகளது நலன்களுக்காகச் செயற்பட்டார் என்பதை பின்பு பார்ப்போம்.

நாவலரின் பணிகள் இவ்வாறு பலதரப்பட்டவையாகவும், விரிவானவையாகவும் இருந்தன. பழந்தமிழ் நூல்களை அச்சேற்றுவது, பிரசுரங்களை வெளியிடுவது, பாடசாலை நடாத்தும் முயற்சி, அச்சியந்திரம் வாங்கியது, அடிக்கடி மேற்கொண்ட தென்னிந்திய பயணங்கள் போன்ற அவரது நடவடிக்கைகள் அதிக பணச் செலவு மிக்கவையாக இருந்தன. இந்த வகையில் நாவலருக்கு வேண்டிய நிதியைக் கொடுத்து ஆதரித்து வந்தவர்கள் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையிலிருந்த கந்துவட்டிக்காரர்களான செட்டிகளாவர். இவர்கள் சாதிய அடிப்படையில் வெள்ளாளரை விட சற்றுக் கீழ் நிலையில் இருப்பதாக கருதப்பட்டவர்களாவர். காலப் போக்கில் இவர்களும் படிப்படியாக வெள்ளாளர்களுடன் கலந்து விட்டனர். நாவலரது குடும்பப் பின்னணியும், அவரை ஆதரித்த சமூக சக்திகளது பின்னனியையும், அவரது சித்தாந்தம் வெளிப்படுத்திய நலன்களையும் சேர்த்துப் பார்க்கும் போது, அவர் அக்காலகட்டத்தில் யாழ்ப்பாண ஆதிக்க சக்திகளின் குரலாகவே திகழ்ந்தார் என்பது தெளிவாகிறது. யாழ்ப் பாணத்தில் பண்ணெடுங் காலமாகவே ஆதிக்கத்திலிருந்த சக்திகளது மேலாதிக்க நிலையை மிஷனரிகளின் நடவடிக்கைகள் பாதித்ததே இவர்களின் எதிர்ப்புணர்வின் அடிப்படையாக இருந்தது. இவர்களது நலன்கள் காக்கப்படுவதை நாவலர் தனது முன்னெடுப்புகள் மூலம் உத்தரவாதப்படுத்தினார். இதற்கு பிரதியுபகாரமாக இந்த சக்திகள் நாவலரை சமயக்குருக்கள் நால்வரான அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், சம்பந்தர் ஆகியோரோடு சேர்த்து ஐந்தாவது சமயக்குரவராக மதிக்கத் தொடங்கினர்.

கொலனித்துவ காலத்தில் கொண்டு வரப்பட்ட ஆங்கிலக் கல்வி, கிறித்தவமயமாக்கம் போன்ற செயற்பாடுகள் கொலனித்துவ ஆதிக்கத்தைப் பலப்படுத்தும் நோக்கில் கொண்டு வரப்பட்டவையாகும். ஆதலால் ஆங்கிலம், கிறித்தவமயமாக்கல் என்பவற்றிற்கு எதிராக சுதேசிய மக்களிடையே எழுந்த எதிர்ப்பியக்கங்கள் ஒரு விதத்தில் அந்நியராதிக்கத்திற்கு எதிரானது என்ற வகையில் "தேசியத்தன்மை" வாய்ந்தவை என்று பொதுவாக கூறப்படுவதுண்டு. சித்தாந்தத் தளத்தை மாத்திரம் எடுத்துக் கொண்டு பார்த்தால் இதில் ஓரளவு உண்மையும் இருக்கவே செய்கின்றது. ஆனால் தேசியவாத இயக்கங்கள் என்பவை சாராம்சத்தில் அரசியல் இயக்கங்களாகும். அதாவது அந்நியராட்சியை அகற்றிவிட்டு சுதேச மக்களது ஆட்சியை அமைப்பதை இலக்காக் கொண்டது, என்ற வகையில் அரசியல் தளத்திலேயே இந்தவிதமான இயக்கங்களது உண்மையான தேசியத் தன்மை மதிப்பிடப்பட வேண்டியதாகின்றது. எனவே இந்த இயக்கங்களை முன்னெடுத்தவர்கள் அரசியல் தளத்தில் அந்நியராதிக்கத்தை எவ்வாறு எதிர் கொண்டனர் என்பதிலேயே அவர்களது தேசியத் தன்மை இறுதியில் நிர்ணயிக்கப்படுகிறது. இந்த வகையில் பார்த்தால் நாவலர், அந்நியராட்சி கொண்டு வந்த கிறித்தவமயமாக்கல், ஆங்கிலக்கல்வி போன்றவற்றை எதிர்த்தாரேயொழிய, அந்நியராட்சியை அகற்றும் நோக்கம் கொண்டவராயிருக்க வில்லை. ஆங்கிலக் கல்வி காரணமாக, சைவசமய வாழ்க்கை பாரம்பரியத்திலிருந்து யாழ்ப்பாண மக்கள் பிழைக்கக்கூடாது என்பது தான் நாவலரின் அக்கறைக்குரியதாக இருந்தது. இந்த சைவசமய பாரம்பரியம் பிழைக்காத வரையில், இவர் அந்நியராட்சியை ஏற்றுக் கொள்ளவும், அதற்கு சேவை செய்யவும் தயாராகவே இருந்தார். இந்த வகையில் நாவலரது இயக்கத்தை மதமீட்பு இயக்கமாக சித்தரிப்பது தான் பொருத்தமானதாக இருக்கும்.

நாவலர் முதலில் நிறுவிய சைவப்பிரகாச வித்தியாசாலை வெற்றி பெறாத போதிலும், அவர் வழி வந்தோர் பிற்காலத்தில் ஆங்கில மொழி மூலம் கற்பிக்கும், சைவத்திற்கும், தமிழுக்கும் உரிய இடமளிக்கும், சைவசமய சூழலில் மாணவர்கள் கல்வி கற்கும் வசதியுள்ள பாடசாலைகளை நிறுவத் தொடங்கினர். 1888 இல் சைவ பரிபாலன சபை நிறுவப்படல், 1889 யாழ் இந்து கல்லூரி நிறுவப்படல், இதனை அடுத்து பல சைவ ஆங்கில பாடசாலைகள் நிறுவப்பட்டன. இப்பாடசாலைகள் சைவபரிபாலன சபையினால் கூட்டாக நிர்வகிக்கப்பட்டன. படிப்படியாக இவர்கள் கொலனித்துவ அரசின் நிதி உதவியையும் கோரிப் பெற்றுக் கொண்டனர். தமது கருத்துக்களை விரிவாகப் பரப்புவதற்கு உதவியாக, அப்போது இயங்கி வந்த புரொட்டஸ்தாந்து மதத்தவரின் "உதயதாரகை" (1870), கத்தோலிக்கர்களின் "கத்தோலிக்க பாதுகாவலன்" (1876) ஆகிய பத்திரிக்கைகளுக்கு இணையாக "இந்து சாதனம்"எனும் பத்திரிக்கையை 1889 இல் நிறுவினர். தமது பாடசாலைகளில் கற்பிக்கும் சைவ ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்காக "சைவ ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியை" 1928 இல் நிறுவினர். தமிழ் மக்கள் மத்தியில் மரபார்ந்த கல்வியை போதித்து வந்த வேதாந்த பாடசாலை பலப்படுத்தப்பட்டது. இதன் மூலம் பாலபண்டித, பண்டித, புலவர், வித்துவான் பட்டங்களுக்கான வகுப்புகளும் பரீட்சைகளும் நடத்தப்பட்டன. பின்னர் சித்த வைத்தியக் கல்லூரியையும் அமைத்துக் கொண்டனர். இப்படியாக மிஷனரிமாரின் கல்வி மற்றும் வலைப் பின்னலுக்கு இணையான ஒரு விரிவான வலைப்பின்னலை அமைப்பதில் சைவ வேளாள மரபினர் வெற்றி பெற்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

தமிழ் தேசத்தில் இன்று வரையில் நாவலர் வழிவந்த சைவ வேளாள சித்தாந்தம் மேலாண்மை வகிக்கும் சித்தாந்தமாகவே திகழ்ந்து வருகிறது. இது எவ்வாறு நிகழ்கிறது என்று பார்ப்போம். பிராமணர் என்ன தான் உயர்ந்த சாதியாக கருதப்பட்டாலும் கூட இவர்கள் கோயிலில் பூசை செய்வதும், ஒரு சில சடங்குகளைச் செய்வதும் என்பதற்கு மேலாக வேறெந்த வழியிலும் சமூகத்தில் தாக்கம் நிகழ்த்தும் வகையில் பங்கு பற்றுவது கிடையாது. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலும் கூட இவர்கள் கூறும் மந்திரங்கள் சமஸ்கிருத மொழியில் இருப்பதால், அந்நிகழ்வுகளில் பங்குபற்றுபவர்களுக்குப் புரிவதில்லை. இதனால் பிராமணர்களது பாத்திரம் வெறும் சடங்குகளைக் கடந்து, நேரடியான கருத்துத்தளத்தில் அதிகம் செயலாற்றுவதில்லை. பிராமணர் தமது பூஜையை, சடங்குகளை முடித்து இறங்கிய கையோடு, தமிழாசிரியர், வித்துவான், புலவர், பண்டிதர் போன்றவர்களுள் யாராவது ஒருவர் மேடையில் தோன்றுவார். இதற்கு மேல் கருத்தளவில் முழு சித்தாந்த நடவடிக்கைகளும் இவர்களின் கரங்களுக்கு வந்து விடும். பாடசாலைகளில் கூட ஆரம்பக்கல்வி முதல் க.பொ.த சாதாரண தரம் வரையில் தமிழ்மொழி, இலக்கியம், சமயம் ஆகிய பாடங்களை இதே ஆசிரியர்களிடம் மாணவர்கள் கற்கின்றனர். சைவமும் தமிழும் இணைந்திருப்பது பற்றியும் சைவ, வேளாள குடியில் பிறந்த தலைவர்கள் பற்றியும் இங்கு திரும்பத் திரும்ப புகட்டப்படுகின்றன.

கல்வியமைப்புகள் சித்தாந்த அரசியந்திரத்தின் பங்கை ஆற்றுவது பற்றிக் குறிப்பிடும் அல்துாசர், தொழிலாளர் தமது பிள்ளைகளை, அவர்கள் மிகவும் எளிதில் பலியாகக் கூடிய வயதில், அப்படியே முதலாளிகளின் கரங்களில் ஒப்படைத்து விடுவதாக குறிப்பிடுகின்றார். இங்கும் அதுவே நடைபெறுகிறது. மாணவர்கள், காலையில் பிரார்த்தனைக் கூட்டத்தில் தொடங்கி, மொழி, இலக்கியம், சமய பாடங்களினூடாக, தமிழ்த் தின விழாக்கள், சமய விழாக்கள், பெரியோரை நினைவு கூரும் நாட்கள் உட்பட மாணவர்கள் தம்மத்தியில் நடாத்தும் கவியரங்குகள், பட்டிமன்றங்கள் வரையிலான எல்லாத் துறைகளிலும் இதே விடயங்கள் திரும்பத் திரும்ப பேசப்பட்டு, மாணவர்களின் பிஞ்சு மனங்களில் இந்த கருத்துக்கள் மிகவும் ஆழமாக பதியவைக்கப்படுகின்றன. பாடசாலையில் விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன தான் ஆனால் இவையும் கூட விபூதி அணிந்த, சைவ - வேளாள சித்தாந்தத்தை பகிரங்கமாகவே ஆதரிக்கும் ஆசிரியர்களி னாலேயே கற்பிக்கப்படுகின்றது. இவர்கள் பாடத்திட்டத் திலுள்ள பரம்பரையியல், கூர்ப்பு போன்ற விடயங்களையே சரியாக கற்பிப்பதில்லை இதனால் இந்த விடயங்கள் மாணவர்களில் ஏற்படுத்தும் தாக்கங்களும் மிகவும் சொற்பமானதே.

பாடசாலையில் தொடங்கி, குடும்பத்தினூடாகவும் ஏனைய சமூக நிறுவனங்கள், பொதுவிழாக்கள் போன்ற வற்றிலும் இதே கருத்துக்களே திரும்பத் திரும்ப ஒப்புவிக்கப் படுகின்றன. இப்படியாக சைவ - வேளாள சித்தாந்தமானது மேலாண்மை பெற்ற சித்தாந்தமாக நிலை பெறுகின்றது. இந்த சித்தாந்தமானது சமூகத்தில் மேலாண்மை செலுத்தும் ஏனைய சித்தாந்தங்களான ஆணாதிக்க சித்தாந்தத்துடனும், யாழ்மையவாதத்துடனும் கூட்டமைத்துக் கொள்கின்றது. தமிழ் மக்கள் மத்தியில் தேசியவாதம் பலம் பெறுகையில் அதுவும் கூட இந்த சித்தாந்தங்களுடன் இணைந்தே வெளிப்படுகின்றது.

பிற்போக்கான சித்தாந்தங்கள் இளம் வயதிலேயே மனதில் ஆழமாக பதிக்கப்படுவதுடன் தொடர்ந்தும் மேலாண்மை செலுத்தும் நிலையில் இருந்து வருவதானது சம்பந்தப்பட்டவர்கள் விழிப்புணர்வு பெறுவதற்கும், புரட்சிகரமாக செயற்படுவதற்குமான வாய்ப்புகளுக்கே வரம்பிடக் கூடியவை. அப்படி சிலர் விழிப்புணர்வு பெற்றாலும் கூட, இந்த பிற்போக்கு சித்தாந்தங்களின் பிடியிலிருந்து விடுபட்டு வருவது இலகுவானதல்ல. இப்படிப்பட்ட பிற்போக்கு சித்தாந்தங்கள் மேலாண்மை செலுத்தும் ஒரு சமுதாயத்தில் புரட்சிகர சக்திகள் பெருமளவில் உருவாவதும், பலம் பெறுவதும் இலகுவானதல்ல. ஆதலால் இந்த பிற்போக்கு சித்தாந்த மேலாண்மையை உடைத்தெறிந்து, புரட்சிகர சித்தாந்தங்களின் மேலாண்மையை நிலை நாட்டுவது எந்தவொரு புரட்சிகர மாற்றத்திற்கும் அவசியமான முன்னிபந்தனையாகிறது. இன்று தேசிய விடுதலைப் போராட்டத்தில் தோன்றியுள்ள பிற்போக்குத்தனங்களை தேசியவாதத்துடன் பிணைந்துள்ள பிற்போக்கு சித்தாந்தங்களுடன் இணைத்தே புரிந்து கொள்ளப்பட வேண்டும். இன்றைய நெருக்கடிகளுக்கு புரட்சிகர மாற்றை உருவாக்க முனையும் புரட்சியாளர்கள் தேசியவாதத்துடன் பிணைந்துள்ள பிற்போக்கு சித்தாந்தங்களை அகற்றிவிட்டு அந்த இடத்தில் புரட்சிகர சித்தாந்தங்களை இணைப்பதன் மூலமே தமது நோக்கங்களை சாதிக்க முடியும்.

## பொருளாதாரம்

மரபார்ந்த ஈழத்து சமூகத்தில் யாழ்ப்பாணத்தில் சாதிய உற்பத்தி முறையை அடிப்படையாகக் கொண்ட வர்த்தக பயிர் செய்கையும், கிழக்கில் "நிலப்பிரபுத்துவ" உற்பத்தி முறையை ஒத்த விவசாயமும் பிரதான பொருளாதார முயற்சிகளாக இருந்தன. சாதிய உற்பத்தி முறையில் நிலங்கள் அனேகமாக வேளாளர்களின் கைகளிலேயே இருந்தது. ஏனைய தாழ்த்தப்பட்ட மக்களில் மிகப் பெரும்பாலானோர் இவர்களை அண்டி வாழ்ந்த அடிமை - குடிமைகளாகவோ, அல்லது பிரதானமாக இந்த வேளாளருக்கு சேவை செய்பவர்களாகவோ இருந்தார்கள். கிழக்கில் போடிமாருடைய கரங்களில் பெருந்தொகையான நிலங்கள் குவிந்திருந்தன. விவசாயிகள் ஒருவித பண்ணையடிமைத்தனத்தை ஒத்தமுறையில் இவர்களுடன் பிணைக்கப்பட்டிருந்தனர். தென்னிலங்கையில் தமது வர்த்தக முயற்சிகளை கொண்டிருந்த, பெரும்பாலும் தீவுப் பகுதியை சேர்ந்த, வேளாள வர்த்தகர்களிடம் பெருமளவில் செல்வம் திரண்டிருந்தது. கந்துவட்டிக்காரரான செட்டிமாரும் பெருஞ் செல்வம் திரட்டியிருந்தனர்.

மரபார்ந்த சமூகத்தில் மீன்பிடி பெரும்பாலும் பிழைப்பை நடாத்துவதற்கு போதியதாகவே இருந்திருக்க முடியும். ஆனால் இங்கும் பெரும் சம்மாட்டிகளும், இவர்களை அண்டிப் பிழைக்கும் கூலியாட்களும் இருந்தனர். கடலோடிகள் தென்னிந்திய மன்னர்கள் மற்றும் செல்வந்தர்களினது கப்பல்களைச் செலுத்தியும், படிப்படியாக தாமே கப்பல்களை உடமையாக வைத்திருந்தும் செல்வத்தை திரட்டினார்கள்.

கொலனித்துவம் அறிமுகப்படுத்திய ஆங்கிலக் கல்வியால் பெரிதும் பயனடைந்தவர்கள் வேளாள பிரிவினரேயாவர். யாழ்ப்பாணத்தின் குறிப்பான பௌதிக நிலமைகள் காரணமாகவும், சமூக ரீதியான மேல் நோக்கிய இடம்பெயர்வுகளுக்கு அதிக வாய்ப்புகள் காணப்பட்டதாலும், கல்வி என்பது ஒருவித பொருளாதார முதலீடாகவே நடைபெற்றது. கல்வி கற்றுத் தேர்ந்து உயர் அரச பதவிகளிலும் நிபுணத்துவ சேவைகளிலும் சேர்ந்து கொண்டவர்கள், நல்ல வசதியுடன் இருந்தார்கள். மலேசியா, சிங்கப்பூர் உத்தியோகங்கள் பெற்றவர்களது நிலையும் ஓரளவு உயர்ந்தது. ஏனையோர் உள்ளூரில் அடிமட்ட நிர்வாகத்துடன் தொடர்புடைய பதவிகளையும், ஆசிரியர் போன்ற தொழில் வாய்ப்புகளையும் பெற்றனர்.

சுதந்திரத்தின் பின்வந்த சிங்கள அரசு, கடலோடிகள் அதுவரை காலம் செய்து வந்த இறக்குமதி தொழில்களை தொடர அனுமதி வழங்க மறுத்தது. இன்நிலையில் ஒரு பகுதியினர் தமது மரபார்ந்த தொழிலை கைவிட்டு தமது செல்வத்தை வர்த்தக துறைகளுக்கு (ஏற்றுமதி இறக்குமதி சார்ந்த) நகர்த்தினர். இன்னொரு பகுதியினர் தமது மரபார்ந்த தொழிலையே அரசின் ஒடுக்குமுறை நோக்கமுடைய



படிப்பகம்

தடையுத்தரவையும் மீறித் தொடர்ந்தும் செய்து வந்தனர். இப்போது இந்த தொழில் கள்ளக்கடத்தல் எனக் கருதப்பட்டது. கீழ் மட்டத்தில் செயற்பட்ட இப்பிரிவினரில் பலரும் வெளிநாட்டுக் கப்பல்களில் சிப்பந்திகளாக தொழில் தேடிப் போயினர்.

சுதந்திரத்தின் பின் வந்த அரசுகள் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்க மேற்கொண்ட சில நடவடிக்கைகளும், "பசுமைப் புரட்சியும்" சாதிய உற்பத்தி முறையை அதிகம் பாதித்தது. விவசாயம் படிப்படியாக ஒரு குறிப்பிட்ட அளவில் இயந்திரமயப்படல்; உழைப்பாளிகளாக இருந்த பெருந்தொகையான தாழ்த்தப்பட்ட மக்களை விடுவித்து அவர்களை உழவு, நடுகை, அறுவடை காலத்தில் மட்டும் கூலிக்கு அமர்த்தப்படுவர்களாக மாற்றியது. தாழ்த்தப்பட்டவர் களுள் ஒரு பகுதியினர் இந்த விவசாய கருவிகளையும், உழவு யந்திரங்களையும் கையாளவும், திருத்தவும் பயிற்சி பெற்றார்கள். இவர்களுள் "கராஜ்" போன்றவற்றை தொடங்கிய தாழ்த்தப்பட்டவர் களிடையே ஓரளவு பொருளாதாரப் பலம் கூடியது. பொதுவில், விவசாயத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் வேளாளருக்கு சாதகமான விளைவுகளையே ஏற்படுத்திய போதிலும் காலப் போக்கில் அரசின் இறக்குமதி கொள்கையினால் இவர்கள் அதிகம் பாதிக்கப்படலானார்கள்.

யாழ்ப்பாணத்தின் குறிப்பான பொருளாதார முறை மையும், விவசாயத்தில் படிப்படியாக நடைபெற்ற மாற்றங்களும் நடுத்தரப் பிரிவினரை அரச உத்தியோகங்களையே பெரிதும் சார்ந்திருக்குமாறு செய்தது. இந்த நிலையில் அரசு மேற்கொண்ட அரச கரும மொழிக் கொள்கையும், தரப்படுத்தல் முறைமையும் இந்த நடுத்தர பிரிவினர் மீதான நேரடியான பொருளாதார ஒடுக்குதலாகவும் அர்த்தம் பெறலாயிற்று.

சுதந்திரத்தைபொட்டிய காலகட்டத்தில் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் கிடைத்த வேலை வாய்ப்புகள் படிப்படியாக அந்த அரசுகளினால் மறுக்கப்பட்டன. இதனால் வெளிநாட்டு வேலை வாய்ப்பும் குறிப்பிட்ட காலம் குறைவடைந்தன. ஆயினும் அரச கரும மொழிக் கொள்கை காரணமாக தமது பதவி உயர்வு வாய்ப்புகள் மறுக்கப்பட்ட நிபுணத்துவ துறைசார் தமிழர்கள் படிப்படியே புலம் பெயரத் தொடங்கினார்கள். 70 களில் தேசிய நெருக்கடி தீவிர மடையவே, பிற்காலத்தில் சிறப்புத் திறன், பட்டங்கள் இல்லாத இளைஞர்கள் பெருமளவில் புலம் பெயர்ந்தனர். (இன்று புலம் பெயர்ந்துள்ளவர்கள் தமிழீழத்தின் ஒரு குறிப்பான பொருளாதார சக்தியாக மாறியுள்ளனர்) இந்த புலம் பெயர்விலும், ஓரளவு பொருளாதார, கல்வி வசதியுடைய ஆதிக்க சமூகப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களே அதிகம் ஈடுபட்டனர். ஆயினும் பிற்காலத்தில் தாழ்த்தப்பட்ட பிரிவினைச் சார்ந்தோரும் இடம் பெயரத் தொடங்கினர். இது சம்பந்தப்பட்ட சிலரைப் பொறுத்தளவிலாவது அவர்களது குடும்பங்களின் பொருளாதார நிலையை மாற்றியுள்ளது எனலாம்.

தேசிய ஒடுக்குதல் என்பது பொருளாதாரத் துறையிலும் வெளிப்படவே செய்தது. பொதுவாகவே நவகாலனித்துவ பிடியில் சிக்கிய ஸ்ரீலங்கா அரசு உள்ளூரில் கைத்தொழில் முதலீடு செய்ய அதிக அக்கறை காட்டவில்லை. அப்படிச் செய்த சிறுபகுதிகளிலும் கூட, அது இனப்பாகுபாட்டு கொள்கையை கடைப்பிடித்தது. இதனால் ஈழத்தில் கைத்தொழில் துறை வளர்ச்சி மிகவும் பாதிக்கப்பட்டது. தமது சொந்த செல்வத்தை முதலீடு செய்ய முனைந்த தமிழருக்கும் அரசு அனுமதி வழங்க மறுத்தது. தென்னிலங்கையில் அரசின் இனவாத அணுகு முறைகளும் கலவரங்களும் கொழும்பை மையமாகக் கொண்ட வர்த்தகர்களையும் பாதிக்கவே செய்தது. இவற்றுடன் கூடவே தமிழ் மக்களது பழக்க வழக்கங்களும் - குறிப்பாக செல்வத்தை சீதனத்தில் முடக்குவதும் - ஒரு குறிப்பிட்ட அளவில் இதில் பங்களித்திருக்கவே செய்யும்.

தேசிய விடுதலைப் போராட்டம் உக்கிரமடையத் தொடங்கிய பின்பு அரசின் பொருளாதார ஒடுக்குதல் தீவிரமடைந்தது. இன்று பெருமளவில் விவசாய மீனவ சிறுகைத்தொழில் முயற்சிகள் கைவிடப்பட்டுள்ளன. பலர் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர். அரசின் பொருளாதார தடைகள் காரணமாக, புதிய கருப்புச் சந்தைக்காரர் கூட்டமொன்று புதிய செல்வந்தர்களாக உருவாகி வருகின்றனர். இத்தோடு புலம் பெயர்ந்தவர்களது பொருளாதாரமும் இன்று ஒரு குறிப்பான காரணியாக ஆகிவிட்டுள்ளது.

எனவே பொருளாதார ஒழுங்கமைவை ஒட்டு மொத்தமாக எடுத்துக் கொண்டால். . . . .

1) மேல் நிலையில் இருப்போர்.
மரபார்ந்த ரீதியாக தென்னிலங்கையில் வர்த்தகத் துறையில் ஈடுபடுபவர்கள்,- வெள்ளாள பிரிவினர். பின்பு தமது செல்வத்தை வர்த்தக துறைகளுக்கு திருப்பிய கடலோடிகள்: செட்டிமாரின் வழித்தோன்றல்கள்: கிழக்கில் போடிமார்.

2) நடுத்தரப் பிரிவினர்

உயர் நடுத்தர வர்க்கம் (Upper Middle Class)
நிபுணத்துவ துறைகளில் இருப்போர், பணக்கார விவசாயிகள், சம்மாட்டிகள், சிறுகைத்தொழிலில் வெற்றி பெற்றோர், பெரும் வர்த்தகர்கள்.

நடுத்தர, நடுத்தர வர்க்கங்கள் (Middle-Middle Class)
அரச உயர்மட்ட ஊழியர்கள், நடுத்தர விவசாயிகள், நடுத்தர மீனவர், நடுத்தர வர்த்தகர், நடுத்தர தொழில் முனைவோர்.

கீழ் நடுத்தர வர்க்கம்: (Lower Middle Class)
அரச கீழ் மட்ட ஊழியர், ஆசிரியர், வறிய விவசாயிகள், மீனவர், சிறு வர்த்தகர்கள், தொழில் துறைப் பாட்டாளிகள்.


3) கீழடுக்கு பிரிவினர்
கூலி விவசாயிகள், கூலி மீனவர்கள், தொழிலாளர், கடைச்சிப்பந்திகள், வேலையற்றோர், Under Classes உதிரிகள்


இப்படியான பொருளாதார அடுக்கமைவில் பெருஞ் செல்வந்தராக இருப்பவர்கள் மிகச் சிறுபான்மையினரே. இவர்கள் பெரிதும் வெள்ளாளராக இருக்கின்றார்கள். கடலோடி வகையினர் சிறுபகுதியினராக இருக்கின்றனர். உயர் நடுத்தரப் பிரிவினரும் சிறுபகுதியினரே. இவர்களும் பெரும்பாலும் உயர் சாதியினைச் சேர்ந்தோரே. சிலர் சாதி ரீதியில் அடுத்தடுத்த நிலையில் ஆனால், பொருளதார ரீதியில் வெற்றி பெற்றவர்களாவர். நடுத்தர - நடுத்தர மற்றும் கீழ் நடுத்தர பிரிவினர் மிகப் பெரும்பான் மையினர் ஆவர். முறையாக கைத்தொழில் மயமாக்கம் நடைபெறாத மரபான சமூகங்களைப் போன்றே இங்கும் இந்த மத்தியதரவர்க்கம் எண்ணிக்கையில் மிகப் பெரிதாக உள்ளது. மிகவும் வறுமைப்பட்ட உயர்சாதியை சேர்ந்தோரே இதில் குறிப்பிடத்தக்க அளவு உண்டு. ஆனால் நடுத்தர தாழ்த்தப் பட்ட சாதியினரே இதில் மிகவும் பெரும்பான்மையினராக உள்ளனர்.

## பல்வேறு கட்டமைப்புகளின் இணைவில் சமூக உருவாக்கத்தை இனங்காண்பது:

தமிழ் தேசத்தின் சமூக உருவாக்கத்தை புரிந்து கொள்வதற்கு, அதனை மேலே குறிப்பிட்ட யாழ்மையவாதம், சாதியம், பால்வாதம், சைவ சித்தாந்தம், பொருளாதாரம் போன்ற

கட்டமைப்புகளின் சிக்கலான உறவில் புரிந்து கொள்ள வேண்டும். இக் கட்டமைப்புகள் பரஸ்பரம் ஒன்றன் மீது மற்றொன்று தாக்கம் நிகழ்த்துகிறது. இங்கு 'தாக்கம் நிகழ்த்துவது' என்று குறிப்பிடுவதை முதலில் தெளிவு படுத்தி யாக வேண்டியுள்ளது. அதாவது, ஒவ்வொரு கட்டமைப்பும் தனக்குள் முரண்பட்ட கூறுகளைக் கொண்டுள்ளது. இதில் ஒன்று ஆதிக்க நிலையிலும் மற்றது கீழ்ப்படிவான நிலையிலும் உள்ளது. இரண்டு கட்டமைப்புகள் ஒன்றன் மீது மற்றொன்று தாக்கம் நிகழ்த்தும் போது ஒவ்வொரு கட்டமைப்பிலும் உள்ள ஆதிக்க / கீழ்படிவான அம்சங்கள், மற்றைய கட்டமைப்பிலுள்ள ஆதிக்க / கீழ்படிவான அம்சங்கள் மீது செயற்படுகின்றன. இப்படியாக செயற்படுகையில் ஆதிக்க அம்சமானது ஒரு குறிப்பிட்ட அம்சத்தை இன்னும் பலப்படுத்த உதவும். கீழ்படிவான அம்சம் அதே அம்சத்தை பலவீனப் படுத்தவும் உதவும். உதாரணமாக. . . . யாழ் மையவாதம், பால்வாதம் ஆகிய இரண்டு கட்டமைவுகளை மட்டும் கருத்தில் கொண்டு இவற்றின் இடைச் செயற்பாடுகளைக் கவனித்தால், யாழ் மையவாதமானது தமிழ் தேசத்தை யாழ்ப்பாணத்தவர் / பிறர் என படிநிலைப்படுத்தியிருக்கிறது. பால்வாதமானது தமிழ் தேசத்தை ஆண் / பெண் என்று படிநிலைப்படுத்தியுள்ளது. இந்த இரண்டு கட்டமைப்புகளும் பரஸ்பரம் தாக்கம் நிகழ்த்துகையில் அந்தந்த கட்டமைப்புகளில் இவ்விரண்டு கூறுகளுமே ... தாக்கம் நிகழ்த்தவே செய்யும். இதன்படி. . . .




இந்த இரண்டு கட்டமைப்புகளின் செயற்பாடுகளை மட்டும் கருத்திற்கெடுத்தால், அதில் 4 சமூகப் பிரிவுகள் உருவாகின்றன. இந்த நான்கு சமூகப் பிரிவுகளும் படிநிலை வரிசையில் சமமானவை அல்ல. யாழ்மையவாதம், பால்வாதம் ஆகிய இரண்டிலும் சாதகமாகவுள்ள யாழ் - ஆண் இந்த படிநிலை வரிசையில் மிகவும் உயர்நிலையில் இருப்பார். யாழ்மையவாதம், பால்வாதம் ஆகிய இரண்டிலும் கீழ் நிலையிலுள்ள கூறுகளின் இணைவால் உருவான பிற - பெண் மிகவும் கீழ் நிலையில் இருப்பார். இரண்டு கட்டமைவுகளில் ஏதாவது ஒன்றில் பலமாகவுள்ள யாழ் - பெண், பிற - ஆண் ஆகியன வரிசையில் இடைநிலையில் அமைவர். இந்த இரண்டிலும் எது மேல் நிலையில் இருப்பது என்பது யாழ்மையவாதம், பால்வாதம் ஆகிய இரண்டிலும் எது மேலாதிக்கம் வகிக்கிறது என்பதைப் பொறுத்து தீர்மானிக்கப் படுகிறது. உதாரணமாக, யாழ்மையவாதமானது பால் வாதத்தை விட ஆதிக்க நிலையில் இருப்பின், இந்த இரண்டின் படிநிலையானது, யாழ் - பெண், பிற - ஆண், என்ற ஒழுங்கில் வரும். மாறாக, பால்வாதமானது யாழ் மையவாதத்தின் மீது மேலாதிக்கம் செலுத்தும் நிலையில் இருப்பின் பிற - ஆண், யாழ் - பெண் என்ற படிநிலை வரிசை பெறப்படும். எனவே இந்த இரண்டு கட்டமைப்புகளின் பரஸ்பர செயற்பாட்டை மொத்தமாக எடுத்தால். . .

| | | |
|---|---|---|
| யாழ் / ஆண் | | யாழ் / ஆண் |
| யாழ் / பெண் | அல்லது | பிற / ஆண் |
| பிற / ஆண் | | யாழ் / பெண் |
| பிற / பெண் | | பிற / பெண் |

என்ற அதிகார படிநிலை வரிசைகளுள் ஏதாவது ஒன்று பெறப்படும்.

இப்படியாக, யாழ்மையவாதம், பால்வாதம், சாதியம், சைவசித்தாந்தம், பொருளாதாரம் ஆகிய ஐந்து கட்டமைப்புகளும் பரஸ்பரம் தாக்கம் நிகழ்த்தும் நிலையில், இந்த பலவகையான கட்டமைப்புகளும், இந்த ஒவ்வொரு கட்டமைப்பினுள்ளும் காணப்படக் கூடிய பலவிதமான முரண்பட்ட கூறுகளும் பரஸ்பரம் தாக்கம் நிகழ்த்துவதனால், மிகவும் பலதரப்பட்ட சேர்க்கையினால், மிகவும் பல்வகையான சமூகசக்திகள் உருவாகும். இந்த சமூக சக்திகள் பல்வகைப்பட்டதாக இருப்பதுடன் மாத்திரமன்றி, இந்த சமூக சக்திகளுக்கிடையில் ஒரு திட்டவட்டமான அதிகாரபடி நிலை வரிசையும் காணப்படும். இந்த அதிகாரபடிநிலை வரிசையானது எவ்வாறு அமையும் என்பதை, ஒவ்வொரு கட்டமைப்பினதும் குறிப்பான தாக்கம் நிகழ்த்தும் பண்பை அல்லது அளவை (Rate of Effectivity) அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்க முடியும். இவற்றுள்ள யாழ் / சைவ / வேளாள / ஆண் / பூர்சுவாக்கள் மிகவும் உயர் நிலையில் இருப்பர். எல்லாக கட்டமைப்பு களிலுமே கீழ் படியான நிலையிலுள்ள கூறுகளின் சேர்க் கையால் உருவாகும் சமூக சக்தி மிகவும் கீழ் நிலையில் இருக்கும். இடையிலுள்ள படிநிலை வரிசையானது ஒவ்வொரு கட்டமைப்பின் தாக்கம் நிகழ்த்தும் விதத்தை சரியாக மதிப்பிடுவதன் மூலமே தீர்மானிக்கப்படலாம்.

இப்போதைக்கு ஓரளவு எளிமைப்படுத்தப்பட்ட வடிவத்தில் யாழ்மையவாதம், பால்வாதம், சாதியம், சைவசித்தாந்தம், ஆகிய 4 கட்டமைப்புக்களின் இணைவால் உருவான (ஓரளவிற்கு எளிமைப்படுத்தும் நோக்கில் பொருளாதாரத்தை இப்போதைக்கு விட்டு விடுவோம்) சமூக சக்திகளின் படிநிலை வரிசையை எடுத்துக் கொண்டால் அது பின்வரும் ஒழுங்கில் காணப்படும்.

மேல்நிலை:-

யாழ் / சைவ / வேளாள / ஆண்
யாழ / கிறித்துவ / வேளாள / ஆண்
யாழ் / சைவ / கரையார் / ஆண்

இடைநிலையில்


கிழக்கு, வன்னி / சைவ / வேளாள / ஆண்
கிழக்கு, வன்னி / கிறித்துவ / வேளாள / ஆவ்
யாழ் - சைவ / கிறத்துவ, வேளாள / கரையார / பெண்

கடைநிலையில்

யாழ் - தாழ்த்தப்பட்ட மக்கள்
கிழக்கு, வன்னி இடைநிலை - தாழ்த்தப்பட்ட மக்கள்
யாழ் துரும்பர் சாதிப் பெண்கள்

இதே படிநிலை வரிசையை மையம் - விழிம்பு சார்ந்த வரைபடமாக காட்டினால்

www.padippakam.com




இந்த வரைபடத்தில் முதல் நிலையர் முதலாம் வட்டத்தினுள்ளும், இடைநிலையர் இரண்டாம் வட்டத்தினுள்ளும் கடைநிலையர் முன்றாம் வட்டத்தினுள்ளும் வருவர்.

முதல் வட்டமானது ஆதிக்க சக்திகளைக் காட்டுகிறது. (மிகவும் மத்தியில் இருப்பது - யாழ் - சைவ - வேளாள - ஆண்)

இந்த முதலாவது வட்டமானது சமூகத்தின் ஆதிக்க சக்த்திகளைக் குறிக்கிறது. இவர்களுக்கு எந்த ஒழுங்க மைப்பை பேணுவது வாய்ப்பாக இருக்கிறது. அதிலும் இந்த முதலாம் வட்டத்தினுள் மிகவும் மையமான நிலையை வகிப்பவரான யாழ் / சைவ / வேளாள / ஆண்கள் பொறுத்த வரையில் அந்த ஒழுங்கமைப்பை அப்படியே பேணுவது மிகவும் வாய்ப்பானதாக உள்ளது. இதற்காக இவர்கள் எந்த விலைகொடுத்தேனும் இவ்வொழுங்கைப் பேண முயல்வர். இந்த வட்டத்தினுள் 2ம் ,3ம் நிலையை வகிக்கும் யாழ்-கிறிஸ்தவ -வேளாள ஆண்கள், யாழ்- சைவ-கரையார-ஆண்கள், ஆகியோரைப் பொறுத்தவரையில் பொதுவில் இந்த ஒழுங்கமைவு அவர்களுக்கு வாய்பானதே. ஆனால் முதலாம் வட்டத்தினுள் யார் மிகவும் மையமான நிலையை பெறுவது என்பதற்காக இவர்கள் 1ம் நிலையிலுள்ளவர்களுடன் போட்டியிடுகின்றனர்.

3ம் வட்டத்திலுள்ள கடை நிலை மக்கள், சமுதாயத்தில் விளிம்பு நிலையிலிருப்பவர்களாகும். இந்த சமுதாய அடுக்கு மைவினால் மிகவும் பாதிப்பவர்கள் இவர்களேயாகும். இதனால் சமுக ஒழுங்கமைப்பு முற்றாக மாற்றியமைக்கப் படுவதில் தமது நலன்கள் கைகூடும் நிலையில் இருப்போர் இவர்கள். ஆனால் வரலாற்றுப் பூர்வமாகவே விழிப்புணர்வு பொறுவதற்கான வாய்ப்புகள் மறுக்கப்பட்டு, காலாதிகாலமாக அறிவுத்துறை மடமையில் வைக்கப்பட்டிருப்பதகால, இவர்கள் தமது சமுக நிமை, வரலாற்றுப்பாத்திரம், தமது கடமைகள் பற்றிய விழிப்புணர்வைப் பெறுவது இலகுவானதாயிராது. எனவே இவர்கள் சமுகமாற்றத்தை வேண்டி நிற்பவர்கள் என்ற வகையில் புரட்சிகரமான பிரிவுகளாக இருப்பினும் கூட, விழிப்புணர்வு பற்றிய நிலையில் பின்தங்கியே நிற்பார். சரியான புரட்சிகர தாபனமானது இவர்களை அணிதிரட்டி, வழிகாட்டி தலமை தாங்குமானால் எந்தவொரு புரட்சிகரமாற்றத்திலும் தீர்க்கமான பங்காற்றக்கூடியவர்கள் இவர்கள்.

2வது வட்டத்தில் இருப்போர் சமுக அதிகாரப்படி நிலையில் இடைநிலையில் இருப்பவர்களாகும். மையத்தை நோக்கி நகரவிரும்புவர். ஆனால் அது சாத்தியப்படாததால், ஒழுங்கமைவை மாற்றும் நோக்கம் இவர்களுக்கு வருகிறது. இத்தோடு 3வது வட்டத்திலுள்ளவர்கட்கு கிடைக்காத கல்வி, கலாச்சார வாய்ப்புகள் இவர்களுக்கு கிடைப்பதனால் இவர்களிடம் விழிப்புணர்வு மிகவும் உயர்வானதாக இருக்கும். எனவே எந்த ஒரு மாற்றத்திற்குமான முன்னோடிப் புரட்சியாளர்கள் இந்தப் பிரிவிலிருந்தே தோன்றுவர். எண்ணிக்கையில் இந்த இடைநிலையினர் மிகவும் பெரிதாக இருப்பதால் எந்தவொரு சமுகமாற்றத்திலும் கனிசமாக பங்காற்றக்கூடியவர்கள். அடுக்கமைவில் இவர்கள் வகிக்கும் "இடைநிலை" காரணமாக முரண்பட்ட நலன்களால் இவர்கள் முட்டி மோதவும் செய்வர். எப்போது இவர்கள் தமது முரண்பட்ட நிலைக்கு முடிவுகட்டி, விளிம்பு நிலை மக்களுடன் ஒரு புரட்சிகர ஜனநாயக கூட்டை அமைப்பது சாத்தியப்படுமோ அப்போது புரட்சி கைகூடும். இந்த இடைநிலையினரின் மிகவும் முக்கியமான பாத்திரம் காரணமாக, இப்பிரிவினரைச் சேர்ந்து, சில குறிப்பிட்ட சக்திகளான மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், வேலையற்றவர் போன்றோர், புரட்சிகர போராட்டங்களில் முன்னணிப்பாத்திரம் வகிக்கக் கூடியவர்களாகும். முன்னோடிப் புரட்சியாளர்கள் இந்த சமூக சக்திகளையே ஆரம்பத்தில் தமது இலக்குகளாகக் கொண்டு செயற்பட வேண்டும். இந்த சக்திகளை அணிதிரட்டுவதில் பெறு ம் வெற்றியானது படிப்படியாக இடைநிலை, விளிம்பு நிலை மக்கள் அனைவரையும் அணிதிரட்டி அதற்கூடாக ஒரு புரட்சிகர மாற்றத்தை நிகழ்த்தி முடிப்பது சாத்தியப்படும்.

ஆதிக்க சக்திகளை எடுத்துக் கொண்டால், பொருளாதாரம், சித்தாந்தம், அரசியல் ஆதிக்கம் ஒரே ஒரு சமூக பிரிவிடமே இருக்க வேண்டும் என்பதில்லை. பொருளாதார ஆதிக்கமானது வேளாள, செட்டி, கடலோடி சமூகப் பிரிவுகளைச் சேர்ந்த செல்வந்தர்களிடம் உள்ளது. அரசியல் அதிகாரமானது வேளாளரிடத்தில் இருக்கிறது. இவர்கள் தான் யாழ்ப்பான இராட்சிபத்தின் கீழும் முதலிமார்களாக இருந்தவர்கள். பின்பு போத்துக் கீசர்கள் வாழ்ந்த போது இவர்கள் தொடர்ந்து சமூக அதிகார நிலையிலேயே இருந்தனர். உள்ளுர் மக்களது பரிபாலனத்திற்காக, அதுவரை சமூக வழக்கில் இருந்துவந்த மரபார்ந்த சட்டங்களைப் போர்த்துக்கீசர் தொகுத்தபோது, அதனைப் படித்துப்பார்த்து ஒப்புதல் அளித்தவர்கள் முதலிமாரே! பின்பு இதே குடும்பங்களைச் சேர்ந்தவர்களே ஆங்கிலக் கல்வி கற்று அரசியல் அதிகாரங்களிலும் இருந்தனர். பிற்காலத்தில் ஆங்கிலேயர் மேற்கொண்ட சீர்திருத்தங்களைத் தொடர்ந்து, சட்ட சபையில் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்ததும் இதே குடும்பங்களைச் சேர்ந்தோரேயாவர்.

சித்தாந்த மேலான்மையானது சைவ - வேளாள சக்திகளிடத்திலேயே மரபார்ந்து இருந்து வந்தது. பிற்காலத்தில் ஆங்கிலக் கல்வியும், கிறிஸ்தவமயமாக்கலும் சைவ- வேளாள சித்தாந்த மேலான்மையைப் பலவீனப் படுத்தியது. ஆயினும், நாவலரும் அவர் வழிவந்தோரும் யாழ், சைவ, வேளாள சித்தாந்த மேலாமையை மீண்டும் நிறுவிக் கொண்டனர். தமிழ் தேசத்தில் யாழ் , சைவ வேளாள ஆணாதிக்க சித்தாந்தமானது மேலான்மை நிலையை தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டுள்ளது. இது அவ்வப்போது சமூகத்தில் எழும் ஏனைய சித்தாந்த போக்குகளையும் தன்னோடு இணங்கச் செய்து கொள்வதில் வெற்றியும் பெற்றுள்ளது. முதலாளித்துவ உறவுகள், மற்றும் புலம் பெயர்வுகள் போன்றவை சமூகத்தில் சில முதலாளித்துவ விழுமியங்களைக் கொண்டு வந்த போதும், அரசியல் சீர்திருத்தங்கள் ஜனநாயகவிழுமியங்களாக கொண்டுவந்த போதும், தேசிய ஒடுக்கு முறை தேசியவாத சித்தாந்தத்தை கொண்டு வந்த போதும், இந்த சித்தாந்தங்களையெல்லாம் முகங்கொடுத்து, அந்த சித்தாந்தங்களுடன் இணைந்து, அவற்றின் உள்ளாற்றளை மழுங்கச் செய்து, நெகிழ செய்து தனக்குள் அடக்கிக் கொண்டு செல்கிறது.

யாழ், சைவ, வேளாள, ஆணாதிக்க சித்தாந்தமானது அரசியல், பொருளாதார, சித்தாந்த தளத்திலுள்ள ஆதிக்க



படிப்பகம்

www.padippakam.com

சக்திகளை ஒன்றிணைந்து ஆதிக்கக் கூட்டை உருவாக்கு கிறது. இதனால் இந்த பலதரப்பட்ட சமூகப் பிரிவுகளும் இணைந்து ஒரு பலமான ஆளும் வர்க்கம் போல தொழிற்பட முடிகிறது. இதே வேளை இந்த சித்தாந்த மேலாண்மையானது இடைநிலை, விளிம்பு நிலை மக்களையும் தனது சித்தாந்த பிடியினுள் பேணி வரவும், ஜனநாயக - புரட்சிகர மக்கட் பிரிவினர் தமக்குள் இணைந்து ஒரு பலமான புரட்சிகர கூட்டை உருவாக்கத் தடையாகவும் இருந்து வருகின்றது.

## சமூக சக்திகளின் முரண்பாடுகளும் அரசியல் தளத்தில் அவை வெளிப்படும் விதமும்.

"ஏடறிந்த வரலாறு என்பது வர்க்கப் போராட்டங்களின் வரலாறே" என்றனர் மார்க்சும், எங்கெல்ஸ்சும். தமிழ் தேசத்தின் சமூக உருவாக்கத்தை சிக்கலானதாக எடுத்துக் கொண்டு அணுக முனையும் நாம், தமிழ் தேசத்தின் அரசியல் வரலாறு என்பது யாழ், சைவ, வேளாள, ஆணாதிக்க சக்திகளும் அதற்கு எதிரான சக்திகளுக்கும் இடையிலான போராட்ட வரலாறே என்று சுருக்கமாக கூறலாம். தமிழ் தேசத்தின் சமூக உருவாக்கத்தில் மிகவும் மையமான இடத்தை வகிக்கும் யாழ், சைவ, வேளாள, ஆணாதிக்க சக்திகள் தமது நிலையை தொடர்ந்தும் பேணவே முயன்று வந்துள்ளனர். இதற்காக இவர்கள் முழுத்தமிழ் தேசத்தின் நலன்களை விலையாகக் கொடுக்கவும் தயங்கியது கிடையாது. கொலனித்துவத்தில் இவர்கள் அந்நிய சக்திகளை ஆதரித்து வந்தனர். சுதந்திரத்தின் பின்பு சிங்களகொவி - தமிழ் வேளாள கூட்டை அமைத்து தமிழ் சமூகத்தில் எழக் கூடிய எந்தவிதமான சீர்திருத்த, சமூக மாற்றத்திற்கான இயக்கங்களையும், முன்னெடுப்புகளையும் தடுத்து வந்தனர். அன்றைய பொன்-இராமநாதன் தொடங்கி ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஊடாக இன்றைய யோகேந்திரா துரைசாமி வரையில் தொடர்ந்த இந்தப் போக்கு விரிவாக பரிசீலிக்கப்பட வேண்டியதொன்றாகும். இப்படியாக சைவ - வேளாள மரபானது தனக்கென நேரடியாக ஒரு அரசியலை பெற்றிருந்தார்கள் என்ற உண்மையானது, இந்த மரபிற்கு வெளியில் இருந்தவர்கள் இந்த சக்திகளது சித்தாந்த மேலாண்மைக்கு அப்பாற்பட்டவர்களாக இருந்தார்கள் என்று அர்த்தப்படமாட்டாது. சைவ - வேளாள மரபின் அரசியல் பிரதிநிதிகளை நேரடியாக எதிர்த்து மோதிய சக்திகளும் கூட வெவ்வேறு அளவில் யாழ், சைவ, வேளாள, ஆணாதிக்க சித்தாந்தத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டேயிருந்தனர். இதனால் சைவ - வேளாள மரபை எதிர்த்தவர்கள் வெற்றி பெற முடியவில்லை அல்லது, பௌதீக ரீதியில் வெற்றி பெற்றாலும் கூட அரசியலில் அதே சித்தாந்த மரபையே தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்பவர்களாகவே இருந்தனர். இதனை நாம் தமிழ் தேசத்தின் அரசியல் வரலாற்றில் சில முக்கியமான நிகழ்வுகளை எடுத்து பரிசீலிப்பதன் மூலம் கண்டு கொள்ளலாம்.

வரலாறு என்று கூறும் போது, முதலிலேயே நாம் ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும். வரலாறு என்பது உள்ளவற்றை அப்படியே பதிவு செய்யும் ஒரு நேர்மையான ஆவணமல்ல. அந்தந்த சமூகத்தில் வாழ்ந்த வரலாறு பற்றிய பிரக்ஞையுள்ள சக்திகள், தத்தமது நலன்கள், கண்ணோட்டங்கள் சார்ந்து, வரலாற்றுப் போக்கிலிருந்த சிலவற்றைப் பொறுக்கியெடுத்து, பதிவுசெய்து அதுவே உண்மையான வரலாறென சாதித்து வந்துள்ளன. உரிமைகள் மறுக்கப்பட்ட விளிம்பு நிலை மக்கள் வரலாற்றில் எப்போதுமே பேசாப் பொருளாகவே வைக்கப்பட்டுள்ளனர். இந்த விதத்தில் வரலாறு என்பது ஒருவித புனைவுதான்.

வரயாற்றைப் பற்றி பிரக்ஞையுள்ள மனிதர் தமது வரலாற்றை பதிவு செய்ய முனைந்த காலம் தொட்டே மனித குல வரலாறானது தனிமனித சாகசங்களாக பதிவு செய்யப்படும் ஒரு மரபே இருந்து வந்துள்ளது. இந்த மரபை விமர்சித்த மார்க்ஸ் ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பில் வரலாறு பற்றிய ஒரு விஞ்ஞான பூர்வமான வாசிப்பை மேற்கொண்டார். இவ்வாறே இதுவரை கால வரலாறுகள் என்பவை ஆண்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்டவை என பெண்ணிலை வாதிகளும் விமர்சிப்பர். இப்படிப் பார்க்கும் போது தமிழ் தேசமும் கூட யாழ், சைவ, வேளாள, ஆண் சார்ந்த ஒரு வரலாற்றையே கொண்டுள்ளது. இது தவிர்ந்த தமிழ் தேசத்தின் ஏனைய சமூகப் பிரிவுகளின் பாத்திரங்களை இந்த வரலாறு இருட்டடிப்புச் செய்து விட்டது என்ற வகையில், இந்த வரலாறானது தமிழ் தேசத்தின் முழுமையான வரலாறாக அமையமாட்டாது. தமிழ் தேசத்தின் விளிம்பு நிலை மக்கள் சார்ந்த ஒரு வரலாற்றை எழுதும் தேவை இருக்கிறது. ஆனால், இது ஒரு வரயாற்றாசிரியரின் பணியாகும். புரட்சியாளர்கள் என்ற வகையில், தரப்பட்ட வரலாற்றை விமர்சிப்பதும், அதனை மீள எழுத வேண்டிய தேவையை வலியுறுத்துவதும் என்பதற்கு மேல் இப்போதைக்கு நாம் செல்வதற்கில்லை.

இன்று நாம் கைவரப் பெறுவதும் ஒரு விதத்தில் ஆதிக்க சக்திகள் சார்பான வரலாறே என்ற போதிலும், அதுவும் கூட சமூகத்தில் ஆதிக்கத்திற்காக போட்டியிட்ட பல்வேறு குழுக்களது நடங்களைக் கொண்டுள்ளது என்ற வகையில் சில முக்கியமான வரலாற்று ஓட்டங்களை இனங்கண்டு கொள்ள உதவும்.

இன்னொரு முக்கிய விடயத்தையும் ஆரம்பத்திலேயே குறித்துக் கொள்வது பயனுடையதாகும். அதாவது, யாழ், சைவ, வேளாள, ஆணாதிக்க சித்தாந்தமானது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வேளாள சாதியின் சைவ ஆணையே அசல் தமிழனாக சித்தரித்தது. இவர்கள் தவிர்ந்த அனைவரையும் "பிறர்" ஆகவே கருதி வந்தது. இந்த பிறர் என்போர், எப்போதும் யாழ், சைவ, வேளாள, ஆணைவிட குறைந்தவர்களாகவே கருதப்பட்டு இழிவானவர்களென ஒதுக்கி வைத்தது. ஏதாவதொரு காரணத்தால் இந்த பிறரையும் உள்ளடக்கியதாக ஒரு அடையாளப்படுத்தல் இதற்குத் தேவைப்பட்ட போது அதில் ஏனைய சமூகப் பிரிவுகள் மீது ஆதிக்கம் செலுத்தும் நோக்கம் அப்பட்டமாகவே வெளிப்பட்டது.

வேளாளரை அதிகார நிலைப்படுத்தும் நாவலரது முயற்சிகளுக்கெதிரான முதலாவது சவால் கடலோடிகள் மத்தியிலிருந்தே எழுந்தது. கடலோடிகள் தமது பொருளாதார நடவடிக்கைகள் மூலமாக பெருமளவு செல்வத்தை திரட்டியிருந்தனர். இவர்கள் முல்லைத்தீவு, மட்டக்களப்பு பகுதிகளில் கூட காணிகளை வாங்கியிருந்தனர். இப்படியாக பொருளாதார ரீதியில் தம்மை உயர்த்திக் கொண்ட கடலோடிகள் சமூக ரீதியிலும் தமது அந்தஸ்தை உயர்த்திக் கொள்ள விளைந்தனர். ஆனால் வேளாளரை அதிகார நிலைப்படுத்தும் நாவலரின் முயற்சி காரணமாக கடலோடி களது விருப்பங்கள் நிறைவேறத் தடைகள் உருவாகின. இதனால் வெள்ளாளரை அதிகார நிலைப்படுத்தும் நாவலரது முயற்சிகளுக்கு எதிராக இவர்கள் குரலெழுப்பத் தொடங்கினர். (இது பற்றிய விரிவான தகவல் "தராக்கி"யின் கட்டுரையொன்றில் இடம் பெற்றிருந்தது. தற்போது அக் கட்டுரை கைவசம் இன்மையால், இது பற்றி விரிவாக குறிப்பிட முடியவில்லை இதனை திருத்தி எழுதும் போது அந்த விபரங்களையும் சேர்த்துக் கொள்ளலாம் எனக் கருதுகின்றோம்)

பொதுவாகவே பல்வேறு பிரதேசங்களிலும் இருந்த கரையார் சமூகத்தவர் கிறித்தவர்களாக மதம் மாறிய போதிலும் வல்வெட்டித்துறை பகுதியின் கரையார் சமூகத்தவர்கள் எவருமே இவ்வாறு மதம் மாறாமையானது அவர்கள் பெற்றிருந்த பொருளாதார பலத்துடன் இணைத்துப் பார்க்கப்பட வேண்டியதாகும்.

யாழ், சைவ, வேளாள, ஆணாதிக்க சித்தாந்தத்தின்



படிப்பகம்

www.padippakam.com

நேரடியான அரசியல் பங்கு பற்றுதல் பொன். இராமநாதனுடன் தொடங்குகிறது. 18.. இல் சட்டசபையின் நியமன தமிழ் பிரதிநிதியான முத்துக்குமாரசாமி என்பவரின் மறைவைத் தொடர்ந்து, அதாவது மருமகனான பிரிட்டோ என்பவர் அந்த இடத்திற்கான நியமனத்தைக் கோரி அதற்கான பிரச்சாரங்களில் ஈடுபட்ட போது, நாவலர் இராமநாதனின் பெயரை முன்மொழிந்து இராமநாதனுக்காக பிரச்சாரங்களில் ஈடுபட்டார். முத்துக்குமாரசாமி தனக்குப் பின்பு தனது இடத்திற்கு பிரிட்டோ நியமிக்கப்படுவதை விரும்பியிருந்தார். ஆயினும் பிரிட்டோ ஒரு கிறிஸ்த்தவர் என்பதைக் காரணமாகக் காட்டி சைவ வேளாள சக்திகள் அவருக்கு எதிராக தீவிரமான பிரச்சாரத்தை மேற்கொண்டனர். இறுதியில் இந்த நியமன ஆசனம் இராமநாதனுக்குக் கிடைத்தது. இப்படியாக யாழ். சைவ, வேளாள, ஆளாதிக்க மரபானது தனது அரசியல் பிரதிநிதித்துவத்தை வென்று கொண்டது. இராமநாதனின் பிற்கால அரசியல் நடவடிக்கை முழுவதுமே இந்த சைவ. வேளாள மரபிற்கு சேவை செய்யும் நோக்கிலேயே அமைந்ததைக் காண முடியும். நாவலரின் மறைவின் போது இராமநாதன் சட்டசபையிலும் அஞ்சலி உரையாற்றியிருந்தார்.

இன்று தமிழ், முஸ்லீம் மக்களது உறவுகளில் ஏற்பட்டுள்ள மோசமான நெருக்கடிகள் இந்த சைவ - வேளாள எழுச்சியுடன் தொடர்புடையதாகும். தென்னிந்தியாவில் பல்லவர்கள் மீண்டும் பலம் பெற்ற போது ஏற்கனவே அங்கு முஸ்லீம்களாக மதம் மாறியிருந்தவர்கள் மீது மிகக் கடுமையான நெருக்கடிகளைக் கொடுக்கத் தொடங்கினர். இதனால் பாதிப்புற்ற ஒரு பகுதியினர் இலங்கைக்கு இடம் பெயர்ந்தனர். இவர்கள் முதலில் நாகர் கோயில் கடற்கரையில் வந்திறங்கி மிருசுவிலில் குடியிருந்தார்கள். பின்னர் நல்லூருக்கு இடம் பெயர்ந்தார்கள். "உசன்" என்பது "ஹீசைன்" என்ற முஸ்லீம் பெயரின் திரிபு என்பர். நாவலரது காலத்தில் நல்லூரில் முஸ்லீமகளுக்கு எதிரான நெருக்கடிகள் தொடர்ந்தன. இதனால் இவர்கள் நாவாந்துறைக்கு இடம் பெயர நேரிட்டது. அவ்வாறு இடம் பெயரும் போது நல்லூர் பகுதியில் முஸ்லீம் பெரியார் ஒருவரது "அடக்கஸ்தலம்" "கபுறடி" ஒன்று இருந்தது. அதனையும் விழுங்கும் விதத்திலேயே நல்லூர் கந்தசாமி கோயில் விஸ்தரிக்கப்பட்டது. யாழ்ப்பாண சைவ-வேளாள மரபின் மிகவும் முக்கியமான ஒரு ஆலயம், சைவ சித்தாந்த மரபுகளுக்கு மாறான விதத்தில் வடிவமைக்கப் பட்டிருப்பதன் இரகசியம் இது தான்.

சைவ, வேளாள - முஸ்லீம் உறவுகள் இவ்விதமாக முறுகல் நிலையில் இருந்த போதே, இலங்கை முழுவதும் வாழ்ந்த முஸ்லீம்களை தமிழர்களாக வகைப்படுத்துவதும், அதன் முலம் முஸ்லீம்களுக்கான அரசியல் பிரதிநிதித்து வத்தை தாமே பெற்றுக் கொள்ளவும் கருதி இந்த சைவ வேளாள சக்திகள் முயற்சிகளை மேற்கொண்டன. இப்படியாக தமது பிரதிநிதித்துவத்தை தமிழ் அரசியல்வாதிகள் பெற்றுக் கொள்வதற்கு எதிராக முஸ்லீம் தலைமை குரலெழுப்பி, முஸ்லீம்களுக்கென தனியான அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்வதில் வெற்றி பெற்றது. இந்த சர்ச்சைகளின் போது முஸ்லீம்களை தமிழர்களாக வகைப்படுத்துவதில் இராமநாதன் முனைப்பாக இருந்தார். இதே இராமநாதன், 1915இல் முஸ்லீம்களுக்கு எதிராக சிங்கள இனவெறியர்கள் செயல்பட்ட போது, முன்பு தன்னால் தமிழர்களாக வகைப்படுத்தப்பட்டு, அவர்களின் பிரதிநிதித்துவத்திற்கும் உரிமை பாராட்டப்பட்ட அந்த முஸ்லீம் மக்களுக்கு எதிராக சிங்களவர் தரப்பில் செயற்பட்டார்.

1915 இல் முஸ்லீம்களுக்கு எதிரான கலவரங்களின் போது, தமிழ் மக்களின் பிரதிநிதியான இராமநாதனுக்கு இரண்டு கடப்பாடுகள் இருந்தன.

1) முஸ்லீம்களுக்கு எதிராக சிங்கள இனவாதம் செயற்பட்ட விதத்தில் போதிய விழிப்புணர்வு பெற்று தமிழ் மக்களை சிங்கள இனவாதத்தின் தாக்குதலில் இருந்து பாதுகாப்பதற்கான முன் முயற்சிகளில் ஈடுபடுவது.

2) முன்பு குறிப்பிட்ட காலம் வரையில் தன்னால் தமிழர்களாக வகைப்படுத்தப்பட்டவர்கள் என்ற வகையிலும், குறிப்பிட்ட காலம் முஸ்லீம்களது அரசியல் பிரதிநிதித்த வத்தை அனுபவித்தவர்கள் என்ற வகையிலும், சிங்கள இனவாதத்திற்கு பலியாகக் கூடிய நிலையில் இருந்த இன்னோர் பிரிவினரான தமிழரின் பிரதிநிதி என்ற வகையிலும் சிங்கள இனவாத சக்திகளின் ஒடுக்கு முறைக்கு எதிராக செயற்படுவது.

ஆனால் இந்த இரண்டு கடப்பாடுகளையும் கைவிட்டு சிங்கள தலைவர்களது உதவிக்கு இராமநாதன் விரைந்தார். குறைந்த பட்சம் தாம் ஒரு தமிழர் பிரதிநிதி என்பதையும் மறந்தார். அந்தளவிற்கு சிங்கள கொவி - தமிழ் வெள்ளாளர் கூட்டு பலமானதாக இருந்தது. இக்கலவரத்திற்கு காரணமானவர்கள் என கைது செய்யப்பட்டு சிறையிலிடப் பட்டிருந்த சிங்கள அரசியல் தலைவர்களை விடுவிப்பதற்காக, முதலாம் உலகயுத்தக் காலத்தில் கடலில் பிரிட்டிஸ் கப்பல்கள் தாக்கப்படக் கூடிய அபாயங்களையும் பொருட்படுத்தாது, இங்கிலாந்து வரை சென்றுவாதிட்டார். சிங்கள தலைவர்கள் விடுதலையானார்கள் இதனை சாதித்து நாடு திரும்பிய இராமநாதனை சிங்கள தலைவர்கள் இரதத்தில் வைத்து வீதிகளில் தாமே இழுத்துச் சென்றனர்.

பொன். இராமநாதன் எவ்வாறு சைவ வேளாளரது நலன்களுக்காக செயற்பட்டார் என்பதைக் காட்டும் விதத்தில் இன்னும் சில முக்கிய நிகழ்வுகளை குறிப்பிட முடியும்.

1) யாழ்ப்பாணத்தில் மரபு ரீதியாக இறுதிக்கிரி கைகளுக்கான உரிமை மறுக்கப்பட்ட சாதியான கோவிய சமுகத்தில் ஒரு பெண் இறந்தபோது அவர்கள் பறை அடித்து மரண ஊர்வலத்தை நடாத்தினர். இதனை வெள்ளாளர்கள் தடுத்து நிறுத்தவே பெரும் சச்சரவு தோன்றி, இறுதியில் பிரச்சனை நீதிமன்றம் வரை சென்றது. அங்கு வெள்ளாளர் தரப்பில் இராமநாதன் தோன்றி தேசவழமைச் சட்டத்தின்படி வெள்ளாளர் தடுத்தது சரியே என வாதிட்டார்.

2) 1920 களில் பாடசாலையில் மாணவர்கள் அனை வருக்கும் சமஆசனம் வழங்க வேண்டும் என கொலனித்துவ அரசின் கல்வித்துறை பணித்தது. இதனை வெள்ளாளர் கடுமையாக ஆட்சேபித்தனர். இது பெரும் மோதலாகி இருதரப் பினரும் பரஸ்பரம் பல பாடசாலைகளை எரிக்குமளவிற்கு போனது. இப்போது இந்த சீர்திருத்தத்தை எதிர்த்துக் குரல் கொடுத்தவர் இராமநாதன்.

3) கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விடுதியில் பயிற்சி பெறும் ஆசிரியர்கள் அனைவரும் ஒன்றாக இருந்து உணவருந்துமாறு கலாசாலையை நடத்திய மிஷன் நிர்வாகம் பணித்தது. இதனை வெள்ளாளர் எதிர்த்தனர் "சம ஆசனம், சமபந்தி, போசனம் போன்றவை இந்து வாழ்க்கை நெறிகளுக்கு விரோதமானது" என்று இராமநாதன் கவனருக்கு கொடுத்த மனுவில் தெரிவித்திருந்தார்.

இப்படியாக ஐரோப்பியர் தாமாக கொண்டு வந்த ஒப்பீடளவில் சிறிய சீர்திருத்தங்களைக் கூட மூர்க்கமாக எதிர்த்த சைவ - வேளாள சாதித் திமிரின் சின்னமாக இராமநாதன் திகழ்ந்தார். இவரது இன்னுமொரு நடவடிக்கை இன்னும் முக்கியத்துவமானதாகும். டொனமூர் அரசியலாப்பு சீர்திருத்தக் குழுவினர் **சர்வசன வாக்குரிமை** வழங்க முன்வந்த போது இதன் மூலம் பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் வாக்குரிமை வழங்கப்படுவதை இராமநாதன் தீவிரமாக எதிர்த்தார். இது கும்பலாட்சிக்கு வழி வகுக்கும் என்றார். அத்தோடு நில்லாது



படிப்பகம்

www.padippakam.com

"பெண்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் வாக்குரிமை அளிப்பது இந்து வாழ்கை நெறிக்கு கேடு விளைவிக்கும்" என வாதிட்டார்.

இராமநாதன் போன்றோரின் ஆட்சேபங்களையும் மீறி டொனமூர் குழுவினர் சர்வசன வாக்குரிமையை உள்ளடக்கிய தமது புதிய அரசியல் யாப்பை முன் வைத்தனர். இந்த அரசியல் யாப்பின் கீழ் முதன் முதலாக சர்வசன வாக்கெடுப்பு முறையில் அகில இலங்கையிலும் தேர்தலை நடாத்த கொலனித்துவ அரசு முன்வந்த போது, கிட்டத்தட்ட இராமநாதன் முன்வைத்த காரணங்களுக்கு நேரெதிரான காரணங்களுக்காக, டொனமூர் அரசியல் யாப்பை நிராகரித்து இந்த சர்வசன வாக்கெடுப்பை யாழ்ப்பாணத்தில் இன்னொரு குழு பகிஷ்கரித்தது. இந்த பகிஷ்கரிப்பு இயக்கத்தை வெற்றிகரமாக நடாத்தியவர்கள் யாழ் இளைஞர் கொங்கிரஸ் சை சேர்ந்தவர்களாவர்.

யாழ் இளைஞர் கொங்கிரஸ் ஆனது வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரியில் கற்பித்த ஆசிரியர்கள், மாணவர்கள் என்பவர்களை மையமாகக் கொண்டு 1924 இல் தொடங்கப்பட்டது. தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, பெண்விடுதலை, தாய் மொழிக்கல்வி, இனஐக்கியம், தேசிய உடையணிதல், மதச்சார்பின்மை போன்ற கொள்கைகளை முன்னெடுத்தது. இதனை நாம் தமிழ் மக்கள் வரலாற்றில் தோன்றிய முதலாவது சமூக ஜனநாயக இயக்கம் என அழைக்கலாம். இப்படிப்பட்ட ஒரு இயக்கம் சைவ வேளாளருக்கு வெளியில், அதாவது கிறிஸ்தவ இளைஞர்கள் மத்தியில் தான் முதலில் உருவானது என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் இது ஆரம்ப முதலே சைவ வேளாள பிரிவின் ஜனநாயக கூறுகளையும் தன்னுள் கொண்டிருந்தது. வருடந்தோறும் மாநாடுகளை நடாத்திய இந்த அமைப்பானது மாநாட்டில் தாழ்த்தப்பட்ட மக்கள் கலந்து கொண்டு சமமாக அமரவும், சமபந்தி போசனை செய்யவும் உற்சாகப்படுத்தியது. யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்டவர்களை இவ்வாறு நடாத்திய முதல் அமைப்பு யாழ் இளைஞர் கொங்கிரசே என்று Daily News பத்திரிகை எழுதியது. மகாத்மா காந்தியின் இலங்கை விஜயத்தை ஏற்பாடு செய்து நடாத்தியதுடன், அந்நிய பொருள் எதிர்ப்பு இயக்கத்தையும் நடாத்தியது. 1929 இன் மாநாட்டில் "பூரண சுய இராச்சியம்" தீர்மானத்தை நிறைவேற்றியது. பாடசாலைகளில் சமஆசனம், சமபந்தி போசனம் பற்றிய பிரச்சனைகள் எழுந்த போது இராமநாதனின் நிலைப்பாட்டிற்கு எதிராக இந்த நடவடிக்கைகளை ஆதரித்தது. பெண்களின் அரசியல் பங்கு பற்றுதலுக்கும் கோரிக்கை விடுத்தது.

இலங்கைத் தமிழர் வரலாற்றில் முதல் தடவையாக சைவ வேளாள ஆதிக்க சக்திகளுக்கு சவாலாக ஓர் இளைஞர் அமைப்பு தோன்றுவதும், அது படிப்படியாக செல்வாக்குப் பெற்று வளர்வதையும், மரபார்ந்த சைவ வேளாள அரசியல் தலைமையை அது விமர்சித்து வந்ததையும் சைவ வேளாள சக்திகளால் சகித்துக் கொள்ள முடியவில்லை. எனவே இளைஞர் கொங்கிரசிற்கு எதிராக அவதூறுகளை பரப்பினார்கள். **'கிறிஸ்தவ செல்வாக்கு'** என்பது இவற்றுள் பிரதானமானதாகும். கொங்கிரஸ் இதற்குப் பதிலளிக்கும் விதத்தில் சுவாமி விபுலானந்தரை ஒரு மாநாட்டிற்கு தலைமை தாங்க அழைத்தது. தலைமையுரையில் சுவாமி விபுலானந்தர் சாதிய முறைமை இந்து மதத்திற்கு எதிரானது என கண்டித்துப் பேசினார். 1930 இல் திருநெல்வேலி சைவ ஆசிரியர் கலாசாலையில் மாநாடு நடந்த வேளையில் மாநாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களும் கலந்து கொள்ள அனுமதித்ததை காரணமாகக் காட்டி சாதித் தடியர்கள் தாக்குதல் நடாத்தி மாநாட்டை குழப்ப முயன்றனர். இதனால் மாநாடு வேறு இடத்திற்கு நகர்த்தப்பட்டது.

டொனமூர் அரசியல் யாப்பை யாழ் இளைஞர் கொங்கிரஸ் பின்வரும் காரணங்களுக்காக விமர்சித்தது. சுய இராச்சியத்திற்கு வழி வகுக்காமை, 21 - 30 வயதுப் பெண்க ளுக்கு வாக்குரிமை வழங்கப்படாமை; கவர்னரிடத்தில் குவிக்கப்பட்டிருந்த அதிகாரங்கள்; இந்த அரசியல் யாப்பு சுய இராச்சியத்தை நோக்கி போதியளவு செல்லவில்லை என்ற காரணத்தை முன்வைத்து, இந்த அரசியல் யாப்பின் கீழ் நடைபெற்ற தேர்தலை 1930 இல் பகிஷ்கரிக்க முடிவு செய்தனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்த சைவ வேளாள சக்திகள், இளைஞர் கொங்கிரஸ்சின் பகிஷ்கரிப்பை மீறி தேர்தலில் கலந்து கொள்ள முதலில் முனைந்த போதிலும், இளைஞர் கொங்கிரஸ்சின் பலம், மக்கள் மத்தியிலிருந்த செல்வாக்கின் முன் பணிந்து போக நேரிட்டது.

1920 களிலேயே தீண்டாமை, பெண்விடுதலை போன்ற கோரிக்கைகளை முன்வைத்து ஒரு இயக்கம் செயற்பட்டது என்பது சாதாரணமானதல்ல. 1930 இல் இது யாழ்ப்பாணத்தில் சைவ - வேளாள சித்தாந்தத்தின் மேலாண்மையை முறியடித்திருந்தது. எனினும் இளைஞர் கொங்கிரஸிடம் காணப்பட்ட கோட்பாட்டு, அரசியல், தாபனரீதியான தவறுகள், குறை பாடுகள் காரணமாக இது தனது சித்தாந்த மேலாண்மையை தொடர்ந்து பேண முடியாமல் போனது. தேர்தல் பகிஷ்கரிப்பு இயக்கத்தால் அதிர்ந்து போன சைவ-வேளாள சக்திகள் ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையில் தம்மை மீள ஒழுங்கமைத்து. இளைஞர் கொங்கிரசை இலக்காக வைத்து அதன் மீது அவதூறுகளையும் வன்முறைகளையும் ஏவிவிட்டு இந்த இயக்கத்தை முறியடிப்பதில் வெற்றி பெற்றனர். இத் தாக்குதலில் சைவ வேளாள சித்தாந்தம் நன்கு பயன்படுத்தப்பட்டது. இதன் மூலம் சைவ வேளாள சக்திகளின் புதிய தலைவராக ஜி.ஜி. பொன்னம்பலம் வந்து சேர்ந்தார்.

பொன். இராமநாதனின் மறைவிற்குப் பின் சைவ வேளாள மரபின் அரசியல் பிரதிநிதியாக ஜி.ஜி. பொன்னம்பலம் செயற்பட்டு வந்தார். Bracegirdle என்பவரை நாடு கடத்தும் கவர்னரின் உத்தரவை எதிர்த்து சட்டசபையில் மிகப்பெரும்பான்மையான சிங்கள, தமிழ் உறுப்பினர்கள் வாக்களித்த போது, இதனை ஆதரித்து வாக்களித்ததன் மூலம் கொலனித்துவ அரசின் பாலான விசுவாசத்தை வெளிப்படுத்தினார். சுதந்திரத்தின் பின்பு சிங்கள தலைமை மலையக மக்களது குடியுரிமை, வாக்குரிமை என்பவற்றை பறித்த போது, தானும் ஒரு ஒடுக்கப்படும் இனத்தின் பிரதிநிதி என்பதை மறந்து சிங்கள தலைமைக்கு உடந்தையாக செயற்பட்டார். இங்கும் கொவி - வெள்ளாள கூட்டு மலையக மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் எதிராக செயற்படுவதைக் காண்கின்றோம்.

மலையக மக்களது குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டதை எதிர்த்து அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்து S.J.V செல்வநாயகம் தலைமையில் ஒரு குழு வெளியேறி தமிழரசு கட்சியை ஸ்தாபித்தது. இந்த குழுவிற்கு தலைமை தாங்கிய செல்வநாயகம் ஒரு கிறித்தவர் என்பது வெறும் தற்செயலல்ல. சைவ - வேளாள தலைமை நடப்பு ஒழுங்கைக் காப்பதற்கு எந்தவித துரோகத்தையும் இழைக்கத் தயாராக இருந்த நிலையில், சமூக ஜனநாயக இயக்கங்கள் மட்டுமன்றி, தாராண்மை ஜனநாயக, தேசியவாத இயக்கம் கூட இந்த சைவ - வேளாள ஆதிக்க சக்திகளுக்கு வெளியிலிருந்து தான் தோன்றுவது சாத்தியமாகியது. இப்படியாக செல்வநாயகம் தலைமையில் ஒரு மாற்று அமைப்பொன்று தமிழ் மக்கள் முன்பு தோன்றியதானது சைவ-வேளாள சக்திகளுக்கு பெரும் சவாலாக அமைந்தது. எனவே இதனை முறியடிக்க வழமை போல சைவ வேளாள சித்தாந்தத்தை துணைக் கழைத்தது. செல்வநாயகம் கிறித்தவர் எனவும், எனவே அவர் அசல் தமிழர் அல்ல என்றும் கூட வாதிட்டனர். ஆயினும் தமிழரசுக் கட்சியின் முன்னோடித் தலைவர்களாக இருந்த, சைவ - வேளாள பிரிவின் ஜனநாயகப் பிரிவுகளைச் சேர்ந்த வன்னிய சிங்கம் போன்றோர் இந்த குற்றச்சாட்டுக்களை தாமே முன்னின்று எதிர் கொண்டமையால் மேற்படி குற்றச்சாட்டுக்கள் தமிழரசுக் கட்சியை முறியடிக்க உதவவில்லை. தமிழரசுக் கட்சி சமூகத்தில் சைவ வேளாள



படிப்பகம்

www.padippakam.com

பிரிவின் இடைநிலை சக்திகளான அரச ஊழியர்கள், ஆசிரியர்களையும், அத்துடன் மீனவர்கள், கிறித்தவர்கள் போன்றவர்களையும் பெருமளவில் அணிதிரட்டி, தேசிய ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டங்களை தீவிரமாக முன்னெடுத்துப் படிபடியாக ஜி.ஜி. இன் தலைமையிலான சைவ - வேளாள சக்திகளின் தலைமையை முறியடித்து தமிழ்மக்களின் அரசியல் தலைமையை கையகப்படுத்திக் கொண்டது. மோசமான சாதிய வெறியர்களான சைவ - வேளாள பிரிவினர் கொங்கிரஸ்சின் ஆதரவாளர்களாகவே நீண்ட காலம் இருந்து வந்தார்கள்.

தமிழரசுக் கட்சி இப்படியாக அரசியற் தளத்தில் சைவ - வேளாள சக்திகளின் தலைமையை முறியடித்தாலும் கூட, அந்த அமைப்பானது யாழ், சைவ, வேளாள, ஆணாதிக்க சித்தாந்தத்திற்கு எதிராக தீவிரமாக போராடவில்லை. இவர்களும் இந்த சித்தாந்த செல்வாக்கிற்கு உட்பட்டே யிருந்தனர். இதனால் சாதிய பிரச்சனைகளில் தீவிரமான நிலைப்பாடுகளை மேற்கொள்ளாது வெறும் சீர்திருத்த நடவடிக்கைகளுடன் நின்று விட்டனர். தாழ்த்தப்பட்ட மக்கள் தீவிரமாக போராடிய போது அதற்கெதிராக குரல் கொடுத்தனர். முஸ்லீம் மக்களைப் பொறுத்த வரையிலும் சைவ வேளாள சித்தாந்தத்தின் அதே நிலைப்பாடுகளே தொடர்ந்தன. தேர்தலில் முஸ்லீம் வாக்குகளை பெறும் தந்திரத்துடன் தமிழ் பேசும் மக்கள், இஸ்லாமியத் தமிழர் எனக் கூறிக் கொண்டாலும் உள்ளுர முஸ்லீம் விரோத உணர்வு களைக் கொண்டிருக்கவே செய்தனர். குறிப்பாக தமது கட்சி சார்பாக தேர்தலில் போட்டியிட்டு வென்ற முஸ்லீம் பிரதிநிதிகள் ஆளும் கட்சிக்குத் தாவிய போது "முஸ்லீம்கள் தொப்பி புரட்டிகள்" என மேடைகளில் பேசத் தயங்கவில்லை. கிழக்கு வன்னி போன்ற பிரதேசங்களுக்கு ஓரளவு முக்கியத்துவம் அளித்தாலும் இவர்கள் யாழ் மையவாதத்திலிருந்து முற்றிலும் விடுபட்டவர்களாக இல்லை. தலைமையிடம் காணப்பட்ட யாழ்மையவாதம் கிழக்கிலும் வன்னியிலும் கட்சியுள் அடிக்கடி சர்ச்சைகளை தோற்றுவித்ததுடன், யூ.என்.பி., எஸ்.எல்.எப்.பி கட்சிகளில் செயற்பட்ட தமிழர்கள் யாழ் எதிர்ப்பு வாதத்துடன் செயற்படுவதற்கான ஒரு வெளியை இது ஏற்படுத்திக் கொடுத்தது.

ஜி.ஜி. யும் செல்வநாயகமும் மோதிக் கொள்ள நேர்ந்த ஒரு சம்பவம் மிகவும் சுவாரஸ்யமானது. தமிழ் மக்களுக்கு ஒரு பல்கலைகழகம் வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாகவே தமிழ் மக்களால் எழுப்பப்பட்டு வந்தது. ஒரு கட்டத்தில் டட்லி. சேனநாயக்க தமிழர்களுக்கென ஒரு பல்கலைக்கழகம் அமைக்க உடன்பட்டார். அது எவ்வாறு அமைய வேண்டும் என தமிழ் பிரதிநிதிகளைக் கேட்டார். ஒரு இந்துப் பல்கலைகழகத்தை யாழ்ப்பாணத்தில் அமைக்கும்படி ஜி.ஜி. கேட்டார். செல்வநாயகமோ, ஒரு தமிழ் பல்கலைகழகத்தை திருகோணமலையில் அமைக்கும்படி கேட்டார். இங்கு ஜி.ஜி. யாழ்மையவாதம், சைவசித்தாந்தம் என்பவற்றின் நலன்களை பிரதிநிதித்துவம் செய்வதையும், செல்வநாயகம் பொதுவில் தமிழ் மக்களின் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்வதையும் காண்கிறோம். இந்த முரண்பாடு தீர்க்கப்பட முடியாமல் போகவே தமிழ் பல்கலைகழகம் பற்றிய பிரச்சனை அப்படியே கிடப்பில் போடப்பட்டது.

அரசியல் தலைமைகள் பிரச்சனையை இத்துடன் கைவிட்டாலும் தமிழ் தேசத்தின் தேசிய, ஜனநாயக உணர்வுள்ள சில நிபுணத்துவதுறை சார்ந்தவர்கள் **"தமிழ் பல்கலைகழக இயக்கம்"** ஒன்றை ஏற்படுத்தி உடனடியாகவே செயற்படத் தொடங்கினர். இவர்கள் திருகோணமலையில் பல்கலைகழகத்திற்கென ஒரு காணியை வாங்கி அதில் கொட்டில்களை அமைத்து செயற்படத் தொடங்கினர். இது படிப்படியே பல்கலைக்கழகமாக உருப்பெறும் என அவர்கள் நம்பினர். ஆனால், இந்த முயற்சி வெற்றி பெறவில்லை. இன்று வரையில் இந்த இயக்கத்தின் பெயரில் திருகோணமலையில் ஒரு பண்ணை செயற்பட்டு வருகின்றது. இந்த தமிழ் பல்கலைகழகத்தின் இயக்கத்தின் முன்னோடிகள் சிலருள் எஸ்.ஏ. டேவிட் என்பவரும் ஒருவர். இவர் 1958 இலேயே தனியான ஒரு நாட்டை அமைக்க வேண்டும் என்ற கனவுடன், அதற்கு ஒரு முன்மாதிரியாக இஸ்ரேலை கருதி இஸ்ரேல் நாட்டை பார்த்து வர வடிவேற்கரசனுடன் இஸ்ரேல் சென்று வந்தவர். பின்பு காந்திய அமைப்பிலும், கழகத்திலும் நேரடியாகவே செயற்பட்டவர்.

1973 இல் தமிழ் மக்களுக்கென ஒரு பல்கலைகழகம் அமைக்கப்பட்டது. அது யாழ்ப்பாணத்திலேயே அமைக்கப் பட்டது. இது ஜி.ஜி. கோரியது போல இந்துப்பல்கலைக் கழகமாக அல்லாமல் பொதுவில் தமிழ் பல்கலைகழகமாகவே அமைந்தது. எனினும் இதன் Emblem வரையப்பட்ட போது, அதில் ஒரு குத்துவிளக்கும், "நந்தியும்" காட்டப்பட்டது. குத்துவிளக்கு பொதுவில் தமிழ் கலாச்சாரத்தின் குறியீடாகக் கொள்ளப்பட்டாலும், "நந்தி"என்பது திட்டவட்டமான ஒரு இந்துக் குறியீடே. இந்த Emblem ஐ வடிவமைப்பதில் யாழ்பல்கலைக்கழகத்தின் முதலாவது தலைவரான கைலாசபதி அவர்களது கருத்துக்களும் பெறப்பட்டன. கைலாசபதி அவர்கள் ஒரு சிறந்த முற்போக்கு சிந்தனையாளர் என்பது உண்மைதான். ஆனால், அவர் தமிழ் கலாச்சாரத்தை இந்துக் கலாச்சாரமாக இனங்காணும் தவறை இங்கு இழைத்துள்ளார். சைவ சித்தாந்தம் எந்தளவிற்கு அதன் எதிர்நிலையில் நின்றவர்கள் மீதும் செல்வாக்கு செலுத்தி யுள்ளது என்பதை இங்கு காணமுடிகிறது. இந்த Emblem தொடர்பான பிரச்சனையுடன், இன்றுவரை பல்கலைக்கழக செனட்டில் தொடரும் சைவ வேளாள ஆதிக்கத்தையும் எடுத்து நோக்கினால் இறுதி ஆய்வில் யாழ், சைவ, வேளாள ஆதிக்க சக்திகளின் கரங்களையே பல்கலைகழகம் சென்றடைந்தது என்ற உண்மையை புரிந்து கொள்ள முடியும்.

தமிழ் தேசத்துள் எழுந்த அரசியல் இயக்கங்கள் சைவ, வேளாள சக்திகளது சித்தாந்த பிடியில் இருந்து விடுபட்டனவாக இல்லாமையினால், தாழ்த்தப்பட்டவர்கள் இந்த இயக்கங்களுடன் தம்மை இனங்காண்பதற்கான வழி முறைகள் எதுவும் அங்கு இருக்கவில்லை. இதனால் தேசியவாத இயக்கத்தில் இவர்கள் பெரிதும் ஈர்க்கப்படாதவர்களாகவே இருந்தனர். தாழ்த்தப்பட்ட மக்கள் இவ்விதமாக தேசியவாத இயக்கத்திலிருந்து அந்நியப்பட்டிருந்த நிலை காரணமாக சிங்கள இனவாத சக்திகளின் கைக்கூலிகள் இந்த நிலைமையை பயன்படுத்தி தமது செயற்பாட்டிற்கான ஒரு வெளியை இந்த மக்கள் மத்தியில் பெற முடிந்தது. துரையப்பா தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் ஓரளவு ஆதரவை திரட்ட முடிந்தது. யூ.என்.பி அமைப்பாளரான பொன்ராசா செயற்பட்டதும் இந்த வகைப்பட்டதே. ஆயினும் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் விழிப்புணர்வு பெற்ற பகுதியினர் தம்மை இடதுசாரி அரசியல் கட்சிகளுடன் - குறிப்பாக சன்முகதாசன் தலைமையிலான மாவோயிச கட்சியுடன் - இனங்கண்டனர். இக்கட்சியின் தலைமையில், ஆலயபிரவேசம், தேனீர்கடை பிரவேசம் போன்ற போராட்டங்களை நடாத்தி ஓரளவு வெற்றியும் பெற்றனர். இந்தப் போராட்டங்கள் ஆயுதபிரயோகம், தீவைப்பு என்றளவிற்கு தீவிரமானதாக இருந்தது. இந்தப் போராட்டங்களில் தமிழரசுக் கட்சி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விரோதமாகவே இருந்தது.

முஸ்லீம் மக்கள் விடயத்திலும் தமிழரசுக் கட்சி மிகவும் சந்தர்ப்பவாதமாகவே நடந்து கொண்டது. செல்வநாயகத்தின் கருத்துகளில் முஸ்லீம்கள் பற்றிய தீவிர அக்கறைகள் அவ்வப்போது வெளிப்பட்டாலும், ஆரம்பத்திலிருந்தே இவர்கள் சைவ - வேளாள சித்தாந்தத்துடன் கணக்குத் தீர்த்துக் கொள்ளாமையால், முஸலீம் மக்கள் தொடர்பான தப்பெண்ணங்களும் இவர்களிடத்தில் காணப்படவே செய்தது. தமிழரசுக் கட்சி முஸ்லீம்களை அணுகும் போது, அம்மக்களது உணர்வுகள், பிரச்சனைகளை இதயசுத்தியுடன் புரிந்து கொண்டு,



படிப்பகம்

www.padippakam.com

அம் மக்களுடன் ஒரு விரிவான அரசியல் நெருக்கத்தை உருவாக்க முனையாமல், வெறும் தேர்தல் வெற்றிகளை நோககமாகக் கொண்டே அணுகியது. இதனால் முஸ்லீம் மக்களது நியாயமான கோரிக்கைகளை தமது இலக்குகளில் உள்ளடக்குதல், முஸ்லிம் மக்கள் மத்தியிலும் தீவிரமாக அரசியல் பணியாற்றுதல் என்பவற்றிக்குப் பதிலாக, தேர்தலில் யாரை நிறுத்தினால் எவ்வளவு வாக்குகள் கிடைக்கும் என்ற கணக்கு மட்டுமே பார்த்தனர். இந்த சர்ந்தர்ப்பவாத அரசியலின் விளைவு, இன்னும் அதிக நன்மையடையும் சர்ந்தப்பம் கிடைத்த போது இவர்களின் முஸ்லீம் பிரதிநிதிகள் ஆளுங்கட்சிக்குத் தாவினர். தமிழரசுக்கட்சி தனது அரசியல் தவறுகளை திருத்திக் கொள்ளாமல், முஸ்லீம் விரோத உணர்வாக இதனை வெளிப்படுத்தியது. இதனால் ஏற்கனவே தமிழ் மக்கள் மத்தியில் சைவ - வேளாள சித்தாந்தம் பரப்பியிருந்த முஸ்லீம் விரோத தப்பெண்ணங்களை தானும் தன் பங்கிற்கு மேலும் அதிகரிக்க உதவியது.

முஸ்லீம் மக்கள் சைவ வேளாள சக்திகளுடன் ஏற்கனவே நடைபெற்றிருந்த மோதல்களையும் மீறி, பொதுமொழி, பொதுப் பிரதேசம், பொதுவான சில கலாச்சார அம்சங்கள், சிங்கள இனவாத ஒடுக்கு முறைகளை பொதுவாக முகங்கொடுத்தல். . . . இது போன்ற பல விடயங்களில் காணப்பட்ட ஒற்றுமைகள் காரணமாக, தமிழ் மக்களது தேசிய எழுச்சியின் பால் அனுதாபம் கொண்டிருந்தனர். இந்த அனுதாபமானது படிப்படியே ஆதரவாகவும், இணைவாகவும் வென்றெடுக்கப்பட்டிருக்கக் கூடியவையே. முஸ்லீம் மக்கள் மத்தியிலிருந்து தமிழரசுக் கட்சியின் போராட்டங்களுக்குக் குறிப்பிடத்தக்க ஆதரவும் கிடைத்தே வந்தது. ஒரு சில முஸ்லீம் இளைஞர்கள் தமிழரசுக் கட்சியின் போராட்டங்களில் பங்கு பற்றி சிறை சென்றுமிருந்தனர். ஆனால் தமிழரசுக் கட்சியில் ஆழமாக இருந்த சைவ - வேளாள சித்தாந்தத்தின் தாக்கங்களும், அதன் சர்ந்தர்ப்பவாத அரசியலும், இதற்கு இடம் கொடுக்கவில்லை. அத்தோடு தமிழ் தேசியவாதிகள் எழுப்பிய "சைவமும் தமிழும்" கோஷம் முஸ்லீம்களைப் பொருத்த வரையில் மிகவும் எதிர்மறையான விளைவுகளையே கொடுத்தன. இப்படியான செயற்பாடுகள் மூலம் தமிழ் மக்களும் முஸ்லீம் மக்களும் இணைந்து செயற்படும் நிலைமைகள் கைகூடாமல் போனதுடன், இந்த இணக்கமான மனநிலை மேலும் சிதைக்கப்பட்டது. பிற்காலத்தில் தமிழ் தேசியவாத சக்திகள் இழைத்த தவறுகள் முஸ்லீம் மக்களை மேலும் விலகச் செய்து தனியான ஒரு தேசமாக தம்மை அடையாளப்படுத்தும் நிலையைத் தோற்றுவித்தது.

1947 இல் உருவான தமிழரசுக்கட்சி தனது தேசியவாத இயக்கத்தை படிப்படியே முன்னெடுத்தது. 1956 இல் அரச கரும மொழிச் சட்டத்தை அடுத்தும் 1960 களில் சத்தியாக்கிரக இயக்கமாகவும் தீவிரமுற்று 70களில் விடுதலை அமைப்புக்களின் தோற்றத்திற்கும் வழிசமைத்துக் கொடுத்தது. விடுதலை அமைப்புகளின் செயற்பாடுகளையும் அதற்கூடாக இன்றைய நிலையையும் புரிந்து கொள்வதாயின் இன்னுமொரு கோட்பாட்டுப் பிரச்சனையையும் நாம் தீர்த்தாக வேண்டியுள்ளது. "உதிரிகள்" பற்றிய பிரச்சனையே இதுவாகும்.

படிப்பகம்